99.

புதுமலர் 13

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATH
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANE

பூங்கொடி

031.3

(சிறு கதைகள்)

0.3.78

PRESENTED BY:
V. PR. PL. M.
[redacted]
PAGANERI

5440

ஆர். திருஞானசம்பந்தம்
கே. விஜயராகவன்

Y. M. C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

புதுமலர் நிலையம்
கோயமுத்தூர்

[பதிப்புரிமை] [விலை ரூ. 2/-

முதற்பதிப்பு: டிசம்பர், 1944

ஆர். திருஞானசம்பந்தம்
எழுதியது

தங்கம்மா	1
கன்னிப்பெண்	13
வீணுகானம்	24
அமிர்தமும் விஷமும்	35
இந்துமதி	46

கே. விஜயராகவன்
எழுதியது

பூங்கொடி	62
கலியாணக் கதை	68
எதிரொலி	77
கட்டை வண்டி	89
கல்யாணியின் கனவு	93
கொடியும் பூவும்	106
இதய தாகம்	119
சுந்தரி	130

P. S. G. தொழிற்பள்ளி அச்சு நிலையம்,
பூளைமேடு, கோவை.

தங்கம்மா

நல்லசாமிக் கவுண்டரைப் பார்ப்பதென்றால் எனக்கு எப்போதுமே அளவற்ற மகிழ்ச்சி ஏற்படுவது வழக்கம். வேறு யாரிடத்தில் பேசிக்கொண்டிருந்தாலும் அத்தனை உற்சாகமும், குதூகலமும் ஏன் ஏற்படுவதில்லை என்பதைப் பற்றி நானும் பலதரம் யோசித்திருக்கிறேன். ஆனால் நாளது வரை அந்தச் சந்தேகம் தீர்ந்தபாடில்லை. அதென்னவோ கவுண்டரைத் தூரத்தில் கண்டாலே ஒரு உவகை உள்ளத்தில் பிறக்கிறது. அவரோடு பேசிக்கொண்டிருந்தால் நேரம் போவதே தெரிவதில்லை. இத்தனைக்கும் அவர் ஒரு எம். ஏ. யோ அல்லது பி. ஏ. ஹானர்ஸ்ஸோ அல்ல. திண்ணைப் பள்ளிக்கூட வாத்தியாரோடு தகராறு பண்ணிக்கொண்டு, காடு காடாக ஒளிந்து திரிந்து; எப்படியோ கையெழுத்து மட்டும்தான் போடக் கற்றுக்கொண்டார். இப்போது தன்னை ஒரு தற்குறி என்று சொல்லிக்கொள்ளத் தயங்குவதில்லை! "இந்தக் கை நாட்டுக்கு என்ன அப்புனு தெரியும்? நீ எதாச்சும் சொன்னாக் கேப்பமிண்ணு இருந்தா, எம் வாயைப் புடுங்கி அலக்காட்றயே" என்று சிரித்துக்கொண்டே சொல்லுவார். ஆனால் எனக்கென்னவோ அவர் பேச்சில் தனி இன்பம் இருப்பதாகவே பட்டது. அவர் பேசிக்கொண்டிருந்தால் விடிய விடியக் கேட்டுக்கொண்டே இருக்கலாம் என்று நான் சொல்வேன்.

நல்லசாமிக் கவுண்டர் இதைக்கேட்டு என்ன எண்ணினார் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் ஸ்ரீமதி பார்வதி பி. ஏ. க்கு கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை என்பது எனக்கு ரொம்ப நன்றாகத் தெரியும். ஸ்ரீமதி பார்வதி பி. ஏ. பலதரம் என்னிடம் இதைப் பற்றி

வெளிப்படையாகச் சொல்லியிருக்கிருள். மனதிற்கு மயக்கம் தரும் மாலை வேளைகளையும், அருமையான நிலா இரவுகளையும், அமைதியான காலை நேரங்களை யும் கவுண்டரோடு பேசிப் பேசியே பாழ்படுத்தி விடு கிறேன் என்பது ஸ்ரீமதி பார்வதி பி.ஏ.யின் நினைப்பு. சரிதான், இந்தப் பார்வதியோடு பி.ஏ.யையும் ஏன் சேர்த்துக்கொண்டே வருகிறேன் என்ருல் ஏ.பி.ஸி.டி. தெரிந்த பையன் கூட நல்லசாமிக் கவுண்டரைப் போன்ற 'கைநாட்டு'களோடு பேசுவது ரொம்ப அவ மானம் என்பது என் மனைவி ஸ்ரீமதி பார்வதி பி.ஏ. யின் ஆணித்தரமான அபிப்பிராயம்! ஆனால் எனக் கல்லவா தெரியும் கவுண்டரின் அருமை பெருமை, அரும்பாடு பட்டு பி.ஏ. பட்டத்தைப் பெற்றுவிட்ட பார்வதிக்கு அது தெரியவா போகிறது.

(2)

'பொன் விளையும் பூமி' என்று சொல்வது நல்ல சாமிக் கவுண்டர் தோட்டத்துக்குத் தான் நூற்றுக்கு நூறு பொருந்தும். தங்கம் போட்டால் தங்கம் எடுக் கலாம். அவர் காட்டு மண் வாக்கே அப்படி. அதோடு நல்ல கைராசியும் அவருக்கு உண்டு. அவர் 'தொட்டது துலங்கும், வைத்தது விளங்கும்' என்பதில் எல்லோரு க்குமே நம்பிக்கை உண்டு.

முறுக்கி விட்ட மீசையையும் இயற்கையாகவே சிவந்த அவர் கண்களையும் பார்த்தால், ரொம்ப முன் கோபி போலத் தோன்றும். சில சமயங்களில் பட படப்பாகவும் பேசிவிடுவார். நீக்குப் போக்குத்தெரி யாதவனே என்று சந்தேகம்கூட வரும். ஆனால் பெரிய விரோதியிடம் கூட, "அண்ணு, என்னமோ ஒளறு னதை மனசிலே வைச்சுக்காதீங்க. இண்ணைக்கு கட் டாயம் வளவுக்கு வந்து கை நனைக்காமே போகப்

படாது. ஒரு வாய் நீங்க உங்காமே போனா எம் மனசு கேக்காது" என்பார். அந்த அன்பு அழைப்பை மீற யாருக்குமே துணிவு வராது.

இப்பேர்ப்பட்ட நல்ல மனிதனை ஒரு தீராக்குறை சதா வாட்டிக் கொண்டே இருந்தது. உண்ணும் போதும் உறங்கும் போதும் அவரை அந்த வேதனை கொஞ்சம் கொஞ்சமாக அரித்துத் தின்று கொண்டே வந்தது. அடடா என்ன பரிதாபம்!

'பாழும் கடவுளுக்குக் கண்ணில்லை' என்று தூற்றுவதைக் கேட்கிறோம்! அப்போதெல்லாம் நாம் என்ன நினைக்கிறோம்? 'கடவுளாவது, கண்ணற்ற விதமாக நடப்பதாவது! எல்லாம் நாமாகச் செய்து கொண்டு வீண் பழியைக் கடவுள் மேல் போடுகிறோம்' என்று தான் எண்ணுகிறோம். ஆனால், நல்லசாமிக் கவுண்டருக்கு ஏற்பட்ட துர்பாக்கியத்தை நினைத்தால் நம்மைப்படைத்த பிரமனிடமே அசாத்தியக்கோபம் வரத்தான் செய்கிறது. பாவம், தன்னுடைய மகளைப் பற்றி நினைக்கும் தோறும்கவுண்டர் உள்ளம் கலங்கும்.

கவுண்டருக்கு ஒரே ஒரு செல்ல மகள். வயசு பதினாலுதான் ஆகிறது. ஆனால் அழகு அவளிடம் பரிபூரணமாகப் பூத்திருந்தது. 'கரு கரு' என்று இடைவரை நீண்டு தொங்கும் கூந்தலைக் கொண்டை போட்டு மல்லிகையோ, ரோஜாவோ கொத்தோடு சொருகியிருப்பாள். வரிந்து கட்டிய மாராப்புச் சேலையோடு திடுதிடென்று தான் எந்தக் காரியத்தையும் செய்வாள். ஒப்புக்குச் செய்யும் வேலை யொன்றும் அவளுக்குப் பிடிக்காது. 'எங்க தங்காயா இல்லாட்டி எங்களுக்குப் பொழுதே போவாது' என்று ஊர்ப் பெண்கள் எல்லாரும் சொல்லுவார்கள்.

அனைவருடைய உள்ளத்தையும் கொள்ளை கொண்டிருந்தாள் தங்கம்மா. நொடிக்கு நூறுதரம் கவுண்டர், "தங்கம்மா! தங்கம்மா!!" என்று கூப்பிட்டுக் கொண்டேதான் இருப்பார். சுண்ணும்பு முதல் கொண்டு, தங்கத்தின் கையில் வாங்கிக் கொண்டால் தான் கவுண்டருக்குத் திருப்தியாயிருக்கும்.

ஆனல் தங்கம், தன் அருமைத் தந்தையிடமோ மற்ற ஆருயிர்த் தோழிகளிடமோ ஒன்றும் பேச முடியாதவளாயிருந்தாள். அவள் மனத்தை நீண்டு விரிந்த கருங்கண்கள் வழியாகத் தான் காட்ட முடிந்ததே யொழிய வாய் திறந்து அவளால் ஒன்றும் சொல்ல முடியாது. இதனல் பெற்றமனம் மட்டுந்தானு தவித்துக்கொண்டிருந்தது?

மத்தியான வேளைகளில் வீட்டிலிருக்க எனக்குப் பிடிக்காது. அதுவும் வெயிலின் வேகம் ஏற ஏற என்னவோ மாதிரி இருக்கும். நல்லசாமிக் கவுண்டர் தோட்டத்துச் சாலையோரம் ஒரு கருவேலந்தோப்பு உண்டு. மரங்கள் குடைபிடித்தாற் போல குவிந்திருக்கும். அதன் நிழலில் பசும் தென்னந்தடுக்கை விரித்து உட்கார்ந்து கொள்வேன். படுத்தாலும் சுகமாகத் தூக்கம் வந்துவிடும்.

சாதாரணமாக அந்த வேளையில்தான் கவுண்டருக்கும் ஓய்வு. என்னென்னவோ பேசிக் கொண்டிருந்தாலும் கடைசியில் அவருடைய பெண்ணின் விஷயத்தில் தான் போய் நிற்கும் பேச்சு.

'என்னத்தை அப்புனு பண்றது. நீ எரக்கப்பட்டு என்னப்பா ஆவும்? நான் கும்பிட்ட சாமிக்ளுக்கு அந்த எரக்கம் வல்லையே! நாம் போவாத கோயிலுண்டா?' என்று கவுண்டர் கேட்கும்போது நம்மை அறியாமலேயே துக்கம் உண்டாகும். தங்காயாளைச் சாதாரண

மாகப் பார்க்கிறவர்கள் அவள் வாயற்றவள் என்பதைக்கண்டு கொள்ளவே முடியாது. எப்போதும் சிரித்த முகத்துடன் தான் இருப்பாள். அவள் என்னைக் காணும் போதெல்லாம் வாய் நிறையச் சிரிப்புடன் தான் வரவேற்பாள். அவள் அழகிய கண்கள் என்னென்னத்தையோ பிரதி பலிக்கும். ஆனால், பாவம் பேச்சு ஒன்றும் தான் வெளிவராதே.

"அப்பா தம்பி" என்று கவுண்டர் உரிமை பாராட்டித்தான் எப்போதும் என்னைக் கூப்பிடுவார். ஊரில் எங்கள் இருவர் குடும்பத்திற்கும் ரொம்பத் தொடர்பு உண்டு. ஆகையால் வீட்டுப் பெண்களும் முறை சொல்லித்தான் அழைப்பார்கள்.

"இதோ உங்க அண்ணன் வந்திட்டானே. நீ சும்மா நிக்கறயே தங்கம்" என்று கவுண்டர் சொல்லி விடவேண்டியதுதான் பாக்கி; உடனே தங்கம் ஓடிப் போய் நீர்மோரோ பானகமோ கொண்டு வந்து விடுவாள்.

தங்கம் தான் எங்கள் மனதை நன்கு தெரிந்து கொண்டாளே தவிர, நாங்கள் யாருமே அவள் உள்ளத்தைத் துளிக்கூட தெரிந்து கொள்ளவில்லை. தெரிந்திருந்தால் கவுண்டர் அப்பேர்ப்பட்ட காரியத்தைச் செய்யத் துணிந்திருப்பாரா?

எனக்கு முதலில் அதைக் கேட்டதும் நம்பவே முடியவில்லை. "ஐயோ நம்ம நல்லசாமிக் கவுண்டரா இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்!" என்று திகைத்துப் போனேன். "என்ன அப்பா பண்றது? விருமத்தி புடிச்சாப்பலே நிக்கறயே. சித்தெ உக்காந்துதான் சொல்றதைக் கேளு. பொண்ணைப் பொறந்தா கண்ணாலம் பண்ணாமே ஊட்டோடே வெச்சுக்க முடியுமா? அது

போவட்டும். பண்ணுடி பண்ணயம் என்ன சிறிசா? நம்ம பக்கத்திலே இண்ணைக்கி அதை மீர்ர குடும்பம் ஒண்ணு சொல்லு?" என்ருர். 'அவர் குடும்பம் இருந்து பாழாய்ப்போச்சு' என்று நான் நினைத்துக்கொண்டேன். ஆனால் பணத்தை மட்டும் கவுண்டர் கருதுகிறவர் அல்லவே?

என்ன அடக்கியும் ஆத்திரம் அதிகரித்தது. "புண்ணுடி மகனுக்குத் தங்கத்தைக் கொடுக்கிறதைக் காட்டிலும், குளம் குட்டையிலே புள்ளையைப் புடிச்சுத் தள்ளி விடலாமே! இதைவிட அது எவ்வளவோ நல்லது" என்று கோபத்தை அடக்கிக் கொண்டு சொன்னேன்.

கவுண்டரும் என் வார்த்தை வேகத்தைப் புரிந்து கொண்டார் என்றே நினைக்கிறேன். அதனுல்த்தான் கொஞ்ச நேரம் பேச்சு மூச்சில்லாமல் அசைவற்று நின்று கொண்டிருந்தார். மனசும் குமுறிக்கொண்டுதான் இருந்திருக்கவேணும்.

நினைக்க நினைக்க எனக்கு எரிச்சல் அதிகமாகிக் கொண்டே வந்தது. தாமரைப் பூவைப் பறித்து தரையில் போட்டதைப் போலல்லவா இருக்கிறது இது!

ஊர்ப் பண்ணுடி மகனைப் பற்றி அனைவருக்கும் தெரியும். குணத்தை ஒருவரும் குறை சொல்லவில்லை. அவனுக்கு இரண்டு கண்ணும் குருடு. அந்தக் கபோதிக்கா தங்கத்தைப் பலி கொடுப்பது! யார்தான் இதற்குச் சம்மதிப்பார்கள்?

(3)

மறுநாட் காலையில் கவுண்டரிடம் நான் கேட்ட செய்தி என்னை எங்கோ ஒரு மாய லோகத்துக்கே தூக்கிக்

கொண்டு போய்விட்டது. "அடேயப்பா, அதிசய— அற்புதச் சம்பவங்களுக்கு உலகில் ஒரு எல்லையே கிடையாது போலிருக்கிறது. இன்னும் என்னென்ன விந்தைகளெல்லாம் நடைபெறுமோ" என்று ஆச்சரியத்தில் முழுகி விட்டேன்.

தங்கம் பிறவியிலே ஊமை இல்லையாம். ஐந்து வயதுக்குழந்தையாக இருக்கையில் இட்டேறி முக்கில் மாலை மசக்கலில் விளையாடிக் கொண்டிருந்தபோது 'காத்து'ச் சூழ்ந்து கொண்டதாம். அந்தக் 'காத்துக் கெரகம்' தான் குழந்தை வாய் அடைக்கும்படி செய்து விட்டதாம். கவுண்டரும் தன்னாலான எல்லாக் காரியத்தையும் செய்து பார்த்தும், தங்கத்தின் வாய் அடைத்தே விட்டதாம். செங்காட்டு வலசு சின்னானும், "இது மருந்துக்கு ஒண்ணும் குணமாகாதுங்க. ஆத்தா கோபத்துக்கு நான் எந்தத் தழையைக் கசக்கிக் குடுத்தாலும் அதெல்லாம் கேக்காதுங்க" என்று தீர்மானமாகச் சொல்லி விட்டதால், வைத்தியத்தைப் பற்றி பிறகு கவுண்டர் துளிக்கூட சிந்திக்கவே இல்லையாம்!

வேறு ஒன்றும் பேசாமல் நான் வந்து விட்டது எனக்குச் சற்றும் பிடிக்க வில்லைதான். இருந்தாலும் என்ன பண்ணுவது? கலியாணக் காரியங்கள் என் கண்ணை உறுத்திக்கொண்டே இருந்தது. பச்சைப் பந்தல் சொல்ல முடியாத பதை பதைப்பை ஏற்படுத்திக் கொண்டே இருந்தது.

நேரம் ஆக ஆக என் மனசு ஏன் அப்படி அடித்துக் கொண்டது? என் கண்ணும் மனமும் ஏன் நிலை கொள்ள மாட்டேனென்கிறது?

தோட்டத்தின் கோடியிலே அழகிய முல்லைப் பந்தல் இருக்கிறது. பந்தல் ஓரமாகப் பசும் புல் மைதா

னம். மைதானத் தோரமாக இளம் சோளப்பயிர்களின் 'கம்' மென்ற மணம் நிறைந்திருந்தது.

அன்று அங்குபோனேன். கண்ணில் தங்கம் படவே இல்லை. வீட்டிற்குள்ளே தான் இருந்தாளா? ஆம். எங்கோ ஒரு மூலையில் வருங் காலத்தைப் பற்றிய கனவில் ஆழ்ந்திருப்பாள். என்னென்ன சிந்தனைகள் உள்ளத்தில் உருக் கொண்டு ஓடிற்றோ? ஐயோ, பாவம். இந்தப் பாழாய்ப் போன வீட்டிலே அவள் ஏன் பிறந்தாள்? இல்லை, இல்லை, இந்தத்தங்கமான மனிதருக்கு அந்தத் தங்கமான பெண் ஏன் பிறக்கவேண்டும்? பிறந்ததில் என்ன குற்றம்? கவுண்டர் இப்படிச் செய்யத் துணிந்து விட்டாரே.

விடிந்தால் கலியாணம்! உம். விடிந்தால். ஆம், விடியாமலே இருந்து விட்டால்? எந்த மகராசியோ விடியாமலே இருக்கச் சாபம் கொடுத்து விட்டாளே? அப்படி ஒரு அற்புதம் நடக்கலாகாதா? எத்தனையோ விசித்திரங்கள் நடை பெறுகிறதே, இந்த மாதிரி ஒரு சம்பவம் நடந்து தங்கத்தின் வாழ்வு தளிர்க்கலாகாதா? காட்டுக் கொடி போல அவளும் கட்டுத்தளையின்றி யதேச்சையாக இருப்பாளே. காலடி ஓசை கேட்டது. ஸ்ரீமதி பார்வதி பி.ஏ. சிரித்துக் கொண்டு வந்து நின்றாள்.

"சாயங்காலத்தில் அப்படியே வெளியே போய் உலாவாமல் என்ன இப்படி அசையாமல் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்களே" என்றாள்.

என் மனத்தின் அசைவு அவளுக்குத் தெரியவா போகிறது?

'எழுந்திருங்களேன், போகலாம்' என்றாள் பார்வதி.

"ஏனோ நடக்கப் பிடிக்கவில்லை"

"தங்கமும் கூட வருகிறேன் என்கிறாள்" என்றாள் அவள்.

"எங்கே?" என்று திடுக்கிட்டுக் கொண்டே சுற்று முற்றும் பார்த்தேன்.

"அவளிடமே கேட்டால்ச் சொல்வாளே"

எனக்குக் கோபம் வந்தது.

"விளையாட்டைப் புரிந்து கொள்ளாத மனிதர்களோடு நான் பேசுவதில்லை" என்றாள் பார்வதி.

"எல்லாச் சமயத்திலும் விளையாடிக் கொண்டிருப்பது சுத்தப் பைத்தியக்காரத்தனம்"

"இப்போது யாருக்குப் பைத்தியம் என்பது எனக்குச் சந்தேகமா யிருக்கிறது. எனக்கா அல்லது?"

"யாருக்கோ இருக்கட்டும். இப்போது நான் ஒன்றைப் பற்றியும் பேசப் பிரியப் படவில்லை"

"என்ன தங்கத்தைப் பற்றிக் கூடவா?"

நான் மௌனமாயிருந்தேன்.

பார்வதி கொஞ்சம் ஆச்சரியத்துடனே கேட்டாள் "ஆமாம், தங்கத்துக்குக் கலியாணமாமே. நல்ல பொருத்தம் தான்" என்று கூறிக் கேலிச் சிரிப்புடன் என்னைப் பார்த்தாள். பார்வதியை நான் துளியும் சலித்துக் கொள்ள வில்லை. 'பார்க்கும்' 'கிளப்பும்' டென்னிஸ் கோர்ட்டும் இல்லாத ஊரும் ஒரு ஊரா என்று எண்ணி விவாதிக்கும் பார்வதியிடம் பேசுவதில் பயனில்லை என்பது எனக்குத் தெரியும் அல்லவா?

ஆனால் கவுண்டரிடம் பேசிய பேச்சும் வீணாகி விட்டதே? எத்தனையோ அழகிய கற்பனை மாளிகை

கள் கட்டி மகிழ்ச்சி யடைந்து கொண்டிருந்தேன். தங்கத்துக்கு ஒரு தங்கமான கணவன் வருவான் ஊரே பார்த்து அதிசயிக்கும். ஆனால் அதிசயப் படுகிறவர்களே "பார்க்கப் போனால் இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? தங்கத்துக்கு தகுதியான கணவன் இந்த உலகில் ஏது?" என்றெல்லாம் சொல்வார்கள்.

அன்று காலையில் கவுண்டரிடம் கேட்டதற்குப் பிறகு இன்னும் வேறு வேறு திக்கில் என் சிந்தனைகள் சென்று கொண்டே இருந்தது.

அங்கொன்றும் இங்கொன்றுமாக கலந்திருந்த மேகங்கள் ஒன்று கூடிக் கொண்டே வந்தன. மழைக் காற்று லேசாக அடிக்கத் தொடங்கியது. இன்னும் சற்று நேரத்தில் பெரு மழை கொட்டும் என்பதற்கு அறிகுறி தெரிந்தது. மின்னல்கள் சுழிக்கவும் தொடங்கி விட்டது. வீட்டிற்குப் போக எழுந்தேன். பார்வதியும் பேசிக் கொண்டுதான் கூட வந்தாள். ஆனால் என்ன பேசிக் கொண்டிருந்தாள் என்பதொன்றும் எனக்குத் தெரியாது.

எதிர் பார்த்தபடி இரவில் பெரு மழை கொட்டத் தொடங்கி விட்டது. வெள்ளம் சோ வென இரைச்சலிட்டுச் சுழன்றோடிக் கொண்டிருப்பது என்னவோ ஒரு சோக கீதத்துக்குச் சுருதி கூட்டுவது போல் இருந்தது.

மழையோடு கலந்த பேரிடியின் முழக்கமும் காதைத் தொளைக்க ஆரம்பித்தது. ஏன் இந்த இடிகள்! இன்றைக்கு இயற்கைக்கு இத்தனை சீற்றம் ஏனோ?

ஆம். இயற்கைத் தேவிக்கே கொடுமையைப் பொறுக்க முடியவில்லை. வெள்ளத்தில் எல்லாமே

முழுகி ஆழ்ந்து உருத் தெரியாமல்ப் போகப் போகிறது. பசும் பந்தல் — தோட்டம், காடு — கவுண்டர் —தங்கம்—சே. சே. என்ன கொடூரக் கற்பனை இது! ஆனால்......ஆனால்......கல்யாணம் நடைபெருது! இது மட்டும் நிச்சயம். வருகிறவர்கள் யாரும் சரியான சமயத்தில் வந்து சேர முடியாது. முகூர்த்தம் எப்படியும் தடைப்பட்டே போகும். ஏற்பாடுகள் எல்லாம் இந்த வெள்ளக் காட்டில் எப்படி ஒழுங்காக நடைபெறும்? இதைத் தடுக்கத் தான் இந்த மழையும் இடியுமோ? யார் கண்டார்கள்?

கண் கூசும்படியான மின்னல் வெட்டியது. தங்கக் கொடிகள் வான வீதியில் புரண்டன. அடடா! வானம் வெடித்ததைப் போன்ற அந்தப் பேரிடி! ஐயோ! இவ்வளவு பக்கத்தில் கேட்கிறதே! எங்கே விழுந்ததோ?

காலையில் எழுந்து கவுண்டர் தோட்டத்துப் பக்கம் புறப்பட்டேன். அன்று கொஞ்சம் ‘தெம்பு’ வந்த மாதிரி இருந்தது. முதல் நாள் ஏற்பட்ட தாங்கல் பறந்தோடி விட்டது. ஒரு விதத்தில் கலியாணம் தடைப்பட்டது சற்று ஆறுதலாயிருந்தது.

ஆனால் கலியாணம் தடைபட்டுப் போயும் கவுண்டருடைய முகத்தில் புன்னகை தாண்டவ மாடுவதையும், அவர் வீட்டைச்சுற்றி மலர்ந்த முகத்தோடு பலர் கூடியிருப்பதைப் பார்க்கவும் எனக்கு ஆச்சரியமாயிருந்தது. சங்கதியைக் கேட்டவுடன், “ஐயா, கவுண்டரே, முதலில் இது பூலோகம் தானு என்பதைச் சொல்லுங்கள். இந்திரலோகம் சந்திர லோகம் அல்லவே” என்று என்னை நானே தெளிவு படுத்திக் கொண்டேன்.

இரவு கிடுகிடுக்கும்படி இடித்த பெருத்த இடி எங்கோ பக்கத்தில் பனை மரத்தில் விழுந்திருக்கிறது. அந்த பேரிடியைக் கேட்டுத் தங்கம் கலங்கிப் போய் விட்டாள். அவள் கலக்கம் எல்லோரையுமே ஆனந்தத்தில் ஆழ்த்துவதாகி விட்டது. பயத்தால் அடைத்துப் போயிருந்த வாய் மீண்டும் பயத்தினாலே பேசி விட்டது! 'அம்மா' என்று அவளையும் மீறிக் கத்தி விட்டாள். அப்புறம் தங்கம் பேசத் தொடங்கி விட்டாள். பிறகு விடியும் மட்டும் தங்கத்தை சும்மா விடவில்லை. இப்போதும் ஊர்ப் பெண்கள் அவள் வாயைக் கிளறிக் கொண்டு இருந்தார்கள்.

இந்தக் காட்சிகளைக் கண்டு அப்படியே மெய் மறந்து நின்றேன். உண்மையில் சொல்லப் போனால் என் வாய்தான் அடைத்துப் போய் விட்டது! இனி, தங்கத்தின் வாழ்க்கை? தங்கமே தான்!

கன்னிப்பெண்

ஒரு அழகியை, நமக்கு மிகவும் பிரியமான ஒரு அழகியைப் பற்றி நினைக்கும்போது மனதிலே எப்பேர்ப்பட்ட இன்பகரமான ஆனந்தம் ஊற்றெடுக்கிறது? அப்பேர்ப்பட்ட ஆனந்த வெள்ளம் என் உள்ளத்திலே பெருகிக் கொண்டிருந்தது. நான் நடந்து போய்க் கொண்டிருந்த ஒற்றையடிப் பாதை கல்லும் முள்ளும் கரடு முரடாயிருந்தாலும் பூவின் மேல் நடப்பதைப் போன்ற உணர்ச்சியே தான் எனக்குள் நிறைந்திருந்தது.

ஆச்சு, எங்கள் கிராமம் இன்னும் ஒரே ஒரு மைல் தான். அதோ, செல்லியாண்டியம்மன் கோவில். கோவில் கொடுமுடியும் தென்படுகிறது. அதைத் தாண்டினால் ஊர் முகப்பில் முன்னால் இருக்கிறது பெரிய வீடு. வீட்டின் வாயிலிலே என் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு சரஸ்வதி நின்றிருப்பாள் என்பதை எண்ணும் போது மகிழ்ச்சியால் துள்ளிக் குதிக்கலாம் போல் இருந்தது!

மூன்று வருஷம். அடேயப்பா! பட்டணத்தில் படிப்புக்காக கழித்த வருஷங்களை நினைத்தாலே எரிச்சல் வருகிறது. அதுவும் சரஸ்வதியைப்பிரிந்து வேண்டாத விஷயங்களோடு "மார்" அடித்துக் கொண்டிருப்ப தென்றால் யாருக்குத்தான் வயிற்றெரிச்சல் வராது?

பாழும் படிப்பு. சை. இப்போது அதையெல்லாம் ஏன் ஞாபகமூட்டிக் கொள்ள வேண்டும். தெவிட்டாத தேன் ததும்பும் காக்ஷிகள் கண் எதிரே தெரிகையில் அபத்தங்களைப்பற்றி இப்போது என்னத்திற்கு வீண் சர்ச்சை?

சாதாரணமாகவே காட்டுப் பாதைகளுக்கிடையே நடந்து செல்வதிலும், கையால் வேலியை ஒதுக்கி வழி பண்ணிக் கொண்டு போவதிலும் எனக்கு எப்போதுமே ஆசை அதிகம். அன்றையக் காலைப்பொழுது ரொம்பவும் ரஞ்சிதமா யிருந்தது. திராக்ஷை பச்சையாய் 'ஜிலு ஜிலு' என்று ராகி நாற்றுகள் அசைந்து கொண்டிருப்பதும், புதிதாக கொழுந்து விட்ட வேப்பம் பூக்கள் 'ஜம்' என்ற மணத்துடன் வழி நெடுக நிறைந்திருப்பதும் சுற்றுப்பக்க காடுகளிலே வெடித்திருந்த வெள்ளை வெளேரென்ற பருத்திகள் இளவெயிலில் மின்னிக் கொண்டிருப்பதும் பார்க்கப்பார்க்க ஒரே பரவசக்காட்சியாய் இருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக சரஸ்வதியின் எழில் வடிவம் தோன்றித் தோன்றி வித வித விந்தைக் கனவுகளைச் சிருஷ்டித்துக் கொண்டே யிருந்தது.

ஊரை விட்டு மூன்று வருஷங்களுக்கு முன் நான் புறப்பட்ட போது சரஸ்வதியும் கூடவே வந்து வழியனுப்பிய பாதைக்குப் பக்கத்தில் வந்ததும் ஏனோ என்னை யறியாமல் கால்கள் சங்கின. சற்று நேரம் அங்கு நிற்க வேண்டும் போல் தோன்றியது. அவள் தயங்கித் தயங்கி கலங்கிய கண்களுடன் தோட்டத்திற்கு சென்ற காட்சியை நினைவூட்டியதும் அவள் சென்ற திக்கை பார்த்தபடி வெறி பிடித்தவன் போல் நின்று விட்டேன்.

"என்ன தம்பி, இப்படி உட்டது உட்டமாதிரி பாக்கறே. அடையாளம் மாறிப்போச்சா?" என்ற குரல் கேட்கவும் திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தேன்.

பக்கத்துக்கிராம நாலைந்து நண்பர்களும், என் சொந்தக்காரர்களில் சிலரும் என் எதிரில் நின்று சிரித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வந்ததையே

நான் கவனிக்க வில்லை. சந்தன தாம்பூலத்தோடு கலியாணக் கோலத்தில் அவர்கள் காட்சியளித்ததைக் காணவும் சட்டென்று என்னைச் சமாளித்துக் கொண்டு பேச்சைத் தொடங்குவதற்கு ரொம்பவும் சௌகரிய மாய் இருந்தது.

"சரிதான், நல்ல சமயத்தில் நானும் வந்து சேர்ந்தேனென்று சொல்லுங்கள்" என்று சிரித்துக் கொண்டே சொன்னேன்.

"ஆமாம் அப்பா, நீ இப்ப வருவீண்ணு உங்க மாமன் கூட சொன்னாங்க. சரஸ்வதி ஊட்டிலும் நீ வருவாயீண்ணு பேசிக்கிட்டு இருந்தாங்க" என்றார் ஒருவர்.

"சரஸ்வதி" என்றதும் எனக்குத் 'திக்'கென்றது.

"யாருக்குக் கலியாணம்?" என்றேன், என் பதைப் பை வெளிக்கு காட்டாமல்.

"நம்ம சரஸ்வதிக்குத்தானப்பா"

"சரஸ்வதிக்குக் கலியாணம்!"

என் மனதிலே நூறாயிரம் எண்ணங்கள் எழுந் தன. என்ன, நான் கேட்டது நிஜந்தானா? சரஸ் வதிக்குக் கலியாணம். உம்........ சரஸ்வதி ஒத்துக் கொண்டாளா? ஆமாம், அவள் உடன் படாமலா சந்தன தாம்பூலத்துடன் விருந்தினர்கள் சாப்பிட்டு விட்டுப் போகிறார்கள்?

"சரி, போயிட்டு வருகிறீர்களா?" என்று அவர் களைத் தாட்டிவிட்டு ஊரை நோக்கி விரைவாக நடந் தேன்.

விரைவாக நடக்க வேண்டுமென்று மனம் விரும்பியதே தவிர கால்கள் பின்னிக் கொண்டன. நடை தளுங்கியது. வந்த வழியே திரும்பிப் போய் விடலாமா என்று ஒரு கணம் யோசித்தேன். ஆனல்...... ஏனே அப்படிச் செய்ய என்னல் முடியவில்லை.

எனக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது. யார் மேல்? அவள் பெற்றோரிடமா? அல்லது என் பெற்றோர்களிடமா? இல்லை என்னிடமேயா? தப்பு தப்பு, விதியினிடத்திலா?

இந்தச் சமயம் 'விதி பெரிதா? மதி பெரிதா?' என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் சக்தியை நான் இழந்து விட்டேன். உம், சரஸ்வதி நான் போகும் போது சொன்னள்: "மூன்று வருஷமானலென்ன? முப்பது வருஷமானலென்ன? உங்களை மறுபடியும் சந்திக்குமுன் சரியாகத் தூக்கங் கூட வராதே." அப்படி சரஸ்வதி சொன்னதெல்லாம் வெறும் வேஷம் தானு? அல்லது ஏதாவது நாவலில் கீவலில் படித்து விட்டு அப்படியே என்னிடம் பாடம் ஒப்பித்து விட்டாளா?

"சரஸ்வதி...நீ கூடவா அப்படி செய்தாய்?" இல்லை இல்லை, அவள் ஒருக்காலும் இந்த விவாகத்திற்கு உடன் பட்டிருக்கவே மாட்டாள். பின்னே? என் தகப்பனர். அவர் தான் முன்னமே பிடிவாதமாயிருந்தாரே? "நம்முடைய சொத்தென்ன காரியமென்ன, கணக்கென்ன. தராதரம் பார்க்காமல் எந்தக் காரியத்தையும் செய்யலாமா?" என்று என்னென்னமோ ஆக்ஷேபணைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார். அம்மாதான் தடுத்துச் சமாதானம் அடிக்கடி சொல்லி வந்தாள். அதெல்லாம் வெறும் 'ஓப்பு'க்குச் சொல்லியது என்பது இப்போதல்லவா தெரிகிறது? ஓஹோ!

இரண்டு பேருமாகச் சேர்ந்து தான் நாடகத்தை நடத்திஞர்களா? நடத்துகிறதா? முடித்து விட்டார்களே. சரி, இந்த முடிவுக்குத் தகுந்த பதிலே நான் அளித்து விடுகிறேன். கரியைத் தடவி விட வேண்டியது தான். உம்......அம்மா நொந்து கொள்வாள்.............அழுவாள். அழுது சாகட்டும்!

காலேக் காற்று ''ஜில்'' லென்று அடித்தது: மர நிழலில் அப்படியே நின்று விட்டேன். 'என்ன பண்ணுவது' என்று ஒன்றுமே தோன்றவில்லே. குளிரில் நடுங்கிக்கொண்டே ஒரு ஆட்டுக்குட்டி வேலியோரம் கிடந்த பூண்டு பொடிகளேக் கூட கடிக்கவில்லே. நான் பெருகி வரும் வியர்வையை அடிக்கடி துடைத்துக் கொள்ள வேண்டியிருந்தது.

கங்கையின் தண்ணென்ற புனலிலே ஆனந்தமாக நீராடிக்கொண்டு உல்லாசமாக மாந்தளிர்க் குளுமையிலே மூழ்கி முழுகி ஆனந்தத்தில் திளேத்துக் கொண்டிருந்தேனே. ஐயோ, திடீரென்று அக்கினியாற்றிலே யாரோ தூக்கி எறிந்து விட்டார்களே, இந்த வெப்பத்தைப் பொறுத்துக்கொள்வதைப்பற்றி எனக்கு கவலேயில்லே. ஆனுல் முன்னய குளிர்ச்சியைப்பற்றி இனிக் கற்பனே பண்ணக்கூட முடியாதே? இதற்கு முடிவே கிடையாதா?

மற்றவர்கள் எல்லோரையும்விட சரஸ்வதியிடம் தான் அதிகக் கோபம் வந்தது. ''கட்டிக்கொள்ள முடியாது'' என்று ஒரே யடியாக மறுத்து விடுவதற்கு என்ன? பலவந்தம்......பாழாய்ப்போன பலவந்தம் என்ன செய்துவிடும்? பிராணன்தான் போகட்டுமே? நான், அவள் கலியாணச் சங்கதியைக் கேட்டதைவிட மரணச் செய்தியைக்கேட்டிருந்தால் எவ்வளவோ மகிழ்ச்சி அடைந்திருப்பேன்.

அப்போதுதான் என்னுடைய பைத்தியக் காரத் தனம் எனக்குத்தெரிய ஆரம்பித்தது. இவளுக்கா கவா அழகும் குணமும் உள்ள எத்தனையோ அழகிகளை ஒதுக்கித்தள்ளிவிட்டு எல்லாவற்றையுமே பாழ்படுத் திக் கொண்டேன்?

பட்டணத்தில் நான் குடியிருந்த பங்களாவின் மேல் மாடியில் ஒரு கௌரவமான குடும்பம் இருந்தது. சொத்தும் நிறைய உண்டு. பெற்றோருக்குச் செல்ல மாக ஒரே ஒரு பெண். அந்தப்பெண்ணை அருமையாக வளர்ப்பதிலேதான் அவர்கள் கவனத்தைச் செலுத்தி ஞர்கள். சங்கீதம், நாட்டியம் எல்லாம் வீட்டிலேயே சொல்லிக்கொடுத்து பெண்ணை ரொம்பவும் செல்ல மாக வளர்த்து வந்தார்கள். என்னிடம் அவர்களுக்கு அத்யந்த பிரியம். நான் இஷ்டப்பட்டிருந்தால் அவர் கள் பெண் பத்மாவை மணப்பதில் ஒரு தடையும் இருந்திருக்காது. ரொம்பவும் யதார்த்தமான சுபாவம். பத்மாதான் ஆகட்டும், எவ்வளவோ அன்புடன் அல் லவா நடந்து கொண்டாள்? சுவை ததும்பும் இரண் டொரு காட்சிகளை நான் சுலபத்தில் மறந்துவிட முடியுமா?

அம்மன் கோவில் மணி "கணி கணீர்" என்றடித் தது. ஏத்து இறைத்துக்கொண்டிருந்தவர்கள், பழைய சோறு தின்பதற்காக ஏத்தை நிறுத்திவிட்டு, வாய்க் கால் ஓரங்களிலும் வாரி வெளியிலும், பனங்கருக்குப் பக்கத்திலும் போய் உட்கார்ந்தார்கள். நான் நிழலில் "பகற் கனவில்" ஆழ்ந்து விட்டேன்.

பத்மாவதி ஒரு நாள் சொன்னாள்: "நாட்டியம் என்றால் உங்களுக்கு உயிர் ஆச்சே. இன்றைக்கு என் நாட்டியத்தைப் பார்த்து எப்படி இருக்கிறது என்று

சொல்லக் கூடாதா? நீங்கள் என்ன சொன்னாலும் இதைப் பழகிய பலன் கிடைத்துவிட்டதாக எண்ணிக் கொள்வேன்'' என்றாள்.

அவள், எங்கே ஆடப்போகிறாள் என்பது நிச்சய மாகத் தெரியவில்லை. தவிர அவள் 'கச்சேரி'யா செய் யப்போகிறாள்? அதை உத்தேசித்தா பெற்றோர் நாட்டியம் கற்பித்தார்கள்?

நான் தயங்குவதைக் கண்டு, ''சொல்வதை எல் லாம் அப்படியே நம்பி விடுகிறீர்களே? நாட்டியம் இங்கேதான் நடக்கப்போகிறது. அம்மா கோயிலுக்கு போயிருக்கிறார்கள். அப்பாதான் ஊரில் இல்லையே. யார் இருக்கிறார்கள்? நீங்கள் மேலே வந்து பாருங் களேன்'' என்றாள் பத்மாவதி.

அவள் ''அழைப்பை'' மறுக்க எனக்கு மனம் வர வில்லை. தூய அன்புடன் அவள் சொல்கிறாள் என் பதும் எனக்குத் தெரியும்.

''சரி, வாருங்கள்'' என்று மேல் மாடிக்கு அழைத் துச் சென்றாள் பத்மா. சற்று நேரத்தில் அவள் ''அலங் காரி'' யாகக் காட்சி தந்தது எனக்கு இன்னும் வியப் பாகத்தான் இருக்கிறது. இளமையின் வனப்புப் பொங்கும் அவள் அங்கங்கள் நாட்டியத்திற்கு மிகப் பொருத்தமாக அமைந்திருந்தது. மைதீட்டிய கரு விழியிலும், அவளுடைய ஒவ்வொரு அசைவுகளிலும் பாவம் கொப்புளித்துக் கொண்டு நிறைந்திருந்தது. கூந்தல் இயற்கையிலேயே இடைவரை நீண்டு தொங் கிக் கொண்டிருப்பதை அன்று அற்புதமாக மலர்சூடிப் பின்னியிருந்தாள்.

பத்மாவின் நாட்டியம் ஆரம்பமாயிற்று. எந்தச் சமயத்தில் அதை நினைத்தாலும் உள்ளத்திலே தனி யான ரசங்களெல்லாம் மாறி மாறிப் பிறக்கிறது.

ஆகா! கலா விற்பன்னர்கள் நிறைந்த பெரிய சபையிலே இவளுடைய நாட்டியக்கலையிலே பூரணத்வம் பெற்ற கலாதேவி போல சின்னஞ்சிறு நெளிவுகளிலும் அருமையாகத் தன் திறமையைக் காட்ட எப்படித் தான் கற்றுக் கொண்டாளோ? 'ஒரே அற்புதம்' என்று எண்ணிக்கொண்டேன். ஆனால் பத்மாவின் நாட்டியத்தை பார்த்துக் கொண்டிருக்கையிலே இன்னொரு மனோகர நினைவும் உள்ளத்தில் ஊற்றெடுத்தது.

கண்ணெதிரே பத்மா ஆடிக் கொண்டிருந்தாள், ஆனால் இதய அரங்கில்? சரஸ்வதியல்லவா அங்கு நர்த்தனம் புரிந்து கொண்டிருக்கிறாள். பத்மாவைத்தான் கண்கள் பார்த்தனவே தவிர இடைவிடாது சரஸ்வதியின் நாட்டியத்தையே மனம் கண்டு களித்துக் கொண்டிருந்தது.

எங்கோ வெகு தூரத்திலே இயற்கை யன்னையின் மடி மீது தலை சாய்த்துப் படுத்துக் கொண்டு தன் அன்பனுடைய வருகையை எண்ணி எண்ணியே மனம் மகிழ்ந்து கொண்டும், கண்ணீர் விட்டுக் கொண்டுமிருக்கும் அந்தக் கிராமிய லக்ஷ்மியையே நான் கண்டேன். அக்கட்டழகியின் குவிந்த கரங்களே எனக்கு காட்சி அளித்தது. மலர் முகமே 'வா' வெனக் கொஞ்சியது. அவள் புன்னகையே மனதில் பித்தேற்றிற்று. அந்த அழகியின் இதயத்துடிப்பே என் உள்ளத்தில் எதிரொலித்தது. சரஸ்வதியை அப்படிப் பட்டதொரு தவிப்பும் தாபமும் நிறைந்த கோலத்தில் வைத்துப் பார்ப்பதே தான் எனக்கு மிக மதுரமாயிருந்தது.

ஆனால் அந்த சரஸ்வதி இன்றைக்கு என்ன செய்தாள்? அவளையே சதா கற்பனை பண்ணிக் களுக் கண்டு

கொண்டிருந்த கோமள நினைவுகளை சிதற அடித்து விட்டாள். அரும்பாடு பட்டுச் செய்த அழகிய சிலையை ஒரு நொடியில் உளி கொண்டு வெட்டிய மாதிரி எல் லாம் பாழ் படுத்தி விட்டாளே!

இல்லை. சரஸ்வதி இந்தக் கலியாணத்திற்கு சம் மதித்திருக்கவே மாட்டாள். 'இத்தனை நாள் பழகியும் இன்னும் அவள் குணத்தைத் தெரிந்து கொள்ள வில்லையே' என்று ஒரு சிறு குரல் எனக்குள் சொல்லி யது.

'ஏறு' வெயில் கொஞ்சம் கொஞ்சமாக உறைக் கத் தொடங்கியது. ஆனால் என் பாட்டுக்கு ஒன்றை யும் கவனியாமல் யோசனையில் மூழ்கி விட்டேன்.

சரி, யார் இந்தக் கொடூரத்திற்குக் காரண கர்த்தா? வேறு யார், என் தகப்பனார்தான். என் ஆத்திரம் அதிகரித்தது. முதலியார் தம்முடைய கௌ ரவத்தை மேலாகக் கவனித்துக் கொண்டாரா? அப் படியானால் அவருடைய கௌரவத்தை பிள்ளை காப் பாற்ற வேண்டியது ரொம்பவும் நியாந்தான்! அதற் காக இப்போதே உடனே திரும்பிப் போய் தெருவில் திரிகிற பிச்சைக்காரி ஒருத்தியை கட்டிக்கொண்டு வந்து விட வேண்டியது. "எங்கோ கோவிலில் வைத்து கலியாணம் பண்ணிக் கொண்டு வந்து விட்டேன்" என்று சொல்ல வேண்டியது தான். கோவிலில் வைத்து என்னத்திற்குக் கலியாணம் பண்ணுவது? 'கூட்டிக் கொண்டு வந்து விட்டேன்' என்று கூசாமல் சொல் கிறேன். அந்தப் பிச்சைக்காரப் பெண்ணுக்குப் புது ஆடை கூட வாங்கிக் கொடுக்காமல் தகப்பனார் எதிரில் கொண்டு வந்து நிறுத்தி, "அப்பா, காதல் ஒன்றையுமே லக்ஷியம் பண்ணாது. ஆடை, அழகு, குலம், கோத்திரம், என் கௌரவம் இவை யெல்லாவற்றிற்கும் அப்பாற் பட்டதாக்கும் காதல்" என்று சொல்லப் போகிறேன்.

இதைக் கேட்டுவிட்டு ஸ்ரீமான் முதலியார் அவர்கள் ஒன்றும் தோன்ருதவராய் அப்படியே திகைத்து நிற்கவேண்டுமாக்கும்; அக்கம் பக்கத்து கவுண்டன் காணியாளர்கள் "என்னுங்க முதலியாரே, வெடிய வெடிய நாங்க சொன்னதே கேக்காமெ பையனை பட்டணத்துக்கு அனுப்பி படிக்க வெச்சது கடைசியிலே இப்படியே வந்து முடிஞ்சிது........நாளேயும் பின்னே தண்ணி வெண்ணி கூடவளவிலே வாங்கிக் குடிக்கிறதுக்கில்லாமே பயன் பண்ணீட்டானே?" என்று சொல்லி முகத்தில் 'இடி'த்துக் காட்ட வேண்டும். அப்போது தெரியும் முதலியாருக்கு எது பெரிது என்று.

முதலியார் மனமுடைவதோடு மட்டுமா அந்தக் காட்சியை நிறுத்துவது? அவள் இருக்கிருளே, அவள் தான் சரஸ்வதி. நேராக பிச்சைக்கார மனேவியை கை யோடு கை கோர்த்துக் கூட்டிக்கொண்டு சரஸ்வதியிடம் போய், "உன் சகோதிரியை வாழ்த்த வேண்டாமா? பெண் எப்படி என்று பார்த்துச் சொல்லு. இவள் சொன்னபடி நடப்பாளா? அது போகிறது, சரஸ்வதி, உன் சகோதரியை மனமார வாழ்த்து" என்று சொல்ல வேண்டும்.

சரஸ்வதி இடி விழுந்தவள்போல் மலேத்துப்போய் அசையாது நிற்க வேண்டும்!

இன்னும் என்னவெல்லாமோ இப்படி யெல்லாம் எண்ண மிட்டேன். ஆனுலும் பாழும் மனம் கேட்கிறதா? ஒரு விதமாக ஊர் போய்ச்சேர்ந்து சலிப்புடன் உள் ஹாலில் உட்கார்ந்தேன்.

நான் உட்கார்ந்தேனே இல்லேயோ அந்தப்புர அறைக்கதவை வெகு வேகமாகத் திறந்து கொண்டு,

"வந்து விட்டார்களா" என்று கலகலவென்று சிரித்த படி கேட்டுக்கொண்டே வந்து நின்றாள் சரஸ்வதி.

ஆச்சரியத்தையும் பதைப்பையும் வெளிக்காட்டா மல், "சரஸ்வதிக்குக் கலியாணம்......" என்று மெது வாகச் சொன்னேன்.

"என்ன, மாப்பிள்ளை இல்லாமலா?' என்று கேட் டாள்.

நான் ஒன்றும் பேசவில்லை.

"ஓ ஹோ, மேக்கால் வீட்டுச் சரஸ்வதியின் கலி யாணத்தைச் சொல்கிறீர்களா?"

ஏறிட்டு அவளைப் பார்த்தேன். கழுத்தில் தாலி இல்லை. அவள் கன்னிப்பெண்!

"சரஸ்வதி என்று கேட்டதும் உன் நினைவே என க்கு வந்து விட்டது" என்றேன்.

"அது ஒன்றே மனதை அலட்டிக் கொள்ளப் போ துமே" என்று சொல்லிச் சிரித்தாள் சரஸ்வதி.

வீணை கானம்

என் உள்ளத்தில் பொங்கும் உணர்ச்சிகளைப் போலவே கடல் அலைகளும் பொங்கிப் புரண்டு கொண்டிருந்தன. கீழ் வானிலே மலர் விரிவது போன்று மேலெழுந்து வரும் நிலவின் ஒளி செய்யும் அற்புதக் கோலங்களும், தூரத்திலே வீடு திரும்பிக் கொண்டிருக்கும் படகோட்டிகளின் பரவசப்பாட்டும், அந்தியின் மோகனமயக்கும் என் நெஞ்சைக் கவரவில்லை. கவராதது மட்டுமா? அழகின் காந்தி அதிகரிக்க அதிகரிக்க அனல் கொழுந்து எனக்குள்ளே சுடர் விட்டுப் பிரகாசிப்பது போன்றிருந்தது. ஏனிந்தத்தர்கம்?

முந்திய நாள் சாயங்காலத்திலிருந்தே என் மனசு ஒரு நிலையிலில்லை. அன்று இரவு வீட்டிலுள்ள எல்லோருமாகச் சேர்ந்துகொண்டு என்னைப் பேசிப் பேசி வதைத்ததானது சகிக்கக்கூடியதாக இல்லை. என்னைப் போன்ற வைராக்கிய சித்தம் கொண்டிருந்தாலொழிய வேறு யாராலும் அதைப்பொறுத்துக் கொள்ளவே முடியாது.

இந்த உலகத்தின் அக்கிரமத்தை என்னவென்று சொல்வது? அருணோதயத்திலே அற்புதமாக மலருகிறதே புஷ்பம், அது யாரையாவது கேட்டுக்கொண்டு தான் மலருகிறதா? இதே அந்திவானம் வித வித வர்ணச் சேர்க்கைகளை நவ நவமாக அள்ளி வீசிக்கொண்டிருக்கிறதே யாருடைய அனுமதியின் பேரில் இதெல்லாம் நடை பெறுகிறது? அலைகளுக்கிடையே என்னென்னவோ வடிவங்கள் கணந்தோறும் மின்னி மின்னி மறைகிறதே, இதற்கெல்லாம் யாருடைய உத்திரவாவது வேண்டியிருக்கிறதா? எந்தக் கட்டளையை

யும் கேட்காமலே இப்படி இயற்கை தன்னிச்சையாய் நடந்து கொண்டிருக்கையில் நான் மட்டும், ஏன் வேறொருவர் கட்டளைக்குக் கீழ்படியவேண்டும்? அப்பப்பா! என்னென்ன விச்சித்திரக் கட்டளைகள்! வேண்டுகோள்கள்! வீடு பூராவுமே என்னை உற்று நோக்குகிறது! இந்த இம்சையிலிருந்து மீள ஒரு வழியில்லையா?

போகட்டும், என்னுடைய இன்பத்திலும் — சுகத்திலும் நாட்டம் கொண்டு உபதேசிக்கிறார்களே, இவர்களில் யாராவது ஒருவராவது என் விருப்பத்தை, இச்சையைக் கவனித்தார்களா? வேடிக்கையிலும் வேடிக்கை அதுதான் பெரிய வேடிக்கை! ஆனால் பார்க்கப் போனால், "உன் நல்வாழ்வுக்கே இத்தனையும் சொல்கிறோம்" என்ற பெரிய சித்தாந்தம் — சித்தாந்தமா? அபத்தக்கூச்சல் வேறு! சரி, போடுகிறவரை போடட்டும். அவர்களுடைய சத்தத்தால் வீடு இடிந்து விழுந்தாலும் விழலாம். ஆனால் நான் மட்டும் துளிக்கூட மாறப் போவதில்லை. விடிய விடிய — விடிந்து இன்னேரம் வரை யோசித்தும் அம்மா சொன்ன வார்த்தைகளுக்கு அர்த்தம் தெரிய மாட்டேன் என்கிறது. அப்பா சொல்கிறார். "அடே, நீ எனக்கு ஒரே பிள்ளை. வீணாக என் பெயரைக் கெடுக்காதே. என் காலத்துக்குப் பிறகு நீ எக்கேடோகெட்டு நாசமாகப் போ! ஆனால் என் கண் எதிரே — இனி மறுபடியும் என் காது கேட்க, அவளைக் கட்டிக்கொள்கிறதாகச் சொல்லாதே" என்கிறார்.

ஆனால் அவளுக்கென்னவோ? அது தான் எனக்கு விளங்கவில்லை.

தங்கைகள் சொல்லுகிறார்கள், "அண்ணா, ஊரிலே எத்தனையோ அழகான பெண்கள் இருக்கிறார்களே.

இந்தப் பெண் மட்டும் வேண்டவே வேண்டாம் அண்ணு; இனி இந்தப் பெண்ணை மறந்து விடு அண்ணு.''

இந்தப் பெண்ணுக்கு என்ன என்பது தான் என் கேள்வி. இதெல்லாம் ஒரு மாதிரியாகத்தள்ளி விடலாம். ஆனுல் அம்மா சொல்வதற்குத்தான் நேரடியாகப் பதில் சொல்ல எனக்குத் தெரியவில்லை. அவள் கேட்கிருள், ''அப்பா, சொல்வதைக் கேளு. அவளுடைய அம்மா சங்கதி தெரியுமோ இல்லையோ? அவளுக்குப் பிறந்த அந்தப் பெண்ணை என்னவென்று சொல்வார்கள்? வேறு யாராவதாயிருந்தாலும் பரவாயில்லை, ஐயோ அவள்'' என்று சொல்லி கண்ணீர் சிந்த ஆரம்பிக்கிருள். அம்மாவின் வாயைக் கிளறிஞல் தட்டுத் தடுமாறி தயங்கிக் கொண்டே, ''ஐயோ அப்பா, தலைநாளிலே தாசி வீட்டிலா கட்டுவது? நீ வேறு எங்காவது சொல்லு, இது அடுக்குமா?'' என்று கண்ணீர் வடிக்கிருள்.

இந்த, 'தர்ம சங்கடம்' என்னும் வார்த்தைக்கு இத்தனை நாளும் எனக்கு அர்த்தம் தெரியாமல் இருந்தது. இப்போதுதான் அதற்குப் பூர்ணமாகப் பொருள் விளங்குகிறது! அம்மாவிடம் நான் எவ்வளவு விஷயங்களை எந்த முறையில் விளக்கிச் சொல்வது? அந்த வீட்டில் சம்பந்தம் வேண்டாமாம். ஆனுல், சும்மா போகலாம், வரலாம், பேசலாம் — ஏன் — சாப்பிடவும் சாப்பிடலாம் — ஆனுல் சம்பந்தம் மட்டும் கூடாதாம். இதென்ன நியாயமோ? முதன் முதலில் பத்து வருஷங்களுக்கு முன்பு அந்தப் பெண் இருக்கும் திக்கே எனக்குத் தெரியாது. கொஞ்சம் கொஞ்சமாக இவர்களால் தான் அறிமுகமாயிற்று. பிறகு வளர்பிறை போல் அன்பு வளரத் தோங்கியது. மலர் மணம் போல் இதயத்தை அது நிறைத்து விட்டது.

அதன் பிறகு வீணையும் கையுமாக அவள் கான வெள்ளத்திலே மெய்மறந்திருந்த போதெல்லாம் ஏதோ இசையின் பெருக்கிலே மூழ்கித்தான் பரவசப் பட்டேனே யல்லாது, மற்றெதிலும் அல்ல. நாளாக ஆக, அந்த கானத்திற்கு அப்பால் இன்னம் ஏதோ ஒரு மந்திர சக்தி கலந்திருப்பது போலிருந்தது. வீணையின் இடையே அவளுடைய இளம் விரல்கள் திரிகையில், என் இதயத்தையே நெருடி மீட்டுவது போலிருந்தது. குங்குமம் அணிந்து, குனிந்து தலை நிமிராமல், சடை இடையோடு சுற்றி வளைந்திருக்கும் கோலம் கொஞ்சம் கொஞ்சமாக நெஞ்சில் இடம் பெற்றுவிட்டது. இன்று துளியிடம் பாக்கியில்லாமல் எல்லாமாகக் கலந்து அது நிறைந்து விட்டது. ஆரம்பத்திலே எந்தத்திக்கில் படகு போயிற்று என்று தெரியாது. கடைசியாக கரையை அடைந்த பிறகு, அதைச் சின்னு பின்ன மாக்கி, தண்ணீருக்குள் தூக்கி எறிய யோசனை சொன்னுல் அது எப்படி இருக்கும்? நாலுபேர் கேட்டவர்கள் தான் என்ன சொல்வார்கள்?

"அம்மா, நீ காரணமில்லாமல் கவலைப் படுகிருய்" என்ருல் அம்மாவின் துக்கம் பொங்குகிறதே தவிரத் தணிவதாயில்லை. இதற்கு நான் என்ன செய்வது?

நிலாக் கிளம்பி அரைப்பனை உயரத்துக்கு வந்து விட்டது. கடற்கரையோரமாக சற்று தூரத்தில் தான் இருக்கிறது காந்திமதியின் வீடு. அன்று மாலை சீக்கிர மாகவே வருவதாகச் சொல்லி விட்டு வந்தேன்.

ஆனுல் முந்திய இரவு வீட்டில் எழுந்த கொந்தளிப்பு காரணமாக "போகலாமா வேண்டாமா" என்னும் சந்தேகம் வந்துவிட்டது இப்போது! என்ன யோசனை! பெற்ற தகப்பன் சொல்வது என்ன? சீராட்

டித் தாலாட்டி வளர்த்த அன்னை வேண்டிக் கொள்வது என்ன? அருமைத் தங்கைகள் கேட்டுக் கொள்வது என்ன? இவ்வளவையும் பொருட் படுத்தாமல் கேவலம் ஒரு இளம் பெண்ணின் கை அசைப்புக்கு அடிமையாகி விடுவதா? என்னைப் போன்ற மனிதன் நியாயம், உண்மை, என்றெல்லாம் உபதேசம் செய்கிற ஆசாமியே இப்பேர்ப்பட்ட காரியத்தில் முனைந்து நின்றால் மற்றவர்களைப் பற்றி என்ன சொல்வது? ஆனால் என் நேர்மையில் யாருக்கும் துளியும் சந்தேகம் தோன்றாது. தோன்றியதும் இல்லை.

அந்தப் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்கிறேன் என்று பிடிவாதமாயிருக்கிறேன் நான். தாசி என்று ஒதுக்கித் தள்ளுகிறார்கள் என் வீட்டார். இதற்கிடையில் தான் பல இதயப் போராட்டங்கள்! நல்லது, இந்த மாதிரியே ஆனந்தகரமான ஒரு இரவிலே அவள் என்ன சொன்னாள்? "நான் தாசி குலத்தில் பிறந்தேன். நீங்களோ சம்சாரி மகன். உங்களுக்கு சொத்துச் சுகம் இருக்கிறது. என்னைப் போல வேறு யாராவது ஒருத்தியைப் பார்த்து கலியாணம் பண்ணிக் கொள்ளுங்கள். உங்கள் பெற்றோருக்கும் பிரியம் ஏற்பட்டு விடும். குலமும் கெட்டுப்போகாது," என்றாள்.

"காந்திமதி, ஒரு தரம் உன்னை நெஞ்சில் வரித்தாயிற்று: நீயா இப்படி பேசுகிறாய்?" என்றேன். அவள் வீணையைக் கீழே வைத்து விட்டு, " இதோ இதிலிருந்து வரும் கானம் இல்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்தத் 'தள தள' ப்பான தேகத்தின் காந்தி எக்காரணத்தாலோ குறைந்து போய்விட்டது என வைத்துக்கொள்ளுங்கள். அப்போதும், இந்தக் கானமும், காந்தியும் உங்கள் மனதிலே நிற்குமா? அப்படியே இருக்கும் என நீங்கள் நம்புவதானால் இஷ்டம் போல் செய்யுங்கள்" என்றாள்.

ஆகா! இன்றல்லவா அவள் சொன்ன பேச்சின் அர்த்தம் நன்ருகத் தெரிகிறது? ஒரு கணத்தில் புத்தி ஏன் இப்படி மாறப் பார்க்கிறது?

நிலா, கடல் அலைகளோடு கை கோத்துக் கொண் டிருக்கிறது. இனிய சொப்பனம் போல் அவ்விரவிலே வீணு கானம் எழுந்தது. ஆம், காந்திமதி தான். வீணை வாசிக்கிருள். என் வருகையை எதிர் பார்த்து சலித் துப்போன அவள் வீணையை எடுத்து மீட்டத் தொட ங்கி விட்டாள். அடடா! இந்த நாதத்தில் தான் என்ன மந்திர சக்தி! என் இதயத்தையே கட்டி இழுக்கிறதே?

ஆனுல்............. தந்தை என்ன சொன்ஞர்?

"என் கண் எதிரே இப்படியொன்றும் செய்யாதே. என் காலத்திற்குப் பிறகு எப்படி வேண்டுமாஞலும் கெட்டுக் குட்டிச் சுவராகப் போ!"

இப்படிச் சொல்லிய தந்தையின் பேச்சை இப் போதே எப்படித் தட்டுவது?

சரி, அவருடைய மனதின் அடியிலே இருப்பது தான் எனக்குத் தெரியுமே. பிறகு நான் ஏன் அஞு வஸ்யமாகக் கவலைப்படவேண்டும்?

தவிர நான் சாமி பூதங்களை நம்பாதவன். இக லோக பரலோக இன்பங்களைக் காட்டி என்னை யாரும் மயக்கிவிட முடியாது. தெய்வம் என்கிற அழகிய கற் பனையின் மூலமாக எழுந்த பூச்சாண்டிகளைக் கண்டு நான் அஞ்சுகிறவன் அல்ல. என் தந்தையாகத் தான் இருக்கட்டுமே மறு ஜென்மத்தைப் பற்றி அவர் அப் படி உறுதியுடன் இருக்கையில், "பூர்வ ஜன்மத்திலே இந்தப் பந்தம் ஏற்பட்டு விட்டது" என்று நான் அவ ரிடம் ஏன் சொல்லக்கூடாது? நான் நீச சாதி மக

ளோடு சம்பந்தம் வைத்துக் கொள்வதனல் அவருடைய கருணை வடிவமான எம்பெருமான் சினம் கொண்டு சுவர்க்கத்தில் எனக்கு இடமளிக்கா விட்டால் பரவாயில்லை. இந்த பெண்ணேடு நரகத்திலும் கேடு கெட்ட வேறு எந்த லோகத்திற்கு வேண்டுமானலும் நான் போகத் தயார். இந்த நம்பிக்கையை மட்டும் ஒரு நாளும் மாற்றவே முடியாது. இது முரட்டு தைரியத்தில், தன்னை யறியாது எழுந்த ஆவேசம் அல்ல. நான் சாந்தமாக மிகவும் பொறுமையாகவே இருக்கிறேன். என் மனசை நானே சந்தேகத்திற்குத் தொட்டுப் பார்த்துக் கொண்டேன். ஆத்திரபுத்தியில் அவசரப்பட்டு நான் ஒரு முடிவுக்கு வரவில்லை. எந்தச் சமயத்திலும் சொல்லத் தயார்.

சரி, முடிவு செய்தான பிறகு இனிக் காரியத்தில் நடத்திக் காட்ட வேண்டியது தான்.

நான் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்து நடந்தேன். மணல் காலுக்கு மெதுவாக இருந்தது. கரையோரமாகவே காந்திமதியின் வீட்டை நோக்கி நடக்கலானேன்.

குளிர்ந்த அலைத் திவலைகள் லேசாக பாதத்தை நனைத்துக்கொண்டிருந்தன. மாலையிலிருந்து கலகலப்பாக இருந்த கடற்கரை கொஞ்சம் கொஞ்சமாக சாந்தியின் மடியிலே தலைசாய்க்க ஆரம்பித்தது. 'தூரத்திலே புரளும் அலையின் கோஷம் மட்டும் சற்றைக்கொரு தரம் 'திடும் திடும்' எனக் கேட்டுக் கொண்டிருந்தது. அவ்வினிய இரவிலே வீணு கானத்தை நோக்கி நான் நடந்து கொண்டிருந்தேன். அப்போது, ''பழம் வேணுமா பழம்'' என்று கேட்டுக்கொண்டே ஒரு பையன் ஓடி வந்தான் பொழுதெல்லாம் தூங்கி விட்டு, இப்போதுதான் விழித்துக் கொண்டான் போலிருக்

கிறது. ஒருவரும் அவன் கண்ணுக்குத் தட்டுப்பட வில்லை போலும்! போனுப் போகிறது என்று கைக்கு வந்த சில்லறையைக் கொடுத்து ஒரு நல்ல பழமாகப் பார்த்து எடுத்து அதை உரித்துத் தின்றுகொண்டே மேலே நடந்தேன். கொஞ்ச நேரத்தில் காந்திமதி யின் வீட்டுக்கு வந்துவிட்டேன். ஆனல் உள்ளே போகாமல் வாயிற்படியிலேயே நின்றுகொண்டேன். வெகு நேரத்திற்குப் பிறகுதான், சந்திரன் மெல்லிய மேகத்திரைக்குள் புகுந்து கொண்டான் என்பதும், இனிய நாதம் அடங்கி, காந்திமதியும் வெளியே வந்து என்னையே உற்றுப் பார்த்து நிற்கிருள் என்பதும் என் அறிவில் உறைக்கத் தொடங்கியது. பிறகு போனேம்.

காந்திமதி அன்றுதான் மனசிலிருந்ததை எல்லாம் கொட்டித் தீர்த்தாள் என்று நினைக்கிறேன். கடைசி யாக, "இன்று உங்கள் வீட்டுக்கு அனுப்பியிருக்கும் தகவலில் இன்னேரம் மூலைக்கு ஒருவராகத் தேடு வார்கள்" என்ருள்.

"அது என்ன என்றேன்?" அப்போதுதான் மீண் டும் வீட்டு ஞாபகம் வந்தது.

காந்திமதி கலங்கிய கண்களோடு, "இன்னேரம் என் கதையைச் சொல்லிக்கொண்டு வந்தேன். இந்த வாழ்க்கை வழியில் இன்னும் என்னென்ன இடர்களைச் சமாளித்தாக வேண்டுமோ? அதோ பாருங்கள்-எல்லை யில்லாக்கடல் வெளியிலே திசை தப்பி பறந்து செல்லு கிறதே இரண்டு பட்சிகள். அந்த மாதிரி நாமும் ஜென்மமெடுத்திருக்கலாகாதா?" என்ருள்.

"காந்திமதி, நீ வருந்தக் காரணமேயில்லை. என்னை இந்த எதிர்ப்பு என்ன செய்து விடும்?" என்று தேற்றி

னேன். ஆனல், அவள் என் ஆறுதலை எதிர்பார்க்க வில்லை.

"நந்திக் கலம்பகத்திலே 'கணவா உறவு கதை யாய் முடிந்ததே' என்று ஒரு அடி வருகிறதே, ஞாபகம் இருக்கிறதா? அப்படித்தான் என் கதையும் ஆகிவிடு மோ என்று இருந்தேன். ஆனல் வேறு விதமாக அல்லவா முடிந்திருக்கிறது. இந்தத் துக்கத்திலும் சிரிப்பு வருகிறது. உங்கள் வீட்டுக்கு என்ன செய்தி அனுப்பினேன் தெரியுமா? இனி நீங்கள் இங்கேயே இருந்துவிடப் போவதாக தகவல் சொல்லி அனுப்பி விட்டேன்..."

"அடராமா" வேறு வார்த்தை ஒன்றும் வர வில்லை...

"ராமனையும் கிருஷ்ணனையும் ஏன் கூப்பிடு கிறீர்கள்"?

"அவர்கள் வீணுக ஏன் அங்கலாய்த்துக் கொண் டிருக்கிருர்கள்? நேரில் வந்து நாம் ஆனந்தமாக, உல் லாசமாகப் பொழுதை போக்குவதைக் கண்டால் ஒரு வேளை மனசு மாருதா என்ற யோசனைதான்" என்ருள்.

"நல்ல விபரீத யோசனை!" என்றேன்.

அவள் பேசவில்லை.

"காந்திமதி, அப்படியானல் ஒரு வேளை இப்போது யாராவது வந்தாலும் வருவார்கள்?" என்றேன்.

"உங்கள் வீட்டுச் சனங்கள் போக்கு உங்களுக்குத் தானே தெரியும்?" என்று சொல்லிவிட்டு அவள் வீணையை எடுத்து மீட்டத் தொடங்கினுள்.

ஆனுல் வீணையிலே என் மனம் செல்ல வில்லை.

"இந்தா காந்திமதி, நான் என்ன சொன்னாலும் கேட்பாயல்லவா?" என்றேன். எதையோ எண்ணிக் கொண்டு "ஆம்" என்றாள்.

"இதோ என் கையில் என்ன இருக்கிறது தெரியுமா?"

மூடியிருந்த கையைப் பார்த்துக் கொண்டே, எனக்கென்ன தெரியும்?" என்றாள்.

"பாஷாணம்!"

காந்திமதி திடுக்கிட்டாள். "என்ன என்ன? விஷமா?"

"ஆமாம் விஷம்தான்!"

கொஞ்ச நேரம் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

சந்திர வெளிச்சம் அரையும் குறையுமாக அந்த முகத்தில் பட்டுக் கொண்டிருந்தது. துவண்ட மலர் போல் இருந்த வதனத்தில் திடீரென பழைய களை வந்து விட்டது.

"இந்த விஷத்தை இப்போது என்ன செய்யப் போகிறேன் தெரியுமா?"

அவள் பேச்சற்று இருந்தாள்.

"காந்திமதி, என் கையாலே தருகிறேன்; இந்தா."

அவள் கை நீட்டி வாங்க முயற்சித்தாள்.

"இல்லை, எனக்கு மட்டிலும் இல்லை."

"இரண்டு பேருக்கும் தான்"

"ஆகட்டும்" என்பதற்கு தலையை அசைத்தாள்.

ஆனால்......ஆனால்...... நான் சிரிக்க ஆரம்பிப்பதற்குள் 'ஐயோ' என்னும் பெரிய அலறல் சத்தம் கேட்டது! வீடே இடிந்து விழும்போல் என் தந்தை உரக்கப் பேசினார். அம்மாவின் ஓலத்தையும் மீறிக் கொண்டு, "நீ சுகமாய் இருந்தால் போதுமப்பா" என்னும் வார்த்தை தான் கேட்டது.

"அடே, விஷத்தைத் தொடாதப்பா. இந்த உத்தமியைக் கட்டிக் கொள்ளப்பா" என்று அவர் சொன்னார்.

எனக்குத்தான் ஒரு விதத்தில் ஆச்சரியமாக இருந்தது. ஆனால் காந்திமதி எந்த சமயத்திலும் அன்றிரவு என் பெற்றோர் வருகையை எதிர் பார்த்திருந்ததால் அவள் ஆச்சரியப்படவில்லை.

அவர்கள் எல்லோருடைய பிடிவாதமான வேண்டுகோளின் பேரில், கடற்கரை மணலைக் கையால் கிளறிக் கொண்டிருக்கையில் எடுத்து மூடி வைத்திருந்த சிறு கூழாங்கல்லை தூரத்துக் கடல் அலைகளோடு போய்க் கலக்கட்டுமென வீசி யெறிந்தேன். கடலைச் சேர்ந்த பொருள் கடலுடனே ஐக்கியமாகி விட்டது. என்னைச் சேர்ந்த பொருளும்...........!

அமிர்தமும் விஷமும்

பெண்ணை அலங்கரிக்க இயற்கைத் தேவி மலர்களை அள்ளிச் சொரிந்தாள். கடலும் சுரங்கங்களும் முத்தையும் தங்கத்தையும் வாரித்தந்தன. இந்த அலங்காரத்திற்கு ஏற்றவிதமாகப் பெண்ணைப் படைக்க வேண்டுமல்லவா? அந்த அசட்டுப் பிரம்மா, நட்சத்திரத்தின் ஒளியையும் நிலவின் குளுமையையும், அலையின் அழகையும் குழைத்துப் பெண்மேனியின் வனப்பைச் சிருஷ்டித்தான். அதோடு இசையின் இனிமை போன்ற இதயத்தில், கருநாகத்தின் விடத்தையுங் கலந்து வைத்துவிட்டான். இப்படியாக அமிர்தமும் விடமும் கலந்த பெண் குலத்தோடு யுக ஆரம்பத்திலிருந்தே, நாமும் சேர்ந்து வாழும்படியான காரண காரியங்கள் நடந்து வருகின்றன. பெண்ணை விட்டு ஓடவும் முடியாது. பெண்ணோடு இந்த உண்மையை மழுப்பி வாழ்வதும் அரிது. பின்னே? அதைப்பற்றித் தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்.

வாஸ்தவத்திலேயே பெண்ணிடத்தில் நஞ்சு கலந்துதான் இருக்கின்றதா? மைதீட்டிய மருள் விழிகளின் ஓரத்திலே வீசும் காந்தி அதுதானா? அது மட்டுமா? அவள் ஒவ்வொரு அசைவிலும், அமிர்தமும் நஞ்சும் இரண்டறக்கலந்துதான் நிற்கின்றதா?

சந்தர்ப்பம் பெண்ணைப் பேயாகவும் - ஏன் - விடத்தைவிட இன்னும் கொடிய கொடூரமான சிருஷ்டியாகவும் காட்டி விடுகிறது. ஆனால் அந்த உள்ளத்தை ஊடுருவிப் பார்க்கும் போதுதான் உண்மை கொஞ்சமாவது தெரியவரும்.

ஒரு கதை கேட்டேன். ஆனால், அது கதையாக மட்டும் இருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்

கும்! கதை போன்று இருக்கவேண்டிய அந்தச் சம்ப வத்தின் சுழலிலே சிக்கித் தவித்து உடைந்த உள்ளங் களின் சோகப்பாடலுக்கு முடிவுண்டா? சோகத்திற்கு முடிவேது? ஒருவிதத்தில் பார்க்கப் போனால், சோக மேதான் முதலும் முடிவும் என்று சொல்லுவேன். சரி, சரி. அந்த விவரத்தைத் தொடங்குவோம்.

*   *   *   *

"இந்தப் பாட்டு எப்படி இருக்கிறது?"

"எனக்குப் பாட்டைப்பற்றி ஒன்றும் தெரியாது."

"சரி இந்தத் தோட்டமும், வானமும் இதெல்லாம் எப்படி இருக்கிறது?"

"இருக்கிறபடி தான்"

"அதெல்லாம் போகட்டும் நீ எப்படி இருக் கிறாய்?"

'கல கல' என்று சிரிப்பொலி எழுந்தது. பக்கத்து மரங்களிலும், ஏரியின் திட்டுகளிலும் உல்லாசமாக விளையாடிக்கொண்டிருந்த பறவைகளும் சிரிப்பதைப் போன்று எழுந்து பறந்தன.

அவன், அவள் முகத்தையே பார்த்துக்கொண்டு, "நான் சொல்வதற்கு ஏதாவது அர்த்தம் தெரிகிறதா?" என்று கேட்டான்.

அவள் சும்மா சிரித்தாள்.

இப்படி அர்த்தமற்ற பேச்சுக்களாலும், மௌன மாக இருவரும் பேசாமல் உட்கார்ந்து கொண்டிருப்ப தாலுமே ஐந்து வருடத்தைப் போக்கிவிட்டார்கள். பிறகு அவனுக்குக் குடும்ப பாரத்தைத் தாங்கும் பொறுப்பும் வந்து சேர்ந்தது. அவளுக்கும் வயசு வந்து

கலியாணம் இனிச்செய்தே தீரவேண்டும் என்ற கட்டமும் வந்து சேர்ந்தது.

அவனும் அவளும் ஒரே சாதி. ஒரே கிராமம். பக்கம் பக்கத்து வீடுகள். இரண்டு குடும்பங்களும் அந்நியோந்நியமாகவே பழகிவந்தன. ஆனால் அவனுக்குக் கலியாணமானால், கலியாணமாகிப் பதினைந்தாவது வயதில் தாயாரை இழந்து விடுவான். இது அவன் தாய் கண்ட கனவு! பகற்கனவு அல்ல; இராக்கனவு தான். கனவு என்பது என்ன என்பதைப்பற்றிப் பட்டணத்திலே பத்து வருடங்கள் கிறித்தவப் பள்ளியிலே படித்த அவனுக்கு நன்கு தெரியும். ஆனால் தன்னுடைய கனவைப்பற்றி யாரிடமும் சொல்லவில்லை. எப்படிச் சொல்வாள்? அவளுடைய சாதாரணக் கனவுகள் நாளது வரை பலித்தே வந்திருக்கின்றன. ஊரிலுள்ள அத்தனை பேரும் அதற்குச் சாட்சி. பிறகு இந்தப் பொல்லாத கனவு பலிக்காமல் போகும் என்று அவள் நம்புவாளா? வெளியில் சொன்னால் மற்றவர்கள்தான் 'ஆகட்டும் எப்படி நம்புவார்கள்? தன் கனவு நாளுக்கு நாள் தன்னை அரித்து வருவதை அந்தத் தாய் உணர்ந்தாள். அப்படி உணர்ந்தும், தன் மகனிடமோ கணவனிடமோ அதைப்பற்றிச் சொல்லத் துணிவு பிறக்கவில்லை. துணிவு வராவிட்டாலும், தன்னையே அதற்குப் பலியிட்டுக்கொள்ளும் தியாகவுணர்ச்சியும் ஏனோ தோன்றவில்லை! ஒரு விதத்தில் ஆச்சரியமாக இருக்கலாம். தாய்மைக்குப் புனிதம் அளிக்க வேண்டியது நியாயம்தான். அந்த இலக்கணம் உலகத்தில் உள்ள எல்லாத் தாய்களுக்கும் பொருந்துமா? இல்லை, பொருந்தும்படி காரியங்கள் நடக்கிறதா என்று கேட்கிறேன். அப்படிப் பொருந்தாத ஒரு தாயை, அவள் அந்தத்தியாகத்துக்குத் தகுதியாக இருந்தாள்

என்று பொருத்திக்காட்ட என்னால் முடியாது. அதெல்லாம் கதையில். முதலிலேயே சொன்னேன். இது வேறு விஷயம். அமிர்தத்தை வைத்த பிரம்மா விடத்தையுங் கலக்கிவிட்டான் என்பதை மறந்து விடக்கூடாது.

* * * *

தாய் உள்ளத்தில் ஒரே ஒரு யோசனை வட்டமிட்டுக்கொண்டேயிருந்தது. மகனுக்குக் கலியாணமான பதினைந்தாம் நாள் தன் காரியம் முடிந்துவிடும்! சரி இதற்காகத்தான் உயிருடன் இருக்கும்வரை அவன் மண விஷயமாகப் பேசாமல் இருந்து விடுவதா? அல்லது மறைமுகமாகத் தடை எதேனும் செய்து வருவதா?

கலியாண மாதங்கள் வந்து வந்து போய்க்கொண்டிருந்தன. பெண் வீட்டிலிருந்து அடிக்கடி கலியாண விஷயமாக ஞாபக மூட்டுவார்கள். ஆனால், பெண்ணும் பிள்ளையும் வெவ்வேறு உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்ததால், இருவரில் ஒருவராவது துளிக் கூடத் தங்கள் திருமண விஷயத்தைப்பற்றிச் சிந்திக்க வேயில்லை! வழக்கம்போல் தோட்டம் தோப்பு, இயற்கை பொங்கி நிற்கும் ஏகாந்தமான இடங்களிலே அவர்கள் சந்திப்பு நிகழ்ந்து வந்தது. ஆகா! அதில் அவர்கள் கண்ட இன்பந்தான் என்ன? பார்க்கப் போனால் கலியாணத்திலோ குடும்ப வாழ்விலோ இல்லாத காதலின்பம் இந்தச் சந்திப்பிலேதான் பூர்த்தியாக இருக்கிறதென்று அவர்கள் மனப்பூர்வமாக எண்ணினார்கள். கணவன் – மனைவி - என்று ஏற்பட்டு விட்டால், அவள் அவனைத்தேடித் தோட்டத்திற்கோ, சாலைக்கோ, ஆற்றங்கரைக்கோ செல்லும்போது, அத்தனை தரம் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே போகவேண்டியிருக்காது. நெஞ்சில் பயங்கலந்த மதுர

மகிழ்ச்சி அப்போது எங்கிருந்து அவளை வந்தடையும்? தங்கள் சந்திப்பின்போது, பேச்சிலும், சிரிப்பிலும், பரஸ்பரம் மரியாதையிலும் இப்போது தேங்கிநிற்கும் அன்பின் அளவே பின்னர் குறைந்து விடும் என்றே நம்பினார்கள். அவர்கள் அப்படி நம்புவதை என்றால் இல்லையென்றோ மறைத்தோ எப்படி எழுதமுடியும்? அவள் அழகில் அவன் இதயம் அப்படியே லயித்து நிற்கையில், அவன் பேச்சில் அவள் மூழ்கிப் போகையில் பிறகு கலியாணத்தைப் பற்றி, வீட்டைக் காட்டைப் பற்றி என்னத்திற்கு அவர்கள் நினைக்கிறார்கள்? நண்பர்களுக்குள் பரஸ்பரம் மரியாதையான விஷயத்திலும் இப்படியேதான். அதுவும் கணக்காக இருந்தால்தான் இன்பத்தை அனுபவிக்க முடிகிறது. லஜ்ஜையும் கோபமும் கலக்காத மரியாதையோ அன்போ அவ்வளவு உயர்ந்ததாகப் படுவதில்லை. இது இயற்கைக்குக் கொஞ்சம் மாறுபட்டிருந்தாலும், ஆழ்ந்து கவனிக்கையில் எத்தனையோ ரசம் அடங்கியிருப்பதைக் காணலாம். இப்படியாக மகனும், அந்த இளமகளும் தங்கள் தனி உலகிலே மெய்ம்மறந்து போய்விட்டார்கள்.

*　　*　　*　　*

ஒரு பண்டிகை வந்து போயிற்று. பண்டிகை கழிந்த மறு தினம் அவர்கள் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்ததை யாரோ ஒருவர் பார்த்தார். இதற்கு முன்பு பலதடவை அவர்கள் வீட்டிலும் காட்டிலும் பேசிக்கொண்டிருந்ததைப் பலரும் பார்த்திருக்கிறார்கள். அப்படி அநேகர் பார்த்திருந்தும் இந்த ஒருவருக்குத்தான் அதைப்பற்றி என்னமோ சொல்ல வேண்டுமென்று தோன்றியது. இந்த ஒருவர் சொல்லியதுதான் எல்லோருக்கும் பேசவேண்டிய விஷயம் எனப்பட்டது.

ஆரம்பத்தில் கொஞ்சம் கொஞ்சமாக அடிபட்ட பேச்சு பிறகு விரிவாகவும் வியாபித்தது. இதைக் கேட்டு பெண்ணின் தாயாரும், மாப்பிள்ளையின் தகப்பனும், உடனே கலியாணத்தைச் செய்தே தீர்வதென்று முடிவுகட்டினார்கள். ஆனால் மாப்பிள்ளை — பெண் — இதுபற்றி வாய் திறக்கவில்லை. மாப்பிள்ளையின் தாயாரும் அப்படியே. ஆனால் அவள் தன் கணவனிடம், "இவளுக்காக அவள், அவளுக்காக இவன். எங்கே போய்விடப்போகிறது? என்ன அவசரம்?" என்றாள். இந்தப் பதிலைத்தான் அவள் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டு வந்தாள்.

அதற்கும் அடுத்தநாள் அவர்களிருவரும் ஏகாந்தமான இடத்திலே சந்தித்தார்கள். அந்தச் சந்திப்பிலே அவர்கள் இருவர் மனசும் என்னவோ ஒரு மாதிரியாக இருந்ததை உணர்ந்தார்கள். தாயின் கனிந்த இதயம் அவன் கண்களுக்கெதிரே வட்டமிட்டு அவனை வதைத்தது. அவள் கடைசியாகத் தன் கனவைச் சொல்லியே தீர்த்துவிட்டாள். அதைக்கேட்டு அவனுக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை. கடைசியாகத் தாயின் மனம் குளிரவேண்டி, "அப்படியே ஆகட்டும்" என்றான். எப்படியே ஆகட்டும்? அவனுக்கு எங்கே அது தெரிந்தது? சும்மா சிரித்தான்.

"கவலைப்படாதே அம்மா" என்றான். மறுபடியும் கொஞ்சம் பொறுத்து, "நீ பயமும் கவலையும் ஒன்றுமே படாதே" என்றான். பிறகு, "இன்னொரு நல்ல கனுக் காணப்போகிறாய்!" என்றான்

ஆனால் அப்போதே அவன் ஒரு முடிவான முடிவுக்கு வந்துவிட்டான். அதன் பயனாக உள்ளம் வேலை செய்ய ஆரம்பித்தது.

"இந்தச் சனங்களுக்குப் புத்தியே இல்லையே?"

"ஆமாம்"

"அப்படியிருந்தும், இந்தக்கற்பனையில்லாத சனங்கள் நம்மைப்பற்றி என்னவெல்லாமோ எதற்காகப் பேசுகிறார்கள்."

"ஆமாம்"

"என்ன ஆமாம்?"

அவள் சிரித்துவிட்டாள். அவன் கோபம் நீங்கி, "நீ ஆமாம் என்று சொல்வதிலிருந்து சடக்கென்று இப்போதுதான் எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. என்ன அதற்கும் ஆமாம் என்று சொல்வாயா?"

"அப்படிச் சொல்லும்படி தான் இருக்கும் உங்கள் கேள்வி."

"சரி, இன்றைக்கு புறப்படு. ஒரு பத்து இருபது நாள் போய்விட்டு மீண்டும் வந்து - அப்புறம் கலியாணம் பண்ணிக்கொள்வோம்."

"ஆகட்டும்" என்றாள்.

"இந்த உலகத்து சனங்கள் ரொம்பப் பைத்தியக்காரத்தனமாகக் காரியங்கள் செய்கிறார்கள். இவர்களுக்குச் சம்பந்தமில்லாத காரியத்தில் தலையிடுகிறார்கள். இந்தமாதிரி விஷயத்தில் இறங்குவதால் இவர்களுக்கு என்ன வருகிறது? நம்மைப்பற்றியும், நம்முடைய கொள்கையைப் பற்றியும், இந்தப் பட்டிக்காட்டுச் சூன்னியங்களுக்கு என்ன தெரியும்? தெய்வம் தெய்வம் என்று பிராணனை விடுவதும், தங்களுக்கு ஒன்றும் தெரியாது, மற்றவர்களுக்குத் தான் எல்லாம் தெரியும் என்று சொல்வதும், குருட்டுத்தனமான போக்குகளும்.........எனக்கு ஏராளமாக இவர்களைத்

திட்ட வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் பாவம், நம்ம சனங்கள். வைவதற்கு மனம் வரவில்லை!"

அவள் சிரித்தாள்.

"இவர்களுக்கு உபதேசம் புரியாது. செய்தே காட்டவேண்டும். நாம் வந்த பின்னும், வாழ்வின் இறுதிவரையிலும் இப்படியே கலியாணம் என்பதில்லாமல் இருந்தாலும் இருந்து விடலாம்."

"சரி."

"நான் சொல்வதற்கெல்லாம் சரி என்று தலையாட்டுகிருயே? எல்லாம் நிசம் என்று படுகிறது? பைத்தியக்காரத்தனமாக ஒன்றும் தோன்றுவதில்லையா? நான் பேசுவதில் ஏதாவது பிடிக்காத விஷயங்கள் இருக்கிறதா?"

"இல்லையே, உங்களைப்போலவே தான் நானும் நினைக்கிறேன். நீங்கள் புத்திசாலித்தனமாக நினைப்பீர்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை."

* * * *

அவர்கள் திட்டப்படி அன்று இரவு வண்டிக்காரப் பையனோடு அடுத்த டவுனுக்கு அவளை அனுப்பி வைத்தான். அவர்கள் புறப்படும்போது நடுச்சாமம். இருபத்திரண்டு மைல் விடிவதற்கு முன்பே கொண்டு செல்லும் நல்ல காளைகள். வண்டிக்காரப் பையனும் வாட்டசாட்டமான ஆள். யாராவது தப்பு தண்டாவுக்கு வந்தால் பார்த்துக்கொள்வான். அந்த 'மந்திரியை' நம்பி, சத்திரத்தில் தான் வரும் வரை, அவளை பாதுகாத்திருப்பான் என்ற திட உறுதியில் இருந்தான் இவன். இவனுக்கு வேறு பயமில்லை. டவுனில் யாராவது புதிதாக - அதுவும் இளம் பெண் ஒருத்தி சத்திரத்தில் வந்து தங்கியிருப்பதைக் கண்டால் தப்பாக நினைத்து அசட்டுப்

பிசட்டென்று நடந்துகொள்ளப் போகிறார்களே என்ற கவலைதான். என்ன இருந்தாலும் சீக்கிரம் போய்ச் சேர்ந்துவிடலாமென்று திட்டம் போட்டிருந்தான். கூடவே இவனும் ஏன் போகவில்லையென்று கேட்கலாம். காரணம் வேண்டுமா? காரணம் பல. இங்கே ஒரு வார்த்தையில் சொன்னால் விதி.

* * * *

இந்தக் கட்டத்தில் எதை முதலில் சொல்வது என்பது விளங்கவில்லை. அதாவது பெண்ணைப்பற்றியா அல்லது மாப்பிள்ளையைப்பற்றியா என்பதைப்பற்றித் தான். இருக்கட்டும், மாப்பிள்ளையைப்பற்றியே சொல்வோம். கலியாணச் சடங்கைப் புறக்கணிப்பவனை 'மாப்பிள்ளை' என்று அழைப்பதில் விசேஷ அர்த்தம் ஒன்றுமில்லை.

ஒரு பேருக்காகச் சொல்கிறேன். கடைசியில் அவனுக்குக் கிடைத்தது வெறும் பேர் தான்.

விடியற்காலம் வண்டி பூட்டப் பார்த்தான். கடையாணியைக் காணவில்லை! என்ன செய்வது? சமயத்திற்குத் தகுந்த சவாரி வண்டி ஒன்றும் கிடைக்கவில்லை. மேல் துண்டை உதறிக்கூடப் போடாமல் அவசரமாகக் காருக்குப் புறப்பட்டான். இரண்டாவது மைலில் இருக்கிறது கார்ப் பாதை. இவன் போவதற்கும் காரின் புழுதிப்புகை மறைவதற்கும் சரியாக இருந்தது. அப்புறம்?

அவளுக்கும் இவனுக்கும் இடையே இருபது நீண்ட மைல்கள்! இருபது மைல் வித்யாசம் அருணோதயத்தில், அன்று சாயங்காலத்திற்குள் அது பன்மடங்கு பெருகிவிட்டது. சத்திரத்தில் ஒரு இளம் பெண் தனி அறையில், ஒரு தடித்த பையனோடு, (அவன் வண்டிக்காரன் என்பது முகத்தில் எழுதியா ஒட்டியிருக்கிறது?) தங்கி

யிருப்பதைக் கண்டால், அது பேசுவதற்கும் பார்ப் பதற்கும் நல்ல விஷயம் என்பதை பலரோடு சேர்ந்து 'பீட் நிற்கும்' போலீஸ் காரனும் ஒப்புக்கொண்டான். இளமத்தியானத்திற்குள் விஷயம் ரொம்ப வளர்ந்து விட்டது. அவள் பரபரப்பான பார்வை, ஒரு மருளிப்பு, இதெல்லாம் பிறத்தியார் வந்து கேள்வி கேட்கும் வரை வளர்ந்துவிட்டது.

அந்தப் பெண் சடக்கென்று பதில் சொல்லி வழக் கப்பட்டவள். போலீஸ்காரனும் மற்ற இரண்டு தடி யர்களும் வந்து, "யார் நீ?" என்று கேட்டால் சும்மா இருப்பாளா? பையனை முறைத்துப் பார்த்தார்கள். இவள் கொஞ்சம் தைரியமாக, துணிந்து, "யாராயிருந் தாலென்ன? என் புருஷன் தான்" என்றாள்.

அப்புறம் அங்கே நிற்பதற்கு அந்த ஆட்களுக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது? வண்டிக்காரப் பைய னுக்கும் அவள், தன்னைப் புருஷன் என்று சொன்னது— சொல்லும்படி நேர்ந்தது ஆனந்தமாகத்தான் இருந்தது. பேசத்தெரியாமல் மேலும் கீழுமாகப் பார்த்தான். அவளுக்கு, ஊரிலிருந்து அவன் இன்னும் வராதது வெறுப்பாகவும், கோபமாகவும், ஆத்திரமாகவும் இரு ந்தது. "சரி கிழக்கே எத்தனை மணிக்குக் கார் போகிறது விசாரி" என்றாள்.

அதேசமயம் ஒரு காரும் அந்த வழியாகச் சத்திரத் திற்கு எதிரில் வந்தது. காரில் ஏறப்போவதற்குள் மறு படியும் அவள் கண்கள் என்னத்தையோ ஆவலாகத் தேடின. காரில் போய் ஏறியும் விட்டார்கள். டிக்கட் ஏதோ ஒரு ஊருக்கு அவன் இருவருக்கும் வாங்கினான்.

அவன் பேசவில்லை. அவளும் பேசவில்லை. காரும் பேசாமல் வெகு வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. எங்கே?

வாழ்க்கை எல்லையற்றது என்கிறார்கள். வாழ்க்கைப்பிரயாணமே எல்லையில்லாதது என்று சொல்லுகிறார்கள். அந்த மாதிரி ஒரு இடத்தை நோக்கி என்று தான் வைத்துக்கொள்ளுங்களேன்.

தங்கள் கிராமத்தைப் போலவே வெளியிடங்களிலும் எத்தனையோ அழகிய இடங்கள் இருக்கின்றன என்பதை அவள் அந்தப் பிரயாணத்தில் தெரிந்து கொண்டாள். குனிந்த தலையை அந்தமாதிரி சமயங்களில் தான் உயர்த்தி விசாலமான கண்களை அகல விரித்தபடியே, ஏகாந்தமான நதிக்கரை, மலர்த்தோப்புகள், தோட்டம், பசுமை – இதெல்லாம் பார்த்துக்கொண்டே போனாள். எதிரிலிருந்து 'அவனை'யும் பார்த்துக் கொள்வாள் அப்போது. அவனுக்கு எல்லாமே ஒரு சொப்பனம் போலிருந்தது.

ஆனால் மனோவேகத்தில் டவுனை நோக்கி அவன் வந்துகொண்டிருந்தானே, வந்த பிறகு 'காலாடிகள்' மூலம், அவள் 'தன் புருஷனோடு' புறப்பட்டு விட்டாள் என்று கேள்விப்பட்டானே, அவன் மனநிலை எப்படியிருந்தது? பெண் அமிர்தமா, விஷமா, அல்லது இரண்டும் கலந்தது தானா என்பதைப்பற்றியெல்லாம் அவன் என்ன முடிவுக்கு வந்தான் என்பது நமக்குக் கொஞ்சமும் தெரியாது. துளிக்கூடத் தெரியாது. ஆட்டி வைக்கும் **அவனுக்கும்** கிஞ்சித்தும் தெரியாது என்பதை **அவன்** மேல் ஆணையிட்டுச் சொல்கிறேன்.

இந்துமதி

இந்தக் கதையில் கற்பனை அளவுக்கு மிஞ்சிப் போய்விட்டால் அது என் குற்றமல்ல. ஏனென்றால் நடந்ததை அப்படியே கூட்டல் குறைவின்றி எழுதியிருக்கிறேன். உள்ளதை உள்ளபடி எழுதவேண்டும் என்ற தீர்மானத்தோடு எழுதா விட்டாலும் உண்மையைத் தான் எழுதியிருக்கிறேன் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. பிறகு உங்கள் விருப்பம்போல் என்ன வேண்டுமானாலும் எண்ணிக் கொள்ளுங்கள்.

(1)

ஒரு கனவு கண்டேன். அபூர்வமான கனவு ஒன்று கண்டேன். ஆகா! அந்தக் கனவை நினைத்தாலே இன்ப அலைகள் உள்ளத்தில் ததும்புகின்றன.

நானும் எத்தனையோ காவியங்கள் படித்திருக்கிறேன். அற்புதமான பாடல்களுக்கு அதிஅற்புதமான அர்த்தமெல்லாம் கேட்டிருக்கிறேன். பரம ரசிகர்களான நண்பர்களோடு பழகியிருக்கிறேன். ஆனால் ஒருவராவது நான் கண்ட கனவின் எல்லையைக்கூட எட்டவில்லை. அதாவது அவர்கள் கற்பனை இவ்வளவு தூரம் செல்லவில்லை என்பதைத்தான் சொல்லுகிறேன்.

இருக்கலாம். உண்மை இப்படி இருக்கையில், இந்த விசித்திரத்தை எந்த விற்பன்னரால் தான் யூகித்துக் கற்பனை பண்ண முடியும்! இது ஒருபுறமிருக்கட்டும். என் கனவு வாழ்விலே பலிக்குமா? அப்படிப் பலித்து விட்டதானால்?

அன்றைக்கு இராத்திரி மேன்மாடி ஜன்னலைத் திறந்து விட்டு படுக்கையில் சாய்ந்த வண்ணம் படுத்திருந்தேன். எதிர் வீட்டிலிருந்து பிடிலின் நாதம்

லேசாக வந்துகொண்டிருந்தது. தூரத்திலே புகை போலத்தெரியும் வான வெளியை நிலவின் பிரகாசம் கொஞ்சம் கொஞ்சமாக பனிநிற மாக்கிக் கொண்டு வந்தது. குழந்தை வேடிக்கை பார்ப்பதுபோல் இந்த பல விதக் கோலங்களில் மனசைச் செலுத்தியபடி மெய் மறந்திருந்தேன்.

அப்போது கொஞ்ச நாளைக்கு முன் கேட்ட ஒரு மாயக் கதை நினைவுக்கு வந்துகொண்டிருந்தது. யாரோ ஒரு மந்திரவாதி. எங்கே போகவேண்டுமென்று அவன் விரும்பினாலும் மறு கணத்திலே அவன் போய் விடுவான். ஒரு நாள் நாகலோகத்துக்குப் போனவன் மறுபடி அங்கிருந்து திரும்பி வரவே இல்லையாம். அங்கொரு மாயக் கன்னிகை அவனை மயக்கி அங்கேயே வைத்துக் கொண்டாளாம். இந்தக் கதையை என் பெரியம்மாவின் குழந்தை உரக்கப் படித்த போது எனக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் இப்போது அது மகாப் பெரிய யோசனைகளைக் கிளறுவதாயிருந்தது.

நானும் ஒரு மந்திரவாதியாக இருந்தால் — நேராக அங்கே போய் அந்த நாக கன்னியிடம், "அம்மா, தாயே, பூவுலகத்திலே இன்னும் மாயா ஜாலம் எல்லாம் வேண்டியிருக்கிறது. கொஞ்சம் தயவு செய்து எங்கள் மந்திரவாதியை அனுப்பிவிடு" என்று கேட்பேன்.

இப்படி யெல்லாம் உருப்பெறாத சிந்தனைகளில் மூழ்கியிருந்த போதுதான் அந்தக் கனவை — சுந்தரக் கனவைக் கண்டேன்.

'கலீர் கலீர்' என்னும் மதுர கானம் கேட்டது. ஆகா, எந்த ராஜகுமாரியின் தளிர்ப் பாதங்களின் இனிய ஒலியோ! எந்த மாயா லோகத்திலிருந்து யார் நிமித்தம் அவள் அடி எடுத்து வைத்து வருகிறாளோ?

என் கண்கள் மூடவில்லை, நன்ருக ஞாபகமிருக்கிறது. விழித்துக்கொண்டே இருந்தேன். அவள் வந்தாள். ஆம், நான் காவியத்திலும் ஓவியத்திலும் எங்குமே காணுத அக்கட்டழகி வந்தாள். அவளைச் சுற்றிலும் அழகின் காந்தி வீசிக் கொண்டிருந்தது. கருங்கூந்தல், கன்னங்களின் சோபை, மேனியின் வனப்பு, புன்னகையின் பெருமிதம், நடையின் கவர்ச்சி, தோற்றத்தின் மயக்கு — இது மட்டுமா? இன்னும் சொல்லுக்கும் சிந்தனைக்கும் எட்டாத ஒரு சக்தி — இதெல்லாம் சேர்ந்து அவளை மரியாதையாக வரவேற்கும்படி செய்தன. ஆனல் அவளைக் கண்டதும், தேவியையோ அன்னையையோ கண்டதைப் போன்ற பக்தி பரவசம் என் மனதில் நிறையவில்லை. எழுந்து உட்கார்ந்தேன். அவளும் புன்னகை செய்தபடி என் அருகே வந்து நின்ருள். ஏனே உட்காரவில்லை. உட்காரும்படி சொல்லவேணும் என்று மனம் விரும்பியதே தவிர வார்த்தை ஒன்றும் வெளிவரவில்லை. கொஞ்ச நேரம் கழிந்தது. மெதுவாக அவள் பேசத் தொடங்கினுள். அடடா! என்ன பேசினுள்? இல்லை, பேச்சுத்தானு அது?

உங்கள் மனசுக்குப் பிடித்தமான யாருடனுவது, புயல் ஆரம்பிக்கச் சற்று நேரத்துக்குமுன் மாலை மயங்கும் வேளையில், அலை மேலும் கீழும் புரள பொங்கிப் பொங்கி எழுவதைக் கவனித்திருக்கிறீர்களா? அல்லது மாசி நிலவிலே, மலைச் சாரலிலே, அருவியின் திரை மேலெழுந்து வழிகையில் கரையோரம் வெள்ளிச் சந்திரிகை புரியும் விந்தைகளைப் பார்த்திருக்கிறீர்களா? உணர்ச்சி மேலிட்டுத் தன்னை மறந்து வீணு கானத்திலே மெய் மறந்திருந்தாலும் போதும். அப்பேர்ப்பட்ட பரவச நிலைகளில் எதிலாவது ஈடுபட்டிருந்தால் உங்களுக்கு நான் சொல்வது நன்ருக விளங்கும்.

ஒரு மதுரமான இன்னெலியைக் கேட்டுக் கொண்டிருந்ததுதான் ஞாபகம் வருகிறதே தவிர அவள் என்ன சொன்னுள், அதைச் சொல்லுகையில் அவளுடைய முக பாவம் எப்படி யெல்லாம் மாறிக்கொண்டு வந்தது என்பதெல்லாம் ஒன்றுமே எனக்கு இப்போது ஞாபகத்துக்கு வரவில்லை. ஆனல் கடைசியாக அவள் கை காட்டிக் குறித்துச் சொல்லிய இடம் ரொம்ப நன்ருக ஞாபகம் இருக்கிறது. அந்தப் பெரிய அரண்மனை போன்ற பங்களா, அதிலுள்ள விசாலமான முன் கட்டு — அதைத்தாண்டி உட்புறவாயில் அதற்கு எதிரிலுள்ள அலங்கார அறை, அங்கே பதுமைபோல் வீற்றிருந்த அழகி — ஆம் — இவளேதான். "என் இருப்பிடம் இனித் தெரியுமல்லவா?" என்று மூன்று முறை கேட்டாள். தெரிந்ததிற்கு அடையாளமாகத் தலையை ஆட்டினேன். மறுபடியும் ஒரு தடவை அடையாளத்தை நன்ருகச் சொல்லிவிட்டு 'கலீர் கலீர்' என இனிய நாதத்துடனே அங்கிருந்து புறப்பட்டாள். ஏதாவது இன்னும் சொல்ல வேண்டும் என்றிருந்தது. மீண்டும் ஒரு முறை திரும்பிப்பார்க்க மாட்டாளா? வந்து சற்று நிற்க மாட்டாளா? ஆம், நான் நினைத்தபடியே திரும்பி மெதுவாகச் சிரித்தாள். ஆகா! அந்தச் சிரிப்பை மட்டும் எழுத்தில் எழுத முடியுமானல்!

கடைசியாக வாயிற்படியோரம் நின்றபடியே, "மறந்துவிடக் கூடாது" என்று சொல்லிவிட்டு மறைந்து விட்டாள்.

கொஞ்சநேரம் நான் எந்த நிலையில் இருந்தேன், என்னென்ன எண்ணினேன் என்பது எனக்கே தெரியாது.

ஆனல், நான் தூங்கிக் கொண்டிருந்தேனு? இல்லை, கனவு கண்டேனு? தூக்கமுமில்லை, கனவுமில்லை, சரி,

இது நடந்ததா? நடக்கக்கூடியதா? நடக்காது என்ருல், பின்னே கனவைத்தவிர இதற்கு வேறு என்ன பெயர் சூட்டுவது?

இரண்டு மூன்று மணி நேரத்திற்குப் பிறகு, நானுகப் பேசிப் பார்த்தேன். உரக்கச் சிரித்தேன். என் சிரிப்பின் எதிரொலி அறையில் எழுந்தது. பிறகு நிச்சயமாக மனசைத் திடப்படுத்திக்கொண்டு இது "உண்மையில் நடந்ததே தான்" என்ற முடிவுக்கு வந்தேன்.

அன்றைக்கு மறுபடி எனக்கு தூக்கம் வரவில்லை. அறைக் கதவைத் தட்டித் தட்டிப் பார்த்தேன். தாள் நன்ருகப் போடப்பட்டிருந்தது. சந்தேகத்திற்கு சன்னலையும் தடவிப் பார்த்தேன். ஒரு சிறு பறவைதான் சிரமப்பட்டு வரலாமே தவிர இப்படி உருவம்—ஆனுல் இதுவும் ஒரு பறவைதான். வரமுடியாது. வரமுடியாதா? வந்தோடு பறவை பறந் தோடியும் விட்டதே!

காலையில் அம்மா என்னைப் பார்த்ததும், "ஏன் விடியும் வரை தூங்கவில்லையா?" என்ருள். என்னவோ சொல்லி விட்டு அங்கிருந்து போய்விட்டேன்.

(2)

அப்புறம் மூன்று மாதங்கள் நான் ஒவ்வொரு இரவாக இந்த அனுபவம் ஏற்படுமா என்று பார்த்தேன். அந்த மாயக்கன்னி ஏனே தோன்றவேயில்லை. கடைசியாக, "என்னை மறந்து விடாதே" என்று சொன்ன வார்த்தை என் நெஞ்சில் ஒலித்துக் கொண்டே இருந்தது. நான் மறக்கவில்லை. மறக்கப் போவதுமில்லை. ஆனுல் இந்த இன்ப நினைவோடு தான் இனியுள்ள காலம் பூராவும் கழிக்க வேண்டுமா? வசந்தத்தின் வளத்தை எண்ணியே பட்சி ஜாலங்கள் வாழ்ந்து விட

முடியுமானல்? மதுர இசைகளைப் பற்றியே எண்ணிக் கொண்டு பாடகர்கள் பாடாமல் இருக்கக் கூடு மானல் — ஆனல் இதெல்லாம் சாத்தியமா?

ஒரு நாள் சாயங்காலம் வெளியே போய் சுற்றி விட்டு ஒரு மைதானத்தின் வழியாக வந்து கொண் டிருந்தேன். திடீரென்று என்னவோ காட்சி தென் பட்டது. என்ன என்ன? அன்றொரு நாள் மாயக் கனவு போலத் தோன்றி வடிவழகி வழி காட் டினளே — அதே பாதைதான். ஆம், சந்தேக மில்லை.

இவ்வளவு நாளும் மெல்லிய பனித்திரை போல் உருவம் பெருமல் இருந்த சித்தத்திற்கு இன்று ஒரு உருவம் கிடைத்துவிட்டது. இனி லட்சியத்தை அடைய வேண்டியதுதான். இந்தப் பாதையில் எல்லையற்ற இடர்கள், துன்பங்கள் சம்பவிக்கலாம். என்னதான் நேரட்டும். காட்டுக் கொடிகளுக்கிடையே புகுந்து விட்டால் ஒரு வழி இல்லாவிட்டாலும் ஒரு வழியில் கானகத்தை விட்டு வெளி வந்து விடலாம்.

இப்போது நினைத்தாலும் மலைப்பு வருகிறது. ஏழு வருஷங்கள் எங்கெங் கெல்லாம் ஓடி அலைந்தேன் என் பதை எண்ணினல் எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. "இது தான்" என்று இருக்கும். ஆனல் 'மாய மான்' போல் அது சடக்கென்று மாறி விடும். நான் சுற்ருத இடங்களில்லை. காணுத மாளிகைகள் இல்லை. ஆனல் அருகே போனதும் அதைவிட்டு மெதுவாக நானே அப் பால் நடந்து விடுவேன்.

ஊரிலிருந்து எப்படியோ என்னைத் தேடிக் கொண்டு வந்து விட்டார்கள். தங்கம் போன்ற பெண் களெல்லாம் கலியாணத்திற்குத் தயாராக இருக்கிருா

கள் என்று சொன்னார்கள். சொத்து சுகத்தைக் காட்டி என்னைத் திருப்பிவிட முடியாது என்பதைக் கண்டு, அம்மா, அழுது தொழுதும் பார்த்தாள். ஆற்றிலே விழுந்து விடுவதாகவும் பயமுறுத்தினாள். நான் பதில் சொல்லாமல் தப்பித்துக் கொண்டு இரவோடு இரவாய் புறப்பட்டு விட்டேன்.

ஒவ்வொரு சமயங்களில் எனக்கே திகைப்பாக இருக்கும். என்னிடமே எனக்கு வெறுப்பும் தோன்றும். "இது என்ன பைத்தியக்காரத் தனம்? இந்தப் பகற் கனவு எங்கே பலிக்கப் போகிறது? கானலைத் தேடி அலைவதைப் போல் வீணாக நாட்களை வியர்த்தமாக்கியது தான் மிச்சம்" என்று யோசிப்பேன்.

அப்போதெல்லாம் சின்ன வயசில் படித்த பேய், பிசாசு, மோகினிகள் கதையெல்லாம் ஞாபகத்துக்கு வரும். அந்த மாதிரிதான் ஒரு மோகினி என்னை மயக்கி விட்டாளோ?

பிறகு இது எவ்வளவு கேலிதரும் விஷயம் என்று என்னை நானே தேற்றிக்கொள்வேன். அன்றைய இரவு பளிச்சென்று எனக்கு ஞாபகத்துக்கு வரும். புகை போன்ற ஆகாயம்—பிடிலின் நாதம்—மெட்டிகளின் மெல்லொலி, படுக்கையில் சாய்ந்தபடி படுத்திருந்தது, அப்போது புன்னகை தவழ அவள் வந்து நின்ற காட்சி. என்ன? எல்லாமே பொய்யா? அப்படியானால் வேதாந்திகள் சொல்லுகிறமாதிரி, 'உலகமே மாயைதான்'!

(3)

எட்டு வருஷங்களுக்குப் பிறகு, நொய்யல் ஆற்றங்கரையிலே, ஒரு மாமரத்து நிழலில் உட்கார்ந்துகொண்டிருந்தேன். அப்போது அம்மாவை நினைத்துத் தான் எனக்கு தாங்க முடியாத துக்கம் பொங்கியது. பெற்று

வளர்த்து, என்ன பயன் கண்டாள்? உலகில் எல்லாரும் என்னைப்போன்ற பிள்ளைகளைப் பெற்று விட்டால்? சரிதான்.

வீட்டிற்குத் திரும்பிப் போவது என்ற முடிவுக்கு வந்தேன். சரி, போய் என்ன சொல்வது? நல்ல கேள்வி யாராவது கேட்டால்தானே பதில் சொல்ல வேண்டியிருக்கும்? என்னைக் கண்டதும், எனக்கெங்கே அவர்கள் பேச இடம் தரப் போகிறுர்கள்? பிறகு?

இந்த உலகில் எல்லாரையும் போல—மற்றவர்கள் என்ன செய்கிறுர்களோ, உலக ஆரம்பத்திலிருந்து இதுவரை எந்தப் பாதையில் உலகம் உருண்டோடிக் கொண்டிருக்கிறதோ அதே வழியில் நானும் செல்ல வேண்டும், சென்று கொண்டே இருக்கவேண்டும். சூரியன் உதிப்பதைப் போல தென்றல் வீசுவதைப்போல் பழக்கப்பட்ட ஒரே காரியத்தை வழக்கம்போல செய்து வரவேணும். ஓகோ! நான் இப்படிச் செய்வேன் என்று புத்தி நினைக்கிறதா? கிறுக்குப் புத்தி! என்னிடம் அது ஒரு நாளும் செல்லாது. என் கனவுப் பாதையில் தான் நான் சிந்தனையைச் செலுத்திக் கொண்டிருப்பேன். இது அமுதக் கடலில் சேர்ப்பிக்காது அதல பாதாள உலகிற்குக் கொண்டுபோய் விட்டாலும் சரிதான்.

எதிரிலுள்ள கரை மேட்டிலிருந்த பலவித மலர்க் கொடிகள் ஆற்று நீரைத் தொட முயற்சிப்பதும், எழுவதும் விழுவதுமாயிருந்தன. அந்த மசக்கலில் பண்ட மேய்க்கும் பையன்களுடைய தெம்மாங்கு லேசாகக் கேட்டுக் கொண்டிருந்தது. இந்த மரத்துக்கும் மனிதர்களுக்கும் என்ன வித்யாசம் இருக்கிறது என்று ஒரு தரம் எனக்குச் சிரிப்பு வந்தது. ஆனுல் நான் வாய் விட்டுச் சிரிக்கவில்லை. இருந்தாலும், கல கல வென்று

சிரிப்பின் எதிரொலி அலை நீருக்குள்ளிருந்து நன்ருகக் கேட்டது. நான் ஒரு கணம் திகைத்து விட்டேன். ஆனுலும் நெஞ்சைத் திடப்படுத்திக்கொண்டு உற்றுக் கவனித்தேன். அன்றொரு நாள் மதுரகானம் போலும் மாயக் கனவு போலும் தோன்றினுளே, அந்தச் சுந்தரி முகத்தில் புன்னகை தவழ, அதரங்கள் நாணத்தால் குவிய, கண்களில் அன்று கண்ட மலர்ச்சியுடனே என்னைப் பார்த்தாள். ஒரே ஒரு நிமிஷம் தான். பிறகு மெதுவாக "வா" என்பதற்கு அடையாளமாக தலை அசைத்து விட்டு நடக்க ஆரம்பித்தாள். அவள் திடீரென்று நீருக்குள்ளிருந்து எப்படித் தோன்றினுளோ? எங்கே வரச் சொல்லுகிருள்? போவது சரியா, கூடாதா என்பதைப் பற்றி யெல்லாம் ஒரு சிறிதும் நான் சிந்திக்கவில்லை. இசை சென்ற திக்கிலே ஓடும் நாகம் போல் போகத் தொடங்கினேன். மனசிலே ஒரு நூதன உணர்ச்சி பொங்கிக் கொண்டிருந்தது. என்னை அரியாது பின் தொடந்து போய்க் கடைசியாக இன்று வரை நெஞ்சிலே உருப் பெற்ற மன மாளிகையை அடைந்து விட்டேன்.

ஆகா! கடைசியில் என் கனவு பூர்த்தியாகிவிட்டது. லட்சியமே சித்தித்து விட்டது. இல்லை, இல்லை, இன்னும் கொஞ்சம் பாக்கி இருக்கிறது. அந்த அபூர்வக் கன்னிகை—எங்கே? மறைந்து விட்டாளா? இல்லை, அதோ பஞ்சணையில் எதையோ தேடிக் கொண்டிருக்கிருள்.

இத்தனை வருஷமாக இந்த மாதிரி ஒரு திகைப்பும் மதுரமும் கலந்த அபூர்வ சொப்பனம் போல் நான் சொக்கிப்போனதே இல்லை. இந்த உலகெல்லாம் தேடினேனே, தேடித் தேடி அலைந்து நான் செயலற்று நிற்கையில், தாஞகத் தோன்றி வழி காட்டி வந்து

விட்ட அந்த ஆச்சரியவதியிடம் என்ன பேசுவது? எதிலிருந்து ஆரம்பித்து எந்த முறையில் என் மனக் கனவுகளைக் காட்டுவது? காட்டுவதா! இல்லை பொழிந்து விடுவது?

அவள் மெதுவாக அருகே வந்து "உட்காருங்கள்" என்ருள்.

உட்காரத்தான் எனக்குத் தோன்றியதா? பறக்கச் சிறகிருந்தால் பறந்திருப்பேன். உட்காருவதாம் உட்காருவது!

அபார அழகு படைத்த மாளிகைகளை நான் பார்த்திருக்கிறேன். தெய்வத் தச்சன் மயனுடைய மாளிகைகளையும் காவியத்தில் அனுபவித்தவன் தான். ஆனுலும் பொன்னுலும் மணியாலும், மாணிக்கத்தாலுமா இது நிர்மாணிக்கப் பட்டிருக்கிறது? சும்மா ஒரு வார்த்தையில் புகழ்ந்து விட!

நான் மலைத்து நிற்பதைக் கண்டு வருத்தமாகவே "முதலில் உட்காருங்கள்" என்று வேண்டிக் கொண்டாள்.

என்னுடைய அவசரமும் ஆச்சரியமும் ஒன்று திரண்டு, "இதெல்லாம் உன்னுடையது தானு?" என்று கேட்கத் தூண்டியது. கேட்டும் விட்டேன்.

"ஆம், உங்களுடையது தான்!" என்று என் வார்த்தையையே திருப்பி எனக்குப் பதில் சொன்னுள்.

(4)

அன்று இரவு நெடுநேரம் வரையும் அவள் தன் கதையைச் சொல்லிக்கொண்டிருந்தாள். வானத்து மீன்களும் எங்கள் கதையைக் கேட்டு 'கண் சிமிட்ட' மற

ந்து விட்டனவோ என்னவோ? அவள் வரலாறு—வாழ்க்கை. ஆகா! அப்படி அல்லவா இருக்கவேண்டும் வாழ்வு? ஆயிரத்தில் ஒரு பங்கு இனிமையுடன் கூட எனக்குச் சொல்ல வராவிட்டாலும் கூடுமான வரை அவள் வார்த்தைகளைக் கொண்டே அந்த வரலாற்றைச் சொல்லுகிறேன்.

"இந்துமதி என்று என்னைச் செல்லமாக அம்மா கூப்பிடுவாள். அப்பா என்னை ஒரு நாளும் பெயர் சொல்லிக் கூப்பிட்டதில்லை. ஏனென்றால் என்னை அவர் சதா பக்கத்திலே வைத்துக் கொண்டிருந்தார்!"

இதைச் சொல்லிவிட்டு, நான் சிரிக்கிறேனா, அவளுடைய அப்பா எத்தகைய விசித்திர ஆசை தன்னிடம் வைத்திருந்தார் என்பதையெல்லாம் என்னால் உணர முடிகிறதா என்பதைக் கவனிக்க என்னை நோக்கினாள்.

"இந்துமதி" என்னும் பெயரையே என் நாவு உச்சரித்துக் கொண்டிருந்ததே தவிர வேறு ஒன்றையும் நான் கவனிக்கவில்லை. "இந்துமதி நிறுத்தாமல் சொல்லு" என்று மட்டும் மெதுவாகச் சொன்னேன்.

இந்துமதி சொல்லுகிறாள்: "என் தந்தை ஒரு அபூர்வ ரசிகர். நீங்கள் வேறு எங்கும் அவரைப்போல் மனிதரைச் சந்தித்திருக்கவே முடியாது. என் தந்தை தான் சின்ன வயசிலிருந்தே என் உள்ளத்தில் கனவைக் கொஞ்சங் கொஞ்சமாகச் செலுத்தி வந்தார். ஆம், மதுரக் கனவு என்பது திடீரென்று ஆடிப் பெருக்குப் போல் மனதில் வந்து அடைந்து விடாது. ரத்தத்திலேயே அணு அணுவாக அது ஊறி உரம் பெற்றால் தான் - நம்மைப் போல் - ஆம் — நம் இருவரையும் போல் இந்த மாதிரி அற்புதமான சந்திப்புக்கு இடம் தரும். உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? அந்த

ஆனந்தத்தைப் பொழிந்த இரவு! அடடா! இப்போது நினைத்தாலும் உங்களுக்கே ஆச்சரியமாக இல்லையா? நாம் எப்படிச் சந்தித்தோம். நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? இதற்கு முன்பு இன்னொரு சங் கதியைச் சொல்லவேண்டும். நான் மட்டும் உங்களை வந்து சந்தித்ததாகத் தானே எண்ணிக் கொண்டிருக் கிறீர்கள்? நீங்களும் இங்கே வந்தீர்கள்? இதோ அந்த அறையில். திரும்பிப் பாருங்கள். லேசாக ஞாபகம் வருகிறதா? நான் சாய்ந்த வண்ணம் படித்துக்கொண் டிருந்தேன். நீங்கள் அறைக்குள் நுழைந்ததும் முதலில் உங்களைப்போல் திடுக்கிட்டேன். அப்புறம், அப்புறம் தான் உங்களுக்கு நடந்தது தெரியுமே...'' ஒரு கணம் அவள் பேச்சை நிறுத்திவிட்டு என் முகத்தைப் பார்த் தாள். நானும் மெதுவாகச் சிரித்துக் கொண்டேன். இந்த மாளிகை இதயத்தில் பெற்ற இடம் வெளித் தோற்றத்திற்கு ஒன்றுமே நடந்திராதது போல் தோன் றினாலும் அன்றொரு நாள் வந்தேன். வந்ததோடு மட் டுமா? சொல்வது உண்மைதான். அதோ, அந்த மெத் தையின் சமீபத்தில் அல்லவா காலைத் தொங்கவிட்டு உட்கார்ந்து கொண்டிருந்தேன்.

''சரி, உங்களுக்கு ஞாபகம் வந்து விட்டது. இனி மேலே தொடரலாம்'' என்று ஆரம்பித்தாள் இந்துமதி.

''என் தகப்பனாரைப் பற்றி, ஆம் அவரைப் பற்றித் தானே பேச ஆரம்பித்தேன். செடிக்கு நீர் வார்த்தவர் அவர் தான். ஆதி முதலில் அவர் கண்ட அற்புதக் கனவு தான் இன்று உருப் பெறுகிறது. உம், அம்மா இருந்திருந்தால் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருப்பாள். இருக்கட்டும்.

தந்தையின் போக்கு முதலில் எங்களுக்குப் பிடி க்கவில்லை. எனக்குக் கூடத்தான். ''என்ன இது, யாரும் அறியாமலே நீங்கதான் குழந்தை வளர்க்க ஆரம்பித்

திருக்கிறீர்கள் ஆக்கும்'' என்று அம்மா நொந்து கொள் வாள். அவர் ஒன்றையும் லட்சியம் பண்ணுவதே இல்லை. தன் தொழிலை நடத்திக்கொண்டே இருந்தார். என்ன அது என்று கேட்கத் துடிப்பீர்கள், அவசரப் படாதீர் கள். ஒரு நாள் அவர் சொன்னார்: அம்மா, இமயமலை, இமயமலை என்று கேட்டிருக்கிருயா? அந்த மலையின் இதயத்துக்குள்ளே ஒரு அபூர்வமாகப் பாடும் பறவை இருந்ததம்மா. அந்தப் பறவைக்கு ஒரு நாள் தாங்க முடியாத மகிழ்ச்சி வந்துவிட்டது. ஆனந்த மேலீட் டினால் அது தன் சக்தி அனைத்தையும் செலுத்தி பாடத் தொடங்கியது. பாடிக்கொண்டே இருந்தது. அந்த மலையே அதைக்கேட்டு கண்ணீர் வடித்தது, ஆனந் தக் கண்ணீர்தான். இந்த அதிசயத்தைக்காண உலகமே திரண்டு விட்டது. எங்கெங்கிருந்தெல்லாம் வந்து சேர் ந்தார்கள். கடைசியாக என்ன ஆயிற்றுத் தெரியுமா? திடீரென்று அந்த அருமையான கானம் நின்றுவிட்டது. உருகி வந்த மலையும் சட்டென்று மாறி இறுகி விட்டது. கல்லாகி விட்டது. வந்தவர்கள் எல்லோரும் ஏக்கத் தோடு நின்று கொண்டே இருந்தார்கள். 'இந்தக் கல் லும் கரையாதா' என்று தவியாய்த் தவித்தார்கள். ஆனால் கல் நெஞ்சம் கொண்ட மலை அவர்கள் துக் கத்தைக் கவனிக்கவே இல்லையம்மா'' அப்பா சொன்ன இந்தக் கதையைக் கேட்டுவிட்டு நான் சொன்னேன். ''எப்படி மலையைக் குற்றம் சொல்வது, பாடும் பறவை தான் கல் நெஞ்சம் கொண்டது. அதுதானே பாடாமல் நிறுத்திக் கொண்டது'' என்றேன். ''இல்லையம்மா, கல்லு, கரையாத காரணம் இன்றைக்கு உனக்குத் தெரி யாது'' என்ருர். உண்மைதான், அன்று எனக்குத் தெரியவில்லை. கல்லிலும் முள்ளிலும் நன்ருக அடி பட்ட பிறகு தான் கால்களுக்கும் புத்தி வந்தது. வழி யும் தென்பட்டது.

என்ன நான் சொல்வது உங்களுக்குக் கொஞ்சம் கொஞ்சம் விளங்காமல் இருக்கலாம். பரவாயில்லை. எல்லாமே என்றைக்குமே விளங்கி விடுவதில்லை. ஆனால் முழுதும் விளங்கிய பிறகு தான் வீட்டிற்குப் போவது என்று உட்கார்ந்து கொண்டிருந்தால், காலட்சேபம் செய்தவர் மட்டுமல்ல, கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் எல்லாருமே தனியாக நம்மை விட்டு விட்டு போய்விடுவார்கள்.

என் வாழ்வில் ஒரு சிறு பகுதியையாவது உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்று ஆசை, ஆனால் வாழ் நாள் பூராவும் பக்கத்தில் இருந்தால் அதில் ஆயிரத்தில் ஒரு பங்கு கூடச் சொல்ல முடியுமா என்பது சந்தேகமாயிருக்கிறது. அலைகடலைப் பூராவுமே நம் கண்கள் ஒரே சமயத்திலா கண்டு களிக்கிறது? ஓரத்தில் அடிக்கும் அலை வீச்சுகளையே பார்க்கிறோம். சில சமயம் நல்முத்துகள் சிந்தி விழுவதுண்டு. போகிறது, கேளுங்கள்.

தந்தையை நினைத்தால் அவர் இந்த உலகை எந்தக் கண்களோடு கவனித்தார் என்பதைத்தான் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும் என்று ஆவல் தோன்றுகிறது. "அம்மா, அதோ உன் அம்மா வருகிறாள்" என்பார் அம்மாவின் காலடி ஓசையிலிருந்தே. இதைக் கண்டு பிடித்துச் சொல்கிறார் என்பதற்காக நான் ஆச்சரியம் அடையாமல் இருந்தேன். ஆனால், ஒரு முறை சந்தித்த யாராயிருந்தாலும், காலடி ஓசையிலிருந்தே அவர் கண்டு கொள்வதைக் காண எனக்கு அந்த பரீட்சையில் அக்கரை விழுந்தது. பொதுவில் எந்தக் காரியத்தையும் நுட்பமாகக் கவனிக்கும் எனக்கு, நிழலைக் கண்டதுமே ஆளை அடையாளம் சொல்ல ஆரம்பித்ததைப் பார்த்ததும் திகில் உண்டாகி விட்டது. ஒரு நாள் பயந்துபோய் ஆனால் தைரியமாகவே கேட்டேன்,

"அப்பா, உங்களுக்கு பில்லி சூன்யம் ஏதாகிலும் தெரியுமா?" என்றேன்.

அப்பா சிரித்தார். "பூசாரியை ஏய்க்கிற சாமிகளைத் தெரியும், ஆனால், பெற்ற பிள்ளையை ஏமாற்றுகிற ஆசாமியை நான் பார்த்ததில்லை அம்மா" என்றார். பிறகு பேச்சு வேறு திக்கில் திரும்பியது. என்னவென்று சொல்வேன். என் விஷயத்தில் அவருக்கிருந்த அன்பு எல்லையற்றதாக இருந்தது. பார்வையிலிருந்தே உள்ளத்தைத் தெரிகிற முறையை கடைசியாகக் கற்றுக்கொடுத்தார். யாராயிருந்தாலும் சரி. சும்மா முகம் தூக்கி பார்த்து விட்டால் போதும். அவன் ஆறு மாசத்துக்குப் பிறகு என்ன செய்வான் என்பதையெல்லாம் அப்படி அப்படியே, புத்தகத்தைப் பார்த்து படிப்பது போல் சொல்லி விடுவார். இதைச் சொல்லிக் கொடுத்தது கடைசியில் என்று சொன்னேன். இல்லை அதற்குப் பிறகு இன்னொன்றும் சொல்லிக் கொடுத்தார்.

அது தான் கனவின் மூலமே போய் விடுவது. உதாரணமாக நீங்கள் கண்ட கனவு பலித்தது போல. ஏன் நம் கனவு என்றுதான் சொல்லக்கூடாதோ? நீங்கள் உண்மையைச் சொல்லுங்கள். என்றாவது ஒரு நாள் பனிப் படலம் போல் சாயையாகத் தோன்றிய இடம் இது வல்லவா? இதற்கு முன் இங்கு அடி எடுத்து வைக்காவிட்டாலும், முன்பு வந்தது போன்ற உணர்ச்சி உங்களுக்கு ஏற்பட வில்லை? உங்கள் கண்களாலும், காதுகளாலும், சந்திர சூரியர் சாட்சியாக என்னை அறியா விட்டாலும், இதற்கு முன் என்னைப் பார்த்திருக்கிறீர்களா, இல்லையா? சொல்லுங்கள், யோசனையின்றி எண்ணுவதைச் சொல்லுங்கள்."

இந்துமதி பேச்சை நிறுத்தினாளா? அல்லது தேனமிர்தத்தைப் பொழிந்துகொண்டிருந்த, இல்லை, தெய்வ

கானத்தை பரப்பிக் கொண்டிருந்த ஏதாவது இசைக் கருவி 'கம்' மென்று அடங்கி விட்டதா?

ஒரே ஒரு சந்தேகத்தை முதலிலேயே கேட்டுவிட வேண்டும் என்று துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தேன். அன்றைய இரவு — புகை போன்ற ஆகாயம் — பிடில் நாதம் — எல்லை யில்லா இன்பம் — மனோகர உணர்ச்சி—இதெல்லாம் இந்துமதிக்கும் ஏற்பட்டதா?

இந்துமதி சொல்லுகிறாள், "இன்று நம் உள்ளங்களின் வேகத்தை விவரிக்கவே இயலாது. எப்படிப் பேசுகிறோம் என்பது ஆச்சரியமாக இருக்கிறது. மௌன நிலையில், மனங்குவிந்து பதுமைபோல் இருக்க வேண்டியவர்கள் நாம். சரி, இப்போது சொல்ல வந்த விஷயம் வேறு. மாயக் கன்னிகையை நாடிச் சென்ற மந்திரவாதியைப் பற்றிக் கேட்டிருக்கிறீர்களா? அன்று இரவிலே அந்த மாய லோகத்திலே போய் அடங்கி விட்ட மந்திர வாதியை எப்படி மீட்டு வருவது என்பதைக் குறித்துத்தான் யோசித்துக் கொண்டிருந்தேன். ஐயோ பாவம். மந்திரவாதியிடம் எப்படிப் போவது என்பதை எண்ணிக்கொண்டு விழித்திருக்கையில் தான் நீங்கள் வந்து சேர்ந்தீர்கள் இங்கே........"

என் மனசு பட படத்தது. மந்திரவாதி என்றதும், "எங்கே அந்தப் புது ஆராய்ச்சியில் இந்துமதி இறங்கி விடப் போகிறாளோ?" என்று, "நீ எங்கேயும் போகக் கூடாதாக்கும்! இது என் முதல் உத்திரவு" என்றேன்.

"நானும் அந்த உத்திரவைத்தான் உங்களுக்குப் போடுகிறேன்" என்றாள் இந்துமதி.

பூங்கொடி

பூசாரிக்கவுண்டனைத் தெரியாதவர்கள் அந்தப் பக்கத்திலே யாருமே கிடையாது. அவனுடைய தாயாரும் அவனும் புதூரிலே குடியிருந்தார்கள். அவனுக்குச் சொந்தத்திலே ஒரு வீடும் ஒரு இரட்டை மாட்டு வண்டியும் இரண்டு ஆலம்பாடிக் காளைகளும் இருந்தன. தினசரி பொள்ளாச்சிக்கு பாரம் போட்டுக்கொண்டு போவான். சந்தை நாளில் சவாரி. ஒரு அலாதியான வாழ்க்கை, நல்ல சுபாவம். வயது இருபதுதான். யாரையும் வசிகரப் படுத்தும் காந்த சக்தி. புதூரிலே ஆண்கள், பெண்கள் குழந்தைகள் அத்தனை பேருக்கும் அவனிடம் பிரியம். பொள்ளாச்சி சந்தைக்குப் போவதானால் 'நான் முந்தி நீ முந்தி' என்று பூசாரியின் வண்டியில் தொத்திக் கொள்வார்கள். பூசாரியின் வண்டி 'மெயில் மெயில் மாதிரி போகும்' என்பார்கள். 'யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே' என்பதுபோல, பூசாரியின் வண்டி தூரத்தில் வரும்போதே மாடுகளின் கழுத்திலுள்ள மணிகள் 'கல கல' வென சப்திக்கும். பூசாரியைக் கொஞ்சம் தட்டிக் கொடுத்தால் அவனுக்கு 'ஜோர்' கிளம்பிவிடும். தெம்மாங்கு பாடிக்கொண்டே மாடுகளைத் தட்டி விடுவான். வண்டி கனவேகத்தில் பறக்கும். பூசாரியின் வண்டி வருஷம் பூராவும் எங்கேயாவது போய்க்கொண்டும் வந்துகொண்டுமிருக்கும். அவனுக்கு வீட்டில் சும்மாவே இருக்கப் பிடிக்காது. வெற்று வண்டியையாவது எங்காவது ஓட்டிக்கொண்டு போய்த் திரும்புவான்.

நீங்கள் பூங்கொடியைப் பார்த்திருக்கிறீர்களா? பார்த்திருக்கமாட்டீர்கள். அவள் பூசாரியின் மாமன் மகள். அவளது மருண்ட விழியையும், கொண்டையில்

மருக்கொழுந்தைச் சொருகியிருக்கும் பாவனையையும், தேகக் கட்டையும், கபடமில்லாப் பேச்சையும், அழகிய தோற்றத்தையும், பார்த்தால் நீங்கள் சொக்கிப் போவீர்கள். ஏன் பூசாரியே அவள் அழகில் சொக்கிப் போயிருந்தான். அவனுக்கு அவளிடம் ஆசை கொஞ்ச நஞ்சமல்ல. பொள்ளாச்சியிலிருந்து வந்தால் வெறுங் கையோடு வரமாட்டான். குட்டி பூங்கொடிக்கு ஏதாவது தின்னவோ, அல்லது வேறு அவளுக்குப் பிரியமான சாமான்களோ வாங்கி வருவான். ஊரிலிருக்கும் போது 'தேன் வண்டு மலரைச் சுற்றித் திரிவதுபோல' அவளையே சுற்றிக்கொண்டிருப்பான். அவளுக்கு அவனிடம் ஆசை இருந்ததோ என்னவோ! அதனுலே அவள் ரொம்பவும் கர்வப் பட்டுக்கொண்டிருந்தாள். பூசாரியின் மாமனுக்கு புதூரிலே ஒரு வீடும் கொஞ்சம் பூமியும் உண்டு. ஆனால் அழுத்தக்காரன். ஊரிலே அவனுக்குப் 'பிசினறி' என்று பெயர்.

உரிய காலத்திலே பூசாரியின் செலவில் பூங்கொடிக்கும் பூசாரிக்கும் கல்யாணம் நடந்தது. புதுத் தம்பதிகளை வாழ்த்தாதவரே கிடையாது. நல்ல பொருத்தம் என்று எல்லாரும் சொன்னார்கள்.

புது மணம் ஆன புதிதில் பூங்கொடிக்குக் கணவனோடு பேச ஏன், எதிரில் நிற்பதற்கே ரொம்ப வெட்கமாயிருந்தது. கலியாணம் ஆவதற்கு முன் அவர்கள் தனியாக சந்திக்கையில் எப்படியெல்லாம் விளையாட்டு வேடிக்கைப் பேச்சுப் பேசுவாள். அதெல்லாம் இப்போது திடீரென்று ஏன் மேலுக்கு வராமல் உள்ளத்துக்குள்ளேயே அலைபோல் அடங்கிக் கிடக்கிறது என்பதை நினைத்தால் அவளுக்கே ஆச்சரியமாயிருக்கும். முன்பெல்லாம் ஏதோ ஒரு விந்தைக் கனவை எதிர் பார்ப்பதுபோல் மனம் கட்டுக்கடங்காத பரவச நிலை கொள்ளுமே? ஆனல் இன்றே? இந்த அற்புதம் எப்படி நிகழ்ந்தது?

அதேமாதிரிதான் பூசாரியின் மன நிலையை விவரிப்பதும் அசாத்தியமான காரியம். அவன் மட்டும் ஒரு கவியாக இருந்திருக்கும் பட்சத்தில் பூங்கொடியைப் பற்றி அருமையான பல காவியங்கள் இயற்றியிருப்பான். அவன் ஒரு சித்திரக்காரனுக இருந்திருந்தாலும் அதி உன்னதமான அவள் எழிலைச் சிந்தும் சித்திரங்களை வரைந்து தள்ளியிருப்பான். ஆனல்—அந்தோ—அவன் சாதாரணப் பூசாரிக் கவுண்டன்தான்! அன்பு—காதல்—இன்பம் முதலியவைகளைப்பற்றி அவனுக்குப் பேசத் தெரியாது. நண்பர்களோடு விவாதிக்கவும் தெரியாது. காவியத்து நாடகத்துக் காதலை அவன் கொஞ்சமும் அறியாதவன்! இருந்தாலும் குளிர் நிழலில், தெய்வ கன்னிகைபோல் நிற்கும் பூங்கொடியைக் காணக்காண அவனுடைய மனம் கவிதை வெறி கொண்டு ஆனந்த நிலையில் தத்தளிக்கும். ஒரு ஆறு மாதத்தில் பூங்கொடியும் எப்படியோ மெல்ல மெல்ல மொக்கு விரிந்து மலர் ஆவது போல் தன் நாணத்தை விட்டுப் பேச ஆரம்பித்து விட்டாள்.

"என்ன! கோட்டான் மாதிரி குந்திக்கிட்டு இருக்கிறயே, நான் சொல்றது காதிலே உளுந்துதா?"

"உளுந்துது"

"பின்னெ என்ன; இந்த ஆடி நோம்புக்கு வாரதுக்கு?"

"நாந்தா, அப்பவே சொன்னே. உம்பேச்சை கேட்டுக்கிட்டு இந்த ரண்டு நோம்புக்கும் உம் பின்னேடே வந்தே. நீதா சொன்னது சொன்னபடி நடந்தியா? உங்கொப்பந்தா நடந்தாஞ?"

"எங்கப்பஞ் சங்கதி உனக்குத் தாஞ தெரியும்! ஊரே சொல்லுது. உம்மேலே ஆணே; இந்த ஆடிக்கு நீ கட்டாயம் வரோணும்."

"அது முடியாது, உங்கப்பே, காங்கயம் மாடுக வாங்கிக் கொடுக்கிறேண்ணு சும்மா சும்மா ஏமாத்த ரானே! நீ அவன் மகதானே"

"நீ இப்ப வருவயா மாட்டயா?"

"ஊஹூம்"

அடுத்த ஆடியும் வந்தது. "என்ன! பூங்கொடி நான் ஊருக்கு வாரே, உங்கொப்பங்கிட்டே சொல்லி நல்ல காங்கயத்துக் காளைக ரண்டு வாங்கிக் குடுக்கச் சொல்லு. இல்லாட்டிப் போஞ எனக்கும் உனக்கும் ...."என்று சொல்லி வைத்தான்.

பூசாரியின் மாமஞ இதற்கெல்லாம் மசிகிறவன். காளைகள் விஷயத்தையே அடுத்த ஆடிப்பண்டிகைக்கு ஒத்திப் போட்டு, ஒரு விதமாக மாப்பிள்ளையும் பெண்ணையும் அனுப்பி வைத்தான். பூங்கொடி தன் புருஷனுக்காகச் செய்த முயற்சி அத்தனையும் வீஞயிற்று. அடுத்த பண்டிகையையும் முன்போலவே தட்டிக் கழித்து விட்டான். பூங்கொடி தகப்பனிடம் இதைப்பற்றிப் பேசிப் பார்த்தாள். கண்ணீர்விட்டுக் கதறிப் பார்த்தாள். அப்பன்சாமி ஒன்றுக்கும் இடங் கொடுக்கவில்லை, "அவன் வந்தா வாரான், வராட்டிப் போரான் மிச்சமாச்சு. இப்பொத்தா ரண்டு ஆடி, ரண்டு தீவாவளியாச்சே. இன்னும் என்ன அவனுக்கு. சும்மா வாரதுண்ணு வருட்டும். காளைக வாங்க முடியாது" என்று சொல்லிவிட்டான்.

இந்த தடவை பூசாரி சீராடிக் கொண்டான். பூங்கொடி அப்பன் வீட்டோடு இருந்தாள். அவளை அவன் அழைக்கவில்லை. அவன் மாமன் வீட்டுப் பக்கமே வருவதில்லை. பூங்கொடி எப்படியாவது அப்பனைச் சரி செய்து காளைகள் வாங்கி விடுவாள் என்று நினைத்தான். ஆறு மாதங்களும் சென்றன. அவள் எண்ணம் ஈடேறவில்லை. பாவம், கணவனே வைராக்கியத் தோடிருக்கிருன். அவனிடம் நெருங்கவும் பயப்பட்டாள்.

அவன், "என் முகத்திலேயே விழிக்கக்கூடாது!" என்று வேறு சொல்லியிருந்தான்.

பூசாரிக்கும் மனம் உடைந்து விட்டது. ஊருக்கே அதிகமாக வருவதில்லை. ஆலம்பாடி மாடுகளையும் விற்று விட்டான். பைத்தியம் பிடித்தவன் மாதிரி அலைந்தான். பூங்கொடியின் மேல் அளவில்லாத கோபம். "காளைகள் வாங்கா விட்டால் போகுது. இவ அப்பன் ஊட்டிலிருந்து வாரதுக்கு என்னவாம்" என்று பிதற்றிக்கொண்டு இருந்தான். கடைசியில் ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் எங்கேயோ போய் விட்டான்.

இரண்டு வருஷங்கள் அவனைப் பற்றிய தகவலே இல்லை. பூங்கொடி அவனை நினைத்துக்கொண்டு துவண்டு வாடிப் போனாள். அவள் உள்ளம் வறண்டு விட்டது. அவளது அகமும் முகமும் மலர்ந்து வெகு நாளாயிற்று. ஊரார் தன்னையும், அப்பனையும் ஏசுவதை அவளால் சகிக்கவே முடியவில்லை. தந்தையோ அவளைச் சட்டை செய்வதில்லை. பூசாரியை நினைத்து நினைத்து அழுவாள். பழைய சம்பவங்களையெல்லாம் நினைந்து உருகுவாள்.

ஆனால் என்றைக்காவது ஒரு நாள் திரும்பி வருவான் என்ற நம்பிக்கையின் மீதே அவள் உயிரோடிருந்தாள். சீக்கிரம் அவன் வரவேண்டும் என்று தனக்குத் தெரிந்த தெய்வங்களையெல்லாம் வேண்டிக் கொண்டாள். கொஞ்ச நாளாகவே அவள் தீவிரமாக வேலைகளில் ஈடுபட்டிருந்தாள். பால் தயிர் விற்றுப் பணம் சேர்த்தாள். அவள் உள்ளம் வறண்டு போயிருந்தாலும் ஒரு தனி உற்சாகத்தோடு தான் வேலை செய்து வந்தாள்.

இன்று பூங்கொடியைப் பார்த்தவர்கள் ஆச்சரியப் பட்டார்கள். இன்றுதான் அவள் முகத்தில் ஆனந்தம்

தாண்டவமாடியது. வெகு நாளைக்குப் பின் தலைசீவிக் கொண்டை போட்டுக் கொண்டிருந்தாள். முன் போலவே ஒரு கூடை மருக்கொழுந்தை தலையில் திணித்துக் கொண்டிருந்தாள். பேச்சுக் கலகலப்பாக இருந்தது. எல்லோரையும் அலட்சியமாகப் பார்த்துக் கொண்டே இடுப்பில் குடத்தை வைத்துக்கொண்டு ஒய்யாரமாக நடப்பதைக் கண்டால் ஆச்சரியமாக இருக்கிறது!

ஆம், அடுத்த வாரம் ஆடிப் பண்டிகை. அவள் சிரமப்பட்டுச் சேர்த்து வைத்த இரண்டு நூறு ரூபாய்களை அப்பனிடம் கொடுத்து காளைகள் வாங்கிவர காங்கயம் அனுப்பியிருக்கிருள். அவள் வேண்டிக்கொண்ட தெய்வங்களுக்கெல்லாம் பொங்கல் வைக்கவேண்டும். எறி தேங்காய் போடவேண்டும். அவளுக்குப் பேச நேரமேது! ஆனாலும் இடையிடையே சிங்கப்பூர் மச்சானைக் கேலி செய்து கொண்டிருந்தாள். அது யார் சிங்கப்பூர் மச்சான் என்று கேட்கத் தோன்றுகிறதா? வேறு யாருமில்லை, பூசாரிதான்.

மாட்டை விற்ற பணத்தை எடுத்துக்கொண்டு சிங்கப்பூர் போய்ச் சேர்ந்தான் பூசாரி. அங்கே மூட்டைகள் தூக்கிக் காலங் கடத்திஞன். அடிக்கடி பூங்கொடியை நினைத்துக்கொள்வான். மனங் குமுறுவான் உடனே திரும்பி வரவும் முடியவில்லை. திடீரென ஜப்பான் சண்டை மூண்டது. அங்கிருந்து ஓடி வந்தவர்களோடு இவனும் சேர்ந்து கொண்டான். பல நாள் காய்ச்சலோடு கஷ்டப் பட்டுக்கொண்டு சென்னை ஆஸ்பத்திரியில் இருந்தான். குணமானபின் நேற்றுத்தான் சர்க்கார் செலவில் ஊருக்கு வந்து சேர்ந்தான்.

காங்கயம் காளைகள் அவனுக்கு முன்ஞல் ஊர் வந்து சேர்ந்து விட்டன!

கணவனை ஊருக்கு அனுப்பி வைத்த இந்த யுத்தத்தை பூங்கொடி வாயார வாழ்த்திஞள்.

கலியாணக் கதை

என்னுடைய நண்பர் இந்தக் கதையைப் படித்து விட்டு ஒரு முகவுரை இதற்கு எழுதி விடும்படி என்னிடம் சொன்னார். சாதாரணமாக நாவல்களுக்கும் நவீனங்களுக்கும் முகவுரை எழுதுவதை நானும் பார்த்திருக்கிறேன். கதைக்கொத்துகளுக்கு முகவுரை எழுதுகிறார்கள். இந்தச் சிறு கதைக்கும் ஒரு சின்ன முகவுரை வேண்டுமா? அதுவும் நானே எழுதிக்கொள்ளவும் வேண்டுமா என்பதை யோசிக்கையில் பெர்னாட்ஷாவின் ஞாபகம் வந்தது. அவருடைய நாடகங்களை விட அவர் அந்த நாடகங்களுக்கு எழுதும் முகவுரை சிலாக்கியமாயிருக்கிறது என்று சிலர் புகழ்வதைக் கேட்டிருக்கிறேன். அதனால்தான் நாடகத்தை விட முகவுரை பெரிதாக ஷா எழுதிவிடுகிறாராம். ஒரு வேளை என் கதைகளை விட என் முகவுரை நன்றாயிருந்து, அதன் மூலம் என் பேரும் புகழும் பெருகட்டும் என்ற நோக்கத்தோடு என் நண்பர் ஒரு வேளை சொல்லியிருக்கக் கூடுமல்லவா? அது ஒரு காரணமாக வைத்துக்கொண்டாலும், பாலுக்குப் பாத்திரம் போல் கதைக்கு இந்த முகவுரை இன்னொரு விதத்தில் உதவியாயிருக்க வேணும் என்பது என் அந்தரங்க ஆசை.

எத்தனையோ கலியாணங்களை பார்த்திருக்கிறேன். ஏன்? எனக்கும் ஒரு தடவை கலியாணமானதாக ஞாபகம். (ரொம்ப நாளாகி விட்டதால் இப்படிச் சொல்கிறேன்) இது தவிர காதல் கலியாண வைபவங்களை பல நாவல்களிலும் நான் படித்திருக்கிறேன். அவைகள் எல்லாம் இம்மே நடந்த கலியாணத் தம்பதிகளின் மன நிலைக்கு ஒத்துக்கொள்ள வில்லை. அப்படி என்ன புதுமை இதில் இருக்கிறது என்றால், ஓகோ!

நான் சொல்லப் போவதைக் கண்டு கொண்டீர்கள் அல்லவா? இனி என் முகவுரை தேவையில்லை. ஊம், தைரியமாகப் படியுங்கள்.

செல்வச் சிரஞ்சீவி சென்னியப்பனுக்கும் சௌபாக்கியவதி சிவகாமிக்கும் சுபயோக சுப லக்கினத்தில் கலியாணம் நிச்சயிக்கப்பட்டு சிறப்பாக நடந்தேறியது. இந்தக் கலியாணத்தில் சென்னியப்பனுக்காவது, சிவகாமிக்காவது துளி கூட விருப்பமில்லை. 'நான் அத்தை மகளைக் கட்டிக்கொள்ள மாட்டேன்' என்று ஒரே பிடிவாதம் செய்து பார்த்தான் சென்னியப்பன். 'நான் மச்சானைக் கட்டிக்கொள்ள மாட்டேன்' என்று சிவகாமியும் மூன்று நாள் பட்டினி கிடந்தாள். இவர்கள் பேச்சை யாராவது கேட்டால் தானே? கலியாணம் என்னவோ வலுக் கட்டாயமாக நடந்து விட்டது.

சந்திராபுரம் பெரிய பண்ணாடி செல்லப்ப கவுண்டர் பிடிவாதத்தில் பேர் போனவர். நினைத்த காரியத்தை முடித்து விட்டுத்தான் மறு வேலை. அவருக்குப் படிப்பு அவ்வளவாகக் கிடையாது. இருந்தாலும் நியாய அநியாயம் தெரிந்து பேசுவதில் அவருக்கு இணை அந்தப் பக்கத்தில் யாருமே கிடையாது. "எனக்கு இவ்வளவு வயசு ஆச்சுதுண்ணு பேறு, இன்னும் கையெழுத்துப் போட்டது கிடையாது" என்று தன்னைப் பற்றி அவர் பெருமையாகச் சொல்லிக்கொள்வார். கையெழுத்துப் போட்டவன் கடன்காரன் என்பது அவருடைய எண்ணம்.

சென்னியப்பன் அவருடைய மகன். சிவகாமி அவருடைய தங்கையின் பெண். அவள் சிறு குழந்தையிலிருந்து மாமன் வீட்டில்தான் வளர்ந்து வந்தாள். சிறு வயதில் இருவரும் கொஞ்சங்கூட ஒற்றுமையாக இருந்ததில்லை. சேர்ந்திருந்தால் சண்டை தான். எப்

பொழுதும் கீரியும் பாம்புமாக இருப்பார்கள். அவளால் அவன் பட்ட அடிகள் எண்ணி முடியாது. அவனிடம் அவள் பெற்ற உதைகள் கொஞ்ச நஞ்சமல்ல. சென்னியப்பன் கிராமப் பள்ளிக்கூடத்தில் மூன்ரும் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த போது அவள் இரண்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். பள்ளிக்கூடத்திற்கே ஒழுங்காகப் போக மாட்டான். அப்படிப் போனலும் மற்ற பிள்ளைகளிடம் கலகம் செய்து கொண்டுதான் வருவான். சிவகாமி இதைப் பற்றி மாமாவிடம் புகார் சொல்லுவாள். அவ்வளவுதான், அவனுக்கு அன்று இரவு பட்டினி. அதோடு உடம்பெல்லாம் வீங்கிப் போகும். ஒரு நாள், சிவகாமி விளக்கடியில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தாள். அவள் படிப்பது குருட்டுப் பாடமாக இருந்தாலும் நாலு வீடு கேட்கும்படி சத்தம் போடுவாள்.

'கூடை தலே மேலே குடி வாழ்க்கை கானகத்தில்' என்று உரக்கச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

வீதித் திண்ணைத் திண்டிலே சாய்ந்து கொண்டிருந்த செல்லப்ப கவுண்டர், "சிவகாமி அந்தக் கடங்காரப் பயல் எங்கே?" என்று கேட்டார். "அப்போது நல்லதங்கா......ஏனுங்க மாமா, மச்சானு? இண்ணக்கி பள்ளிக்கூடத்துக்கே வல்லே" என்ருள்.

"அந்தப் பயலுக்கு ஒதைக்கிற ஒதையெல்லா எங்கே போவுது. அவன் சோறுண்டாச்சா?"

"இல்லீங்கோ"

செல்லப்ப கவுண்டர் துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு கிளம்பினர். ஊரைச் சுற்றி வலம் வந்தார். ஊருக்கு மேல்புரம் பிள்ளையார் கோவில் மைதானம். அந்த மைதானத்தில் ஏழெட்டுப் பிள்ளைகள் கிளித்தட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

நல்ல நிலவு; பகல் போல காய்ந்து கொண்டிருந்தது. விளையாட்டும் மும்முரமாக இருந்தது. செல்லப்ப கவுண்டரைக் கூட யாரும் கவனிக்க வில்லை. கிளிக்குத் தப்பிக்கொண்டு வந்த சென்னியப்பன் செல்லப்ப கவுண்டர் மேல் மோதிக் கொண்டான். அவர் அவனைக் கையில் பிடித்த போது தான் சுய ஞாபகம் வந்தது. இனி இந்தப் புலிக்குத் தப்ப முடியாதென்று கண்டு கொண்டான். மற்ற பிள்ளைகள் இருந்த இடம் தெரிய வில்லை. அன்று அவனுக்குப் பூஜை பலமாகத் தான் நடந்தது. அதோடு ராத்திரி ரொம்ப நேரம் வரையிலும் ஒரே காலில் நிற்க வேண்டி இருந்தது. இந்த விஷயங்களில் எப்போதுமே அவனுடைய தாயார் தலையிடுவது கிடையாது. அவள் தலையிட்டால் பூஜை இரண்டு பங்கு அதிகமாகி விடும் என்பது அவளுக்குத் தெரியும்.

சென்னியப்பனுக்கு இதெல்லாம் பிரமாதமாக இல்லை. அவன் தலைகீழாக வேண்டுமானாலும் நிற்கத் தயார். ஆனால் அவள் பார்த்துக் கொண்டு போனாளே அந்தப் பார்வை, பரிகாசம் கலந்த பார்வை அதுதான் அவனுக்குச் சகிக்க வில்லை. செல்லப்ப கவுண்டர் அந்த இடத்தில் அப்போது இல்லாமலிருந்தால் அவளை ஒரே வெட்டாக வெட்டித் தள்ளியிருப்பான். அவ்வளவு கோபம் அவனுக்கு.

கிழக்கு வெளுக்கு முன்னமே கவுண்டர் தோட்டத்திற்குப் போய் விட்டார். சென்னியப்பனும் அதிகாலையில் விழித்துக் கொண்டு அதைத்தான் எதிர் பார்த்திருந்தான். சிவகாமி இன்னும் எழுந்திருக்க வில்லை. மெதுவாகப் போய் அவளை அப்படியே மயிரைப் பிடித்து இழுத்து உட்கார வைத்து இரண்டு கன்னத்திலும் இரண்டு அறைகள் பளீர் பளீரெனக் கொடுத்து விட்டு நடையைக் கட்டினான். அதிகாலை

யில் அவளுடைய ஒப்பாரியைக் கேட்டு அவனுடைய தாயார் ஓடி வந்தாள். அவள் தன் மருமகளை அதிக நேரம் சமாதானப் படுத்த வேண்டியதாயிற்று!

இவர்களுடைய இளம் பருவம் பூராவும் இப்படித் தான் சண்டையாகவே கழிந்தது. வயது வந்த பின் சிவகாமி தன்னுடைய ஊராகிய புதூருக்குப் போய் விட்டாள். அப்போது தான் சென்னியப்பனுக்கும் தலையிலிருந்த பாராங்கல்லை இறக்கி வைத்த மாதிரி இருந்தது. அவனுடைய தாயார் தான் அடிக்கடி சொல்லுவாள், "இவங்க ரெண்டு பேருக்கும் கண்ணாலம் சேஞ்சு வச்சா எப்படிப் பொளப்பாங்க. இவங்க சண்டையைத் தீக்கரதுக்கு நாலு பேர் வேணுமே!" என்று. "இந்தக் கருமியைக் கட்டிக்க மாட்டேன்" என்பான் அவன்.

"இந்தச் சிடு மூஞ்சியை நான் நல்லாக் கட்டிக்குவனு" என்று அவள் அழகு காண்பிப்பாள்.

வாய்ப் பேச்சு எப்பொழுதும் வாயோடு நிற்பதில்லை. கை கலந்த பிறகு தான் முடியும். இது பழைய கதை.

செல்லப்ப கவுண்டர் சிவகாமியைத் தன் மகனுக்குக் கட்டி வைக்க வேண்டுமென்று தீர்மானம் பண்ணுவதற்கு ஒரே காரணந்தான் உண்டு. தன் தங்கையின் சொத்துப் பூராவும் தன் மகனுக்குக் கிடைக்கும் என்பது தான். அவர் நினைத்தால் தான் முடிக்காமல் விடுவாரா? தங்கையையும் மைத்துனரையும் வரவழைத்து நாலு பேர் பெரியவர்களையும் வைத்துக் கொண்டு கலியாணப் பேச்சை ஆரம்பித்தார். சோசியமெல்லாம் பார்த்தார்கள். ரொம்பப் பொருத்தமாகத் தான் இருந்தது.

"என்ன சொல்றீங்க" என்று மைத்துனரைப் பார்த்துக் கேட்டார்.

"எல்லாம் உங்க தங்கச்சியைக் கேளுங்க. அவ சொன்னாச் சரி."

"நீ என்ன சொல்றேம்மா?"

"சாதகம்...கீதகம் எல்லாம் பொருத்தமாகத் தான் இருக்குது. அவ மச்சானைக் கட்டிக்க மாட்டேங் கருளே!"

"அட, போ, பைத்தியமே. எங்கேயாச்சும் எருத்தெக் கேட்டு சலங்கை கட்டுவாங்களா? அந்தப் பயனுங் கூட அப்படித்தான் சொல்ருன். அவுங்க சொல்ருங்கண்ணு முறமையை விட்டுக் கொடுக்கவா சொல்றே"

"என்னமோ அப்பா சின்னஞ் சிறுசுகள் ஒத்துமை யாய்ப் பொழைக்க வேண்டாமா?"

"அதுக்கென்ன நாலு பேரைப் பாத்து அதுகளும் தெரிஞ்சுக்குது. நீ ஏம்மா அதைப் பத்தி கவலப் படறே. வீணு எம் விரோதத்தை தேடிக்காதே, சொல்லியிட்டேன்" என்று சொல்லி தன் கடைசி ஆயுதத்தைப் பிரயோகித்தார் கவுண்டர். அவர்களும் கடைசியாக, "நாம்ப ஒண்ணுக்குள்ளே ஒண்ணு விரோதம் பண்ணிக்கிட்டா நல்லாவா இருக்கும்?" என்று ஒப்புக் கொண்டார்கள்.

தங்களுக்குப் பிரியமில்லாத காரியத்தில் கட்டா யப் படுத்துகிருர்களே என்று அவனோ அல்லது அவளோ தூக்குப் போட்டுக்கொண்டு சாகவில்லை. அவர்களுடைய பண்படையாத இளம் நெஞ்சில் தோன்றிய எண்ணத்தை வெளியிட்டார்கள். பெற் ருேர்கள், அவர்களுடைய இன்ப துன்பங்களில் அக் கரையுடையவர்கள், அதற்குச் செவி சாய்க்கவில்லை.

நடந்தபடி நடக்கட்டும் என்று கலியாணச் சடங்குகளில் கூட தங்கள் வெறுப்பு விருப்புகளைக் காட்டிக் கொள்ளவில்லை. ரொம்பவும் சாதாரணமாகத் தான் நடந்து கொண்டார்கள். பெற்றோர்களுக்கு அது எவ்வளவோ திருப்தி.

“நீங்கொ எண்ணுஞ் சிரஞ்சீவியா, பாக்கியம் பதிஞறும் பெத்து குழந்தை குட்டிகளோடே சௌக்கியமா இருக்க வேணும். அண்ணக்கி எழுதின படிதா எல்லா நடக்கும். நீங்கொ சந்தோசமா பொளையுங்கோ” என்று ஒரு பழுத்த வயோதிகர் அவர்களை ஆசீர்வதித்து அவர்கள் இரண்டு பேர்களுடைய கைகளையும் ஒன்று சேர்த்து வைத்தார். அவருடைய பேச்சும் செய்கையும் மணமக்களை நம்பிக்கை மிகுந்த ஒரு இன்பக் கேணியில் மிதக்கச் செய்தது. நுகத்தடியில் பூட்டிய மாடுகள் இழுத்துத்தானே ஆக வேண்டும்!

கலியாணம் ஆன புதுசில் அவனும் அவளும் ஒருவரோடொருவர் பேச்சு வார்த்தை இல்லாமலிருந்தார்கள். அவளுக்கு மச்சானிடம் பேச ரொம்பவும் வெட்கம். தவிர சிறு வயசிலே மச்சான் தன்ஞல் பட்ட அடிகளை நினைத்துக்கொண்டு எங்கே கடுமையாக நடத்துவாரோ என்ற பயம். அந்த பயத்திஞல் தான் மச்சானைக் கட்டிக்கொள்ள மறுத்தாள். மச்சானிடம் அவளுக்கில்லாத பிரியம் வேறு யாருக்கு இருக்கப் போகிறது?

சென்னியப்பனுக்கும் அந்த எண்ணந்தான். இவளாலல்லவா அவ்வளவு உதை பட்டோம். அவளையே கட்டிக் கொண்டால் ஏசிக் காட்டுவாளே என்பதுதான். அவளிடம் அவனுக்கு ஆழ்ந்த அன்பு உண்டு. அந்த அன்பானது மேலும் மேலும் வளர சந்தர்ப்பமே ஏற்படவில்லை. சிவகாமியை அவன் கலியாணத்திற்கு

மூன் மூன்று வருஷ காலம் பிரிந்திருந்தான். அப்போது அவன் அவளைப் பார்க்கவும் இல்லை. பார்க்கப் பிரியப் படவும் இல்லை. அப்போது அவன் பார்த்த சிவகாமிக்கும் இப்போது அவன் பார்க்கும் சிவகாமிக்கும் எவ்வளவோ வித்தியாச மிருந்தது. அவள் கருப்புத்தான். கருப்பிலும் அழகில்லையா? இப்போது அவனுக்கு அவள் அழகாகத்தான் தோற்ற மளித்தாள். இவளை ஏன் வேண்டாம் என்று சொன்னோம் என தன்னையே நொந்து கொண்டான். ஆனால் அவள் தன்னிடம் பேசாதபோது தான் ஏன் அவளிடம் வலுவில் பேச வேண்டும் என்று அவனும் சும்மா இருந்து விட்டான்.

அவள் அவனைக் காணுதபோது அவன் பக்கத்தில் இல்லையே என்ற ஆசை. அவனைக் காணும்போது பயமும் வெட்கமும் போட்டி போட்டுக்கொண்டு வீட்டுக்குள்ளேயே உட்கார வைத்துவிடும்.

சென்னியப்பனுக்கு தன் அத்தை வீட்டில் சர்வ சுதந்திரமும் உண்டு. அவன் எதையும் செய்யலாம்; எங்கும் போகலாம். அவனும் அதைக் காட்டிக்கொள்ளாமலே ரொம்ப பிகுவாய் நடந்து கொண்டான்.

அவளுடைய தாயாரும் சொல்லிச் சொல்லி அலுத்து விட்டாள். "கலியாணமாகி நாலு மாச மாச்சு இன்னும் வெக்கம் உக்காந்திட்டு இருக்குதா? இனி உம் புருசம் பாடு உம் பாடு" என்று சொல்லத் தொடங்கினுள்.

வேறு வழியின்றி அவளும் இப்போது தலையைக் குனிந்து கொண்டு, புருஷனுக்கு தண்ணீர் கொடுப்பது, சாதம் போடுவது, வெற்றிலைத்தட்டு எடுத்து வைப்பது முதலிய காரியங்களைச் செய்து வந்தாள்.

அன்று சென்னியப்பன் சாப்பிட்ட பின் வெற்றிலைத் தட்டை எதிர் பார்த்து ஆசாரத்தில் நாற்காலி

யில் உட்கார்ந்திருந்தான். அன்று அவள் தாயாரும் வீட்டில் இல்லை. அவள் தட்டை எடுத்துக்கொண்டு வந்தாள். அன்று ஏனோ அவள் கைகள் நடுங்கின. அதிலிருந்தே அவள் மன எழுச்சிகள் வெளிப்பட்டன. அவன் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். "மச்சானுக்கு எம்மேலே கோவமா" என்ற வார்த்தைகள் அவள் வாயிலிருந்து தாமாக வெளி வந்தன. அவளுடைய கண்களிலிருந்து நீர் ஊற்றுப்போல பொங்கி வந்தது. அதற்குமேல் அவனால் பொறுக்க முடிய வில்லை. அவனுடைய கைகள் அவளை அன்போடு அணைத்துக் கொண்டன.

அவளுக்கு இப்போது வெட்கமெல்லாம் பறந்து விட்டது. மச்சான் என்று அவனை அரித்துக்கொண்டே இருக்கிறாள். இவர்களைப் பார்த்தவர்கள் இப்போது அதிசயப்படுகிறார்கள். பழைய சென்னியப்பனும் சிவகாமியும் இவர்கள் தானா என்று சிலருக்கு சந்தேகம் வந்து விட்டது. அவ்வளவு ஒற்றுமை இந்த இளம் தம்பதிகளுக்குள். ரொம்ப சீக்கிரத்தில் வேர் ஊன்றி விட்டது. பழையதை யெல்லாம் மறந்தே விட்டார்கள்.

எதிரொலி

எங்கள் ஊர்ச் சாலையோரத்திலே ஒரு தண்ணீர்ப் பந்தல் உண்டு. அதைச் சேர்ந்து ஒரு பெரிய நந்த வனம்; ஐந்தாறு தென்னை மரங்களும் சில வாழை மரங்களும், அங்கொன்றும் இங்கொன்றுமாக வாடா மல்லிகை நந்தியாவட்டம் முதலிய பூஞ்செடிகள் காட்சி அளிக்கும். சுற்றிலும் அரளி வேலி கவனிப்பாரின்றி வாடிப் போயிருந்தது.

நந்தவனத்தின் ஒரு பக்கத்திலே சாலையைப் பார்த்து ஒரு நீண்ட சாளை. சாளையின் ஒரு பாகம் ஒரு தனி அறை; அது பூஜை அறை என்பது பார்த்த உடனே தெரியும். முருகக் கடவுள் வேலைப்பற்றி மயில் வாகனத்தில் அமர்ந்திருக்கும் படியான காட்சி அமைந்த ஒரு படம் சுவரில் மாட்டப் பட்டிருக்கும். அதன் கீழ் மாடத்தில் மணி, தட்டம், பஞ்சபாத்திரம் புஷ்பங்கள் இன்னும் பூஜைக்கு வேண்டிய யாவும் வைக்கப் பட்டிருக்கும்.

ஒரு மூலையில் முகட்டிலிருந்து அன்னக் காவடி யொன்று அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும். சாளையின் வெளி முற்றத்திலே நாலைந்து தென்னந் தடுக்குகள் இரட்டையாகப் பின்னப் பட்டுக் கிடக்கும். யாரோ வழிப்போக்கர்கள் வெயிலுக்காக அதில் படுத்துக் களைப்பாறுவார்கள்.

இந்தத் தண்ணீர்ப் பந்தலுக்குச் சொந்தக்காரர் பெரியண்ண கவுண்டர். அவருக்கு வயது அறுபதுக்கு மேலே இருக்கும். பெண்டு பிள்ளை இல்லாதவர். நரைத்த தலை, வெளுத்த தாடி, வலிய உடம்பு. நாங்கள் அவரைச் சாமியார் என்றுதான் அழைப் போம். அவரிடம் எங்களுக்குத் தனி மரியாதை.

அன்னக் காவடியைச் சுமந்து ஊருக்குள் வரும்போது கட்டுக் கட்டான திருநீர்ப்பூச்சும் சந்தனப் பொட்டும் காவியாடையும் அவரைப் பார்க்கும் போதே தெய்வீகக் காட்சியாக இருக்கும். குழந்தைகளுங் கூட அவரிடம் அன்பும் மரியாதையும் காட்டும்.

அவருடன் கூட இன்னும் ஒரு அனுதை, பெயர் தங்கவேலன். இது அவரிட்ட பெயர் தான். சாமியாரிடம் வரும்போது அவனுக்கு வயது ஏழு அல்லது எட்டு இருக்கும். அழுக்குப் படிந்த ஆடை. எண்ணெயே கண்டிராத தலைமுடி; பலநாள் பட்டினியால் மெலிந்து போன உடம்பு; ஒட்டிப்போன கன்னங்கள்; குழிந்த கண்கள். பார்க்கப் பரிதாபகர மாயிருந்தது. அவன் கோலத்தைக் கண்டு இரங்கிய சாமியார் அவனைத் தன் குழந்தை போல ஏற்றுக் கொண்டார். அவனுக்கு நல்ல ஆகாரம் கொடுத்து வளர்த்தார். விதவிதமான உணவை வேளா வேளையுண்டு தங்கவேலன் நல்ல வாலிபனுனன்.

நந்தவனத்தின் பொறுப்பு இப்போது அவனுடையது. நாள் பூராவும் சலிக்காது தண்ணீர் இறைத்துக் கொட்டுவான். தங்கவேலன் இளங்கைகளாலே பண்படுத்தப்பட்ட அந்த நந்தவனம் இன்று புதியதொரு சோபையுடன் விளங்கியது. எலுமிச்சை, நாரத்தை, பலா, மாதுளை, கொய்யா முதலிய மரங்கள் புதிதாகப் பயிர் செய்யப்பட்டு இருந்தது. பூஞ்செடிகளோ பலரகங்கள். வர்ணத்திற்கு தக்கபடி பாத்திகள் அமைத்து விதவிதமாகச் செப்பனிடப்பட்டிருந்தது. மல்லிகை, முல்லை, ரோஜா, செவ்வந்தி, சம்பங்கி, மனோரஞ்சிதம் இன்னும் அற்புதமான செடிகளெல்லாம் எங்கு கிடைத்தன என்று பார்த்தவர்கள் அதிசயப் படுவார்கள். உண்ணும்போதும் உறங்கும்போதும் செடிகளைப் பற்றிய நினைவாகவே இருப்பான். அவைதான் அவ

னுக்கு உயிர். அச்செடிகளில் உள்ள பூக்களை யாராவது கொய்தால் தன் உயிரையே கொய்வதாக எண்ணி வருத்தப்படுவான். அவன் ஒவ்வொரு செடிக்காகவும் எத்தனை கிராமம் கிராமமாக மைல் கணக்கில் அலைந்து அதைச் சேகரித்தான்! அந்தக் கஷ்டம் அவனுக்கல்லவா தெரியும்?

மனோகரமான மாலை வேளையிலே அந்த நந்தவனத்தில் பல அழகிய மலர்கள் அழகிய வர்ணங்களோடு பூத்திருப்பதைப் பார்த்தால் ஒரே அலங்காரமாயிருக்கும். இந்த அழகிய காட்சி அந்தப் பக்கத்தில் செல்லும் பெண்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டதில் வியப்பில்லை அல்லவா?

இராத்திரி வேளையிலே சாமியார் ஒரு மண் விளக்கை வைத்துக் கொண்டு தங்கவேலனுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தார். அல்லி அரசாணிமாலை, பவளக்கொடி மாலை, நல்லதங்காள் கதை, பஞ்ச பாண்டவர் வனவாசம், ராஜா தேசிங்கு, கும்மி, தேவாரம், திருப்புகழ் யாவுமே அவன் நெட்டுருவாகப் பாடம் செய்து ஒப்புவித்தான். அதைத் தன் இனிய குரலிலே ராகத்தோடு பாடும் போது வழியே செல்வோரும் சற்று நின்று கேட்டு விட்டுத்தான் போவார்கள். சிலர் ஓய்ந்த நேரத்தில் அவனைப் பாடச் சொல்லிக் கேட்பார்கள்.

சாலைப்புதூர்தான் எங்கள் கிராமம். தண்ணீர்ப் பந்தலிலிருந்து கிழக்குப் பக்கமாக ஒரு காட்டுத் தூரத்திலிருக்கிறது. ஆற்றுக் கடுத்த சின்னஞ்சிறு அழகிய கிராமம். ஆற்றுப் பாசனம் இருப்பதால் ஊரைச்சுற்றிலும் வயல்களும் அடர்ந்த தென்னந் தோப்புகளும் இருக்கிறது. எங்கே பார்த்தாலும் ஒரே பசுமை. கண்ணுக்கெட்டிய தூரம் குளிர்ச்சியான

காட்சி. தோப்புகளிலே கூட்டங் கூட்டமாய் மயில்கள் ஏதேச்சையாய்த் திரியும். கிராமத்திலே சுமார் இரு நூறு வீடுகள் தான் உண்டு. எல்லோரும் குடியான வர்கள். அவர்களுக்கு சூதுவாதுகள் தெரியாது. ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் இல்லை. எல்லோரும் உழைப்பாளிகள். ஒரே குடும்பம் போல அன்னி யோன்யமும் சந்தோஷமும் கலந்த வாழ்க்கை. கிராம வாசிகளுக்கு சாமியாரிடம் அளவுகடந்த மரி யாதை உண்டு. அவரைத் தெய்வம் போலவே கருதி ஞர்கள். அவர் காவடியோடு வீட்டு வாசலுக்கு வந்து விட்டால் மணிச் சத்தம் கேட்டதும் என்ன வேலை இருந்தாலும் அன்னக் காவடிக்கு அன்னமிட்டு வணங் குவார்கள் பெண்கள்.

தங்கவேலன் சில சமயங்களில் காவடி சுமந்து வருவதும் உண்டு. அவன் பெரிய சங்கோசி. சாலை யில் தலையைக் குத்திக் கொண்டு ஊருக்குள் போனுல் மறுபடியும் சாலைக்கு வரும்போது தான் தலை நிமிரு வான். சாமியாருக்கு உள்ள அன்பும் மரியாதையும் தங்கவேலனுக்கும் உண்டு. அவனது வசீகரமான தோற்றமும் திருநீர்ப்பூச்சும் சாட்சாத் முருகக்கடவுள் தான். ஊருக்குள்ளே அவன் பேசுவதே அபூர்வம். "அன்னக் காவடிக்கு சாதம், தாயே" இதைத் தவிர வேறு பேச்சும் இராது. பெரியவர்கள் ஏதாவது கேட் டால் தலை நிமிராது பதில் சொல்லிவிட்டு நடையைக் கட்டுவான். இளம் பெண்கள் பலர் வலிய வலியப் பேசுவார்கள். பரிகாசமும் செய்வார்கள். அவர் களுக்கு இவன் ஊமை தான்!

எங்களுக்கு தைப் பொங்கல் பண்டிகை வந்து விட் டால் ஒரே கொண்டாட்டந்தான். எல்லோர் உள்ளத் திலும் அன்று பொங்கல் பொங்குவது போல ஆனந்த மும் பொங்கிக் கொண்டு வரும். பொங்கல் கழிந்த

மறுநாள் பூ நோன்பு. அது கிராமத்துப் பெண்களுக்கே உரியது. பெண்கள் ஆற்றோரம் உள்ள தோப்புகளிலே பூப் பறிக்கச் செல்வார்கள். எருக்கம் பூவும் ஆவரம் பூவும் அவர்களுக்கு ஏராளமாகக் கிடைக்கும். பகல் பூராவும் மயில்களை விரட்டிக்கொண்டு ஆடிப் பாடிப் பொழுது போக்குவார்கள். கடந்த இரண்டு வருடங்களாகப் பெண்கள் தோப்புகளுக்கு செல்வதில்லை. அலங்காரமாகப் புதுத் துணிகளை உடுத்துக் கொண்டு சின்னஞ் சிறு கூடைகளிலே முறுக்கு, தேங்காய், பழம், கரும்பு, வெல்லம், கடலை பொரி, அவல் பலவிதமான பணியாரங்கள், வெற்றிலை பாக்கு யாவற்றையும் வைத்துக்கொண்டு தண்ணீர்ப் பந்தலை அடைவார்கள். அங்கே போனதும் தாங்கள் கொண்டு போனதை எல்லாம் அனைவரும் பரிமாறிக் கொள்வார்கள். வருவோர் போவோர் யாவருக்கும் அளித்துத் தாங்களும் தின்பார்கள்.

தங்கவேலனையும் சாமியாரையும் சுற்றிக்கொண்டு அவர்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுப்பார்கள். குழந்தைகள் கொடுத்ததைக் கொறித்துக்கொண்டே சாமியார் ஒரு மூலையில் உட்கார்ந்து விடுவார். தங்கவேலனுக்கோ ஒரே வெட்கம். கண்ணை மூடிக்கொள்வான். அவன் அருமையாக வளர்க்கும் பூஞ்செடிகளுக் கிடையே ஒரு சுந்தரி போய் நிற்பாள். பூவோடு பூவாக பூங்குயில் போல் நிற்கும் அவளைக் கண்டுதானு கண்ணை மூடிக்கொண்டாய் என்று ஒரு குரல் கேட்கும். என்ன செய்வதென்று தெரியாமல் அங்குமிங்கும் பார்ப்பான். புதுப் புது மலர்களை ஒவ்வொன்ருக விருப்பம் போல் பறித்துப் பெண்கள் சூடிக்கொள்வார்கள்.

அது மட்டுமா? பெண்கள் அவனை விட்டால் தானே. பாடச் சொல்லிக் கட்டாயப் படுத்துவார்கள்.

அவனைச் சுற்றிவந்து கும்மி அடிப்பார்கள். கலியாணம் ஆனவர்கள் ஆகாதவர்கள் எல்லாப் பெண்களும் கலந்து கொள்வார்கள். அது ஓய்ந்ததும் வம்புக்காரப் பெண்கள் அவனிடம் வம்பு பேசுவார்கள். பண்ணுடி மகள் மயிலாத்தாளிடம் அவனுக்குக் கொஞ்சம் பயம் உண்டு. அவள் எப்போதும் வெட்டொன்றும் துண்டு இரண்டுமாக பேசுவாள். மிரட்டுவாள். தங்கவேலன் சொன்னபடி கேட்டு நடக்க வேண்டுமானுல் மற்ற பெண்கள் அவளுடைய சகாயத்தைத்தான் நாடுவார்கள்.

தங்கவேலு ஒரு அழகிய வாலிபன் தான். எல்லோருடைய உள்ளத்தையும் வசீகரிக்கும் தோற்றம் அவனிடம் இருந்தது. பலவிதமான ஆகாரம் உண்டு வளர்ந்தவன். நல்ல உழைப்பாளி. வலிவும் வனப்பும் அவனிடம் இருந்ததில் அதிசயம் ஒன்றுமில்லே. தினசரி சாமியார் பூஜைக்குத் தவிர வேறு யாருக்கும் நந்தவனத்திலிருந்து பூ எடுக்க மாட்டான். இன்று அத்தனே பூக்களேயும் அந்தப் பொல்லாத பெண்களுக்கே கொடுத்தாகவேண்டும். கொடுக்காவிட்டால் அந்தப் பெண்கள் சும்மா விட்டால்தானே. "வேலு, உனக்கு எப்போ கலியாணம்" என்று கிண்டல் செய்வார்கள்.

"நீ யாரைக் கண்ணுலம் பண்ணிக்கறே?" என்பாள் ஒருத்தி.

"சாமியாரு உனக்கு எங்கே பொண்ணு பாத்து வச்சிருக்கிருறு?" என்பாள் இன்னொருத்தி.

"இந்தப் பொண்டுகளிலே உனக்கு யாரைப் புடிச்சிருக்கு?" என்பாள் மற்றவள்.

"தங்கவேலு பொஞ்சாதி தலே நெறையப் பூ வச்சுக்குவா" என்பாள் இன்னொருத்தி.

"நீ தங்கவேலேயே கட்டிக்கோ. உனக்கு அத்தனை பூவும் தருவான்" என்று கை கொட்டி நகைப்பாள் ஒரு குறும்புக்காரி.

அதைக்கேட்டு எல்லாப் பெண்களும் கொல்லென்று கைகொட்டிச் சிரித்து ஆர்ப்பாட்டம் செய்வார்கள். இப்படிப் பகல் பூராவும் தங்கவேலனோடு வாதாடுவதிலும், வக்கணையிலுமே பொழுது போக்குவார்கள்.

மாலை நேரத்தில் பூக்களைக் கூடையில் போட்டுக் கொண்டு "ஓலையக்கா கொண்டையிலே, ஒருசாடு தாழம்பூ" என்று பாடிக் கொண்டே ஊர் திரும்புவார்கள். பாதி வழியிலே ஊரிலுள்ள ஆடவர்களெல்லாம் வந்து வாத்தியங்களோடு இந்தப் பெண்களை எதிர் கொண்டழைத்துச் செல்வார்கள். எல்லோரும் பிள்ளையார் கோவிலுக்குப் போவார்கள். தாங்கள் கொண்டு வந்த பூக்களை பிள்ளையாருக்கு முன்னால் வைத்துக் கும்மியடிப்பார்கள். பின் பிள்ளையார் பூஜை நடக்கும். கடைசியாக பூக்களை எல்லாம் வாத்தியங்களோடு எடுத்துச் சென்று ஆற்றில் விட்டு வருவார்கள். இந்த கிராமியக் காட்சி பார்க்கப் பார்க்க ஆனந்தமாயிருக்கும்.

மயிலாத்தாள் ஊர்ப்பண்ணாடி முத்துக் கவுண்டரின் ஒரே பெண். தங்கமான பெண்; பெண்மைக்குரிய சகல குணங்களும் அழகும் ஒருங்கே அவளிடமிருந்தது. முத்துக் கவுண்டரும் நல்ல மனிதர். எங்கள் ஊருக்கும் சுற்றுப் பக்கம் நாலு கிராமங்களுக்கும் கிராமாதிகாரி அவர்தான். நியாய விசாரணை செய்வதில் அவரைத் 'தருமராசா' என்றே எல்லோரும் சொல்வார்கள்.

மயிலாத்தாள் தினமும் தோட்டத்துக்கு தண்ணீர்ப் பந்தல் வழியாகத்தான் போவாள். போகும் போதும் வரும்போதும் தங்கவேலனிடம் பேசாது போகமாட்டாள். அவனேடு பேசுவதிலே அவளுக்கு ஒரு ஆசை.

"வேலு, செடிகளெல்லாம் உன்னேடே பேசுதா? எப்போப் பாத்தாலும் செடிகளுக்கு உள்ளயே இருக்கிறயே!" என்பாள்.

தங்கவேலன் பதிலுக்கு புன்னகை செய்வான். அவ்வளவு தான். தங்கவேலன் காவடி எடுத்து வரும் போதெல்லாம் மயிலாத்தாள் தான் அவனுக்கு சாதமிடுவாள். பண்ணுடிக்கே தனியாகச் சமைத்த அரிசிச் சோறும் காய் வகைகளையும் படைப்பாள். தங்கவேலன் குனிந்த தலை நிமிராது நிற்பதைக் காணக் காண அவளுக்கு எரிச்சலாக இருக்கும். அவனிடம் எழுந்த அந்தத் தனி அன்பினுலே அவனைச் சற்று காக்க வைப்பதிலே ஒரு இன்பத்தை அடைவாள். சாதத் தட்டோடு வாயிற் படியில் நின்று கொண்டு பராக்குக் காட்டுவாள். தங்கவேலன் தலைநிமிர்ந்தால் தானே!

"சாதம் கீழே சிந்துது—பாத்திரத்தை சரியாகப் புடியுங்கோ" என்பாள் வேண்டுமென்றே.

மயிலாத்தாளுடைய பேச்சும் செய்கையும் அவனுக்கு அமிர்தமாக இருக்குமோ என்னவோ, அங்கு தாமதமானுலும் அதை அவன் பொருட் படுத்துவதில்லை. மயிலாத்தாள் இருட்டிய பின் தோட்டத்திலிருந்து வீடு திரும்புவாள். தண்ணீர்ப் பந்தலுக்கு வந்ததும் தங்கவேலனைக் கூப்பிட்டு தன்னை வீட்டு வரையிலும் கொண்டு வந்து விடும்படி சொல்லுவாள். சாமியாரும் அவளை வீட்டில் கொண்டு போய் விட்டு வரும்படி சொல்வார். இதை அவள் வேண்டுமென்றே

செய்தாள். அவள் இஷ்டப்பட்டால் தோட்டத்தாட்களே அவளை வீட்டில் கொண்டுபோய் விடுவார்கள்!

தங்கவேலு உடன்வர அவள் ஏதேதோ பேசிக்கொண்டே வீடு செல்வாள். தங்கவேலன் துணையாக வருவதை பெற்றோர்களும் ஆட்சேபிப்பதில்லை. அவனிடம் அவர்களுக்கு அபாரமான நம்பிக்கை.

கொஞ்ச காலமாகவே மயிலாத்தாளின் பேச்சுக்களைக் கேட்பதில் தங்கவேலன் ஏதோ இன்பத்தை உணர ஆரம்பித்தான். அவளுடைய பேச்சுக்களிலே மயங்கி விட்டான் என்றே சொல்லலாம். அவன் தன் இதயத்தையே அவளிடம் அடகு வைத்து விட்டான். அதை இப்போது மீட்க முடியாமல் தத்தளிக்கிறான். அவன் மனதில் இன்பக் கனவுகள் தோன்றித் தோன்றி அவனை உன்மத்தன் ஆக்கின. கிழச் சாமியார், பண்ருடி ஆகியவர்களின் அன்பையும் ஆதரவையும் நினைத்து உருகுவான். நந்தவனத்தை—அவனுக்கு உயிருக்கு உயிரான—அந்த நந்தவனத்தைச் சுற்றிச் சுற்றி வருவான்.

அன்று சாயங்காலம் வானம் என்னவோபோல் இருந்தது. சற்றைக்கொருதரம் 'திடும் திடும்' என்று இடி முழக்கம் கேட்டுக் கொண்டிருந்தது. 'பிசு பிசு' என்று அடித்துக் கொண்டிருந்த காற்றுக்குத் தூபம் போடுவதுபோல் சாரல் தூறிக் கொண்டிருந்தது.

தங்கவேலன் நந்தவனத்துக்குப் பக்கத்திலிருந்த கல் கட்டின் மேல் உட்கார்ந்திருந்தான். குடைகவிழ்ந்தாற் போல் கருவேல மரம் ஒன்று கிட்ட இருந்ததால் மழைச் சாரல் கூட அவன்மேல் விழவில்லை. ஆனால் மழை கொட்டிக்கொண்டிருந்தால் கூட அவன் அப்போது கவனித்திருக்க மாட்டான். ஏனென்றால்

பெரிய புயல் அவன் உள்ளத்தில் வீசிக்கொண்டிருந்தது.

அடிக்கொருதரம் கிழச் சாமியாரின் இருமல் சத்தம் குடிசைக்குள்ளிருந்து வரும். அந்தச் சத்தம் சம்மட்டி அடிபோல் தங்கவேலன் இதயத்தைத் தாக்கிக் கொண்டிருந்தது. எதனால்? கிழவன் இறந்து விடுவான் என்ற பயமா! அதொன்றுமில்லை. தன்னைப் பிரிந்து கிழவன் என்னமாக வாழ்வான் என்ற வருத்தந்தான்.

ஆமாம், அவளை நினைக்கவும் தான் அவன் உள்ளத்தில் என்னவோ தைப்பது போல் இருந்தது. அவளுக்குத்தான் இவன் விஷயத்தில் எவ்வளவு தனிக் கவலை. அக்கரை! ஆமாம் அத்தனை வாஞ்சை ஏன் காட்டினாள்?

மயிலாத்தாளை எண்ணினால் தான் மனத்தாங்கல் வருகிறது. அன்று காலையில் ஆனமட்டும் தோட்டத்துக்கு வந்து புதுப் பூச்செடிகளைப் பார்க்கும்படி மயிலாத்தாள் சொன்னாள். 'நல்ல சோறு பலகாரம் கொடுத்தால் கூட ஏன் வேண்டாம் என்று சொல்லுகிறாய்' என்றாள்.

"எத்தனை நாளைக்கு இந்த ஓட்டைக் குடிசையிலே இருக்கப் போகிறாய்?" என்று கூடக் கேட்டு விட்டாள். மயிலாத்தாளின் முகபாவமும் பேச்சும் அவன் மனதை ஏன் அவ்வளவு கவர்ந்தது? இப்போது கூட அவளை ஒருதரம் பார்த்தால் தேவலை என்ற ஆசை ஏன் எழ வேண்டும்? எதற்காகப் பார்க்க வேண்டுமோ?

நிலா மேகங்களுக்கிடையே மெதுவாக எட்டிப் பார்த்து மங்கல் ஒளியை பரப்பிக் கொண்டிருந்தது. தூற்றல் சற்று விட்ட மாதிரி தோன்றியது. தங்கவேலன் எழுந்தான். நடை ஓடவில்லை. கால்கள் ஏனோ

பின்னிக் கொண்டன. தான் அருமையாய் வளர்த்த செடிகளையும் பூக்களையும் உற்றுப் பார்த்துக் கொண்டே நின்றான். அந்த மங்கிய ஒளியில் மலர்கள் கண்ணீர் வடிப்பதைப் போலவே இருந்தது. வெகு நேரம் பார்த்துக் கொண்டே இருந்து விட்டு நடக்க ஆரம்பித்தான். கிழவன் குரலையே காணோம். ஒரு வேளை தூங்கிப் போயிருப்பான்.

மறுநாள் பொழுது விடியுமுன் தோட்டத்திற்குப் போக மயிலாத்தாள் நந்தவனத்து வழியே வந்தாள். விடியும் வரை முந்திய இரவு என்னென்னவோ இன்பக் கனவுகள் கண்டு கொண்டிருந்தாள். முந்திய நாள் தங்கவேலன் நடந்து கொண்ட முறை முற்றும் விளங்காமல் இருந்தது. என்ன பேசினாலும் அவன் இதயத்துக்குள்ளே ஏதோ ஒரு மர்மவேதனை சூழ்ந்திருப்பதாகவே அவளுக்குப் பட்டது. தோட்டத்துக்கு அதனால் தான் என்னவோ விரைவில் புறப்பட்டிருக்கிறாள்.

கிழவன் முனகிக் கொண்டிருந்தான். பூந் தோட்டமே வெறிச் சென்றிருப்பது போல் இருந்தது. "அப்பா, தங்கவேல் தங்கவேல்" என்ற குரல் நாலைந்து தரம் கேட்டது. ஆனால் பதிலே இல்லை. ஏன்? மயிலாத்தாளுக்கு மனசை என்னவோ பண்ணியது. நெருப்பை நெஞ்சில் வைத்துக் கட்டிய மாதிரி இருந்தது. கிழவன் மேலும் இரண்டொரு தரம் கூப்பிட்டான். பிறகு அலுத்தப் போய், "வருவான். எங்காவது ஊருக்குள் போயிருப்பான்—" என்று மெதுவாகச் சொல்லிக் கொள்வதும் அவளுக்குக் கேட்டது.

ஓகோ! இராத்திரியிலிருந்தே அவனைக் காணவில்லைப் போல் இருக்கிறது. இப்படி நினைக்கவும் மயிலாத்தாள் முதலில் சுற்றிலுமிருந்த புஷ்பங்களைத் தான் கண் கொட்டாமல் பார்த்தாள்.

அரும் பாடு பட்டுச் சேர்த்த இந்த அழகிய மலர்களைப் பிரிய அவனுக்கு மனம் எப்படி வந்தது? அது தான் போகட்டும். இதற்கும் மேலான அன்பை உணர முடியாமல் போய் விட்டானே! அடடா! அப்படித் தெரிந்திருந்தால் முன் ஜாக்கிரதையாக நடந்திருப்பேனே?

எல்லாவற்றுக்கும் மேலாக வயோதிகன் தீனக் குரல் அவள் உள்ளத்தை ரொம்பவும் தாக்கியது.

"அப்பா, தண்ணீர்த் தாகம் ஆகுதப்பா. நீ எப்போ வரப் போகிறாய்?" என்று ஈனஸ்வரத்தில் கிழவன் சொல்வது காதில் விழுந்தது.

"இதோ வந்து விட்டேன்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே ஓடினாள் மயிலாத்தாள்.

கிழவன் கண்ணைத் திறந்து பார்த்து, "அப்பா வந்தாயா?" என்றான்.

"ஆமாம், தாத்தா" என்றாள் அவள்.

"அடடா! எம் மயில் கண்ணு என்று வாஞ்சையுடன் கேட்டான் கிழவன். மறுபடியும், "என்ன, தங்கவேல் இல்லையாம்மா" என்றான் கிழவன். "நான் தான் இருக்கிறேனே. உன் மகனும் நான் தான், மகளும் நான் தான்" என்று சொல்லிக்கொண்டே மயிலாத்தாள் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

கிழவன் சுவர்க்க லோகத்தில் இருப்பது போன்ற பரவச நிலையை அடைந்தான். ஆனால் மயிலாத்தாளின் மனநிலை எப்படி இருந்தது? பறந்தோடிய அவள் உயிர்ப் பறவை இனித் திரும்புமா?

★

கட்டை வண்டி

கட்டை வண்டி என்ற தலைப்பைப் படித்ததும் குண்டுங்குழியும் நிறைந்த கிராமப் பாதையின் ஞாபகம் வருகிறதல்லவா? நல்லது, இதோ, படித்துப் பாருங்கள். வாழ்க்கையைக் கட்டை வண்டியோடு ஒப்பிட்டு ஒரு பெரியவர் சொன்னார். அதில் எவ்வளவு உண்மை அடங்கியிருக்கிறது தெரியுமா? கட்டை வண்டி என்றால் வண்டியை மட்டும் குறிப்பிடவில்லை. அதில் பூட்டப்படும் காளைகளைத் தான் குறிக்கும். ஒரே வண்டியில் பூட்டிய இரண்டு மாடுகள் ஒற்றுமையாக நடந்தால்தான் வண்டி மேலே செல்லும். ஒன்று முன்னும், இன்னொன்று பின்னுமாக இழுத்தால் வண்டியின் கதி அதோகதிதான்.

அதைப் போலவே தான் வாழ்க்கையாகிய வண்டியை நடத்திச் செல்ல ஆண் பெண் இருவருடைய ஒற்றுமையும் அவசியம். குடும்பம் என்றாலே வண்டியைப் போல பாரத்தையும் சுமந்து செல்ல வேண்டும். உரலுக்குள் தலையை விட்டவன் உலக்கைக்கு பயப்பட்டால் ஆகுமா? வாழ்க்கை இன்ப துன்பங்கள் நிறைந்தது தான். இரண்டையும் சமமாகப் பாவித்து நடப்பது தான் மனித நீதி.

சாதாரணமாக எளிய வாழ்க்கையிலே தான் ஒற்றுமை நிலவுகிறது. எங்கு கஷ்டமிருக்கிறதோ அங்கே தான் சுகமிருக்கிறது. கஷ்டமில்லாத வாழ்க்கை சீக்கிரம் முடிவு அடைந்து விடுகிறது. படாடோபமான வாழ்க்கை, நாகரிக வாழ்க்கை வேகத்தின் உச்சஸ்தானத்தை அடைந்து ஒன்றிரண்டு வருஷங்களிலேயே கசந்து விடுகிறது. வெளிக்குத் தெரியாமல் இருக்கலாம்............ஆனால்.

மாரிமுத்து, அருக்காணியைக் கண்ணாலம் செய்து கொண்டு இன்றைக்கு எட்டு வருஷங்கள் முழுசாக ஆகிறது. இந்த எட்டு வருஷங்களும் அவர்களுடைய வாழ்க்கை கட்டை வண்டியைப் போல மெதுவாகத் தான் சென்றது. மோட்டார் வேகத்திலும், ஏரோப் பிளேன் வேகத்திலும் சென்று எங்கும் மோதிக் கொள்ளவே இல்லை!

'இருந்தால் அருக்காணியைப் போலவும் மாரி முத்தைப் போலவும் இருக்க வேண்டும். இல்லா விட்டால் சாக வேணும்' என்று எல்லோரும் சொல்லுவார் கள். அவர்களுடைய வாழ்க்கையில் சண்டை என்பது சர்வ சாதாரணமான விஷயம். ஒற்றுமையும் அப்படித்தான். இல்லா விட்டால் பத்துப் பேருள்ள ஒரு குடும்பத்துக்கு அவள் ராணியாக இருந்து நடத்த முடியுமா?

அவள் பெரிய ராங்கிக்காரி தான். அழுத்தமான நெஞ்சும் யாருக்கும் பயப் படாத உறுதியும் உடை யவள் தான். அவள் அள்ளிச் சொருகிய கூந்தலும், வெற்றிலை மென்று காவியேறிய பல் வரிசையும் அவ ளுக்கு இயற்கையாகவே உள்ள அழகை அதிகப் படுத் தின.

அவளும் மாரிமுத்தும் மலங்காட்டில் விறகு வெட்டி விற்று வந்த பணத்தைக் கொண்டு குடும்பத் தை நடத்தி வந்தார்கள். மாரிமுத்து தான் குடும்பத் தில் பெரியவன். மற்றது எல்லாம் சின்னஞ் சிறுசுகள். அதோடு வயது சென்ற தாயும் தகப்பனும். இத்தனை பேரையும் வைத்து சம்ரக்ஷணை செய்வதில் அவனுக்கு இணை அவனே தான்.

கணவனோடு கைகோத்துக் கொண்டு விறகு கட் டப் போவாள். மாரிமுத்து தான் அவளுக்கு உயிர்,

அவனை விட்டுப் பிரிந்திருப்பதென்றால் அவளுக்குக் கஷ்டம்.

விறகு கட்டப் போவது என்றால் இரவு என்றும் பகல் என்றும் கிடையாது. விடிய ஒரு ஜாமம் இருக்க கட்டுச்சோறு கட்டிக்கொண்டு புறப்பட்டு விடுவார்கள். நிலவு காலமாக இருந்து விட்டால் சொல்ல வேண்டியதில்லை. வீட்டுவேலை அத்தனையும் செய்து விட்டு கணவனோடு சீக்கிரமாகவே கிளம்பி விடுவாள். மாரிமுத்து அவளைப் போலவே கள்ளங் கபடு இல்லாதவன். உற்சாகமாக வேலை செய்வான். அவளுடைய அழகில் கட்டுண்டு கிடக்கும் இளங்காளை அவன்.

அவர்கள் வாழ்க்கையை நடத்த உதவியாக இருந்ததும் ஒரு கட்டை வண்டிதான். அவர்கள் வண்டியில் வேடிக்கையாகப் பேசிக்கொண்டு பிரயாணம் போகும் காட்சியைக்கண்டு யாரும் பொறாமைப் படாமல் இருக்க முடியாது.

கோடைக் காலம். வெயில் அதிகமாக இருந்தது. ஆகையால் அவளை மலையடிவாரத்தில் ஒரு மரத்தின் நிழலில் இருக்க விட்டு மலையுச்சிக்குச் சென்று விட்டான். வெய்யிலில் வழி நடக்கச் சற்று ஆயாசமாக இருந்த படியால் அவளும் கீழே தங்கியிருக்கச் சம்மதித்தாள். ஆனால் அவளுடைய உத்திரவு என்ன? ஆமாம். அவன் சீக்கிரமே திரும்பவேண்டும்.

அவன் சென்றதும் அவள் நாலாப் பக்கமும் தன் பார்வையைச் செலுத்தினாள். அந்தக் கோடையிலும் வாடாத இயற்கையின் பசுமை செறிந்த காட்சிகள் அவளைப் பரவசப்படுத்தியது. அடுக்கடுக்காக நின்ற மலைக் குன்றுகளின் கம்பீரமான தோற்றம் இன்று அவளைக்கவர்ந்தது.

திடீரென்று அவள் கனவைக் கலைத்தது ஆணும் பெண்ணுமாகிய இரண்டு காட்டுப் புறாக்கள். புரியாத பாஷையில் அவையே கொஞ்சிக் கொஞ்சிப் பேசிக் கொண்டிருந்தன, அவள் தலைக்கு மேலே மரக்கிளையில். அவற்றைக் கண்ட போதுதான் அவள் தனிமையையும், நேரம் வெகு தூரம் சென்று விட்டதையும் அறிந்தாள். பிறகு, மாரிமுத்து வந்ததும் சரமாரியாகச் சொரிந்து தள்ளினாள், தன் உள்ளத்தில் உள்ளதை. பெரிய சண்டையே போட்டுவிட்டாள்! மாரிமுத்து, "யாராச்சும் பாத்தா, என்ன நெனைப்பாங்க?" என்றான். அவளும் துடுக்கா, "அப்பத் தெரியுமல்ல!" என்றாள். ஆனால், கொஞ்ச நேரத்தில் இருவரும் சமாதானம் செய்து கொண்டதோடு, குதூகலமாக வீட்டிற்குத் திரும்பினார்கள்.

எதையோ நினைத்துக்கொண்டு, "அக்கரைக்கு இக்கரையே பச்சை" என்றான். அவள் சிரித்தாள்.

வாழ்க்கை வண்டி சரியாக ஓட வேண்டுமானால், சிரிப்பு மட்டும் போதாது, அழுகையுந்தான் வேண்டும்!

கல்யாணியின் கனவு

'கல்யாணி, உனக்கு என்றைக்குக் கலியாணம்' என்று வேடிக்கையாக என்னைக் கேட்பார்கள். 'என் பேரே கல்யாணியாச்சே எனக்கு ஏதுக்குக் கலியாணம்' என்று பதில் சொல்லுவேன். அப்போது நான் சிறு பெண்.

"பாவம்! கல்யாணியைப் பாருங்கள். இன்னும் கலியாணமே இல்லை. பெற்றவர்கள் இருந்தால் அவளுக்கு இன்னுமா கலியாணம் செய்யாதிருப்பார்கள். வயசு ஆச்சோ இல்லையோ. அவள் தலை விதி. யாரை நோவது." இந்த வார்த்தைகளைக் கேட்கும் போதெல்லாம் என் நெஞ்சையே பிழந்த மாதிரி இருக்கும். இப்போது நான் சிறு பெண் இல்லை.

என் வயதுள்ள பெண்கள், என்னோடு ஓடியாடித் திரிந்த பெண்கள், என்னை விட வயதில் குறைந்த பெண்களெல்லாம் கலியாணம் செய்து கொண்டு விட்டார்கள். அவர்கள் குழந்தையும் கையுமாய்த் திரிவதைப் பார்த்தால் எனக்கே வெட்கமாயிருக்கும். என் பன்னிரண்டாவது வயதில் என் பெற்றோர்கள் என்னை விட்டுப் பிரிந்து விட்டார்கள். என் தந்தை தன் பங்குக்கு வந்த செல்வத்தை யெல்லாம் தலைகால் தெரியாமல் செலவு செய்து அழிந்து விட்டார். கொஞ்சமாவது மீதி இருக்கவில்லை.

அதுமுதல் நான் என் பெரியப்பா வீட்டில் தான் வளர்ந்து வந்தேன். அங்கு எனக்குத் 'துடைகாலி' என்பது பெயர். நான் பிறந்ததால்தான் என் பெற்றோர்கள் செல்வத்தையும் இழந்து உயிர் துறந்தார்கள்

என்பது பெரியம்மாளுடைய அபிப்பிராயம். என் பெரியப்பா வீட்டில் நான் ஒரு பணிப்பெண்ணைப் போலத்தான். சொந்த வீட்டில் பெற்ருேர்கள் ஆதரவில் செல்வமாய் வளர்வதற்கும் இன்னொருவர் வீட்டில் இருப்பதற்கும் வித்தியாசம் இல்லையா? என் பெரியப்பா கிராமத்திலேயே பெரிய பணக்காரர். அவர் செட்டும் கட்டுமாக வாழ்பவர். அவருக்கு என் பெரியம்மா வழியில் அளவற்ற செல்வம் கிடைத்தது. அவரை மிராசுதார் கிருஷ்ணசாமி நாயுடு என்று சொல்லுவார்கள். என் பெரியப்பாவுக்கும் ஒரு பெண் உண்டு. என்னை விட வயதில் சிறியவள் தான். லக்ஷிமி என்று அவளுக்குப் பெயர். ஒரே பெண் ஆனபடியால் அவளைச் செல்லமாக வளர்த்தார்கள். அவளால் நான் பல தடவைகளில் உதையும் பட்டிருக்கிறேன். என் தாய் வழியில் யாராவது இருந்திருந்தால் கூட நான் என் பெரியப்பாவை விட்டு அகன்றிருப்பேன். அப்படியும் யாரும் இல்லை. என்னைப் போலவே என் தாயும் அனுதை.

என் பெரியப்பா மகள் எனக்குத் தங்கை தானே. என் தங்கை என்னை விட அழகுடையவள் அல்ல. நான் அழகி தான். சந்தேகமே இல்லை. வேலை செய்து செய்து என் உடல் கட்டுக் குலையாமல் பளபளப்பாக இருந்தது. என் அங்கங்கள் எல்லாம் கடைச்சல் பிடித்தது போலவே இருக்கும். என்ன இருந்தும் என்ன பயன்? எனக்குக் கலியாணம் ஆகாமல் இருந்தது ஒரு குறை தான். என் பெரியப்பாவும் என் விஷயத்தில் அசட்டையாகவே இருந்தார். என் பெரியம்மாளுக்கு என் விஷயத்தைப் பேசவே பிடிக்காது. பெரியப்பா அவள் சொன்னபடி தான். இவர்கள் என் விஷயத்தில் அக்கரை கொண்டால்தானே யாராவது பெண் கேட்க வருவார்கள். ஆரம்பத்தில் இந்தச் சிந்தனையே இல்

லாமல் வேலையுண்டு நானுண்டு என்றிருந்தேன். அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் என்னைக் கிளறுவார்கள். அதையும் பொருட்ப்படுத்தாமல்தான் இருந்தேன். ஆனால் என் வயதுள்ள இளைய பெண்களெல்லாம் தங்கள் கணவரோடு திரிவதைக் காணும்போதெல்லாம் என் உள்ளம் வேதனை அடைய ஆரம்பித்தது. வயது ஆக ஆக இந்த ஏக்கம் அதிகரித்து வந்தது.

என் உள்ளத்தை உள்ளபடி அறிந்து செய்ய என் பெற்றோர்களா இருக்கிறார்கள்! என் மனம் ஊசலாடத் தொடங்கி விட்டது. என் மன ஓட்டத்தைக் கட்டுப் படுத்தவே முடியவில்லை. அது கனவு லோகத்தில் சஞ்சரிக்க ஆரம்பித்தது. அழகான ஒரு கணவனைக் கற்பனை செய்து கொண்டு கொஞ்சிக் குலாவ ஆரம்பித்து விட்டது. தூங்கும் போதும் இதே கனவு தான். வேலை செய்யும் போதும் மனம் அடிக்கடி கற்பனை லோகத்திற்குப் போய் விடும். வேலையிலும் உற்சாகங் குறைந்து அடிக்கடி வசவுகளும் குறைவில்லாமல் கிடைத்தது. ஒரு சமயம் வாலிபர்களைக் கண்டால் ஓடி ஒளிவேன். அல்லது தலையைக் குத்திக் கொண்டு நடப்பேன். இப்போது அவர்களைத் தலை நிமிர்ந்து பார்ப்பது இன்பமாகப் பட்டது. அவர்களோடு பேசவும் என் மனம் என்னைத் தூண்டியதுண்டு. சீதை, நளாயினி, சாவித்திரி போன்ற உத்தமிகளின் கதைகளைப் படித்தும், சொல்லவும் கேட்டிருக்கிறேன். அவர்களைப் போல் வாழ வேண்டும் என்ற ஆசை எனக்கு உண்டு.

நான் லட்சிய வாழ்க்கை நடத்தவே விரும்புகிறேன். அதற்கு ஒரு கணவன் வேண்டும். ஒரு பெண் கலியாணமின்றி மனித சமூகத்தில் பழகுவது அவ்வளவு சுலபமல்ல என்பது எனக்குத் தெரியும்.

கிராமத்தில் எத்தனையோ "இளங் காளைகள் என்னைக் கவனிக்கிறார்கள். என்னோடு பேசவும் ஆசைப்படுவ தாகக் காட்டிக் கொள்கிறார்கள். ஆனால் என்னைக் கலியாணம் செய்து கொள்ளும் எண்ணம் ஒருவனுக் காவது இருப்பதாகத் தெரியவில்லை. பின் இந்த உறவு ஏனோ? என்னை விரும்பினால் என் பெரியப்பாவிடம் கேட்டு தைரியமாகக் கலியாணம் செய்து கொள்ள முன் வரட்டுமே! எனக்கு ஒருவர் மீதும் ஆசை உண் டாக வில்லை. என்னை மணப்பவரை நான் நேசிப்பேன். அவரை தெய்வமாக வணங்குவேன். இது என் வை ராக்கிய சிந்தை. இதுவும் சில சமயங்களில் கலைந்து தவறான வழியில் கனவு காண்பதும் உண்டு. வெறும் கனவுதானே. அதற்காகத் தெய்வம் என்னை மன்னிக் கும் என்பது என் திடமான நம்பிக்கை. இளமையைக் கட்டுப்படுத்துவது அவ்வளவு சுலபமல்ல என்பது அனுபவத்தில் தான் தெரிகிறது.

என் தங்கை லக்ஷிமிக்கு விவாகத்துக்கு ஏற்பாடு ஆயிற்று. மாப்பிள்ளை வீட்டார் பெரும் பணக்காரர் கள். எங்கோ தூரத்திலிருந்து ஒரு நாள் திடீரென வந்து குதித்தார்கள். நிச்சய தாம்பூலம் எல்லாம் ஆயிற்று. கலியாண தினமும் வந்தது; என் உள்ளத் தில் அன்று ஒரு பெரிய அதிர்ச்சி ஏற்பட்டது. கலி யாண தடபுடல்களும் ஆரவாரங்களும் சொல்லி முடி யாது. என் தங்கையைக் குளிப்பாட்டவும், சிங்காரிக் கவும், ஆடவும் பாடவும் என்னென்னவோ செய்தார் கள். நான் எதிலும் கலந்து கொள்ள வில்லை. ஆனால் என் விதி இதில் சம்பந்தப் பட்டிருந்தது. அதைச் சொல்லுமுன் என் தங்கையின் கலியாண விமரிசைகளை யும் சொல்லித்தான் ஆக வேண்டும். இல்லாவிட்டால் என் விதி எப்படிக் குறுக்கே வந்தது என்பது தெரி யாது.

அன்று ஊரெல்லாம் அமளி துமளியாக இருந்தது. இரவு பனிரண்டு மணியாகியுங் கூட ஜன நடமாட்டம் வழக்கத்துக்கு அதிகமாகவே இருந்தது. வீதிகளெல்லாம் இரண்டு ஓரங்களும் சுத்தமாகவும் ஒழுங்காகவும் வெட்டப்பட்டு இருந்தன. அங்கங்கே வீதியின் குறுக்கே பசுமையான மாவிலைத் தோரணங்கள். கலியாண வீட்டுக்கு முன்னும், மாப்பிள்ளை விடுதிக்கு முன்னும் பச்சைத் தென்னந்தடுக்குகளைக் கொண்டு பெரிய பெரிய பந்தல்கள் அமைத்து வாழை, கமுகு, மாவிலைத் தோரணங்கள், இளநீர், தென்னம்பாளைகள் முதலியன கட்டி அலங்காரம் செய்திருந்தார்கள். காஸ் லைட்டுகள் அங்கங்கே எரிந்து கொண்டிருந்தன. பந்துக்கள் இரண்டு தினங்களுக்கு முன்னதாகவே வந்து குழுமியிருந்தார்கள். ஊருக்குள்ளேயும் எல்லாருடைய வீடுகளிலும் இரண்டு தினங்களாக அடுப்பு மூட்டப்படவில்லை. எல்லாருக்கும் கலியாண விருந்து, ஒரே அமர்க்களம். பெரியகளந்தை பெரியசாமி, அவன் தம்பி சின்னசாமி இரட்டை நாதஸ்வரம், கோடையிடி குப்புசாமி தவுல். நாதஸ்வரக் குழாயிலிருந்து ஸ்வர வரிசைகள் அலை அலையாகக் கிளம்பி வந்து கொண்டிருந்தன. தவுல் வாத்தியத்தின் இடிகளும் அடிகளும் பந்தலையே ஆட்டிக் கொண்டிருந்தன. நிசப்தமான அந்த நடுஇரவிலே அந்த ஊதலும், இடியும் வெகு தூரம் பரவி அக்கம் பக்கத்துக் கிராம வாசிகளின் தூக்கத்தையும் கலைத்திருக்கும்.

கலியாண வீட்டின் ஒரு பக்கத்திலே பெரியப்பாவும் இன்னும் நெருங்கிய பந்துக்களும் ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருந்தார்கள். அவர்களுடைய முகத்தில் ஏன் இவ்வளவு கலவரம்? எத்தனை ஆடம்பரமான ஏற்பாடுகள். இரண்டு நாட்களாக பந்துக்களின் கொட்டம். ஊரெல்லாம் கலியாணப் பேச்சு.

கலியாணச் செலவு விவரங்கள், விருந்து வகைகள் சதிர் கச்சேரி ஏற்பாடுகள், இதைப்பற்றி இராப் பக லாக கிராமவாசிகள் வாய் ஓயாமல் பேசிக்கொண் டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சமயத்தில் குழப்பம் எப்படி வந்தது? ஆனால் விஷயம் அம்பலத்திற்கு வர அதிக நேரம் பிடிக்க வில்லை.

இரவு எட்டு மணிக்கே வரவேண்டிய மாப்பிள்ளை இரவு பனிரண்டு மணியாகியும் வரவில்லை. காலை ஐந்து மணிக்குள்ளாக முகூர்த்தம் நடந்தாக வேண்டும். மாப் பிள்ளை வந்து விடுவார், வந்து விடுவார் ... ... என்று எதிர் பார்த்தார்கள். சும்மா இருப்பவர்கள் அதோ வந்து விட்டார் இதோ வந்து விட்டார் என்று வம்பு பேசிக் கொண்டிருந்தார்கள். இந்தக் குழப்பம் எல் லாருக்கும் பரவி விட்டது. பெரியசாமி பிள்ளை வகை யரு தங்கள் குழாய்களையும் சாமான்களையும் பையில் போட்டுக்கட்டி வைத்து விட்டுத் தங்கள் விஷயத்தைக் கவனிக்க ஆரம்பித்தார்கள். இவ்வளவு பெரிய கூட் டத்தில் தங்கள் திறமையைக் காட்ட எங்கு சந்தர்ப்பம் கிடைக்காமல் போய்விடுமோ என்ற வருத்தமும் கூட அவர்களுக்கு.

கலியாண வீட்டுக்கும் ஊர் எல்லைக்குமாக ஜனங் கள் சங்கிலி கோத்தது போல நடந்த வண்ணமாக இருந்தார்கள். அன்று நல்ல மழைக்கால் இருட்டு. ஆகையால் தீவட்டிகளின் உதவியால் அங்கு மிங்கும் போய்க் கொண்டிருந்தார்கள். தூரத்தில் ஏதாவது மினுக்கென்று வெளிச்சம் தெரிந்தாலும் 'அதோ மாப் பிள்ளை வந்து விட்டார்' என்று எல்லோரும் கவனிப் பார்கள். பெரியப்பாவுக்கு அளவில்லாத ஏமாற்றம். பெரிய இடம் என்று தூரத்தைக் கூடக் கவனியாது கலியாணத்திற்கு அவசரப்பட்டு ஏற்பாடு செய்து விட்

டார். மாப்பிள்ளை ரொம்ப தூரத்திலிருந்து வரவேண்டும். சவாரி வண்டிகள் ஆதிக்கம் பெற்றிருந்த காலம் அது. இப்போது போல மோட்டார் வண்டிகள் கிடையாது. தூரத்தில் ஒரு வண்டி 'ஜல் ஜல்' என்ற சலங்கை ஒலியோடு வந்து கொண்டிருந்தது. 'அதோ மாப்பிள்ளை வண்டி வருகிறது.' 'அதோ, அதோ' என்று எல்லோரும் ஏகமாகக் கத்தினார்கள். 'மற்ற வண்டிகள் பின்னால் வந்து கொண்டிருக்கும்' என்றது பதில் குரல். அந்த வண்டி பக்கத்தில் வந்த போது அது பெண் வீட்டைச் சேர்ந்த ஒரு வண்டியாக இருந்தது. எல்லாருடைய முகங்களிலும் அசடு வழிந்தது.

மணியோ ஏறிக்கொண்டே போகிறது. மாப்பிள்ளை வரவேண்டிய திசையில் வண்டியும் ஆட்களும் அனுப்பப்பட்டார்கள். மாப்பிள்ளைக்கு என்னவோ? ஏதோ? திருட்டுக்கொள்ளை நடந்திருக்குமோ என்னவோ? ஒரு விவரமும் தெரியவில்லை.

இடையில் புரோகிதர் வேறு அவசரப் படுத்திக் கொண்டே இருந்தார். திடீரென்று மாப்பிள்ளை வந்து விட்டால் என்ன செய்வது என்று, அவர் முகூர்த்தத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்து கொண்டிருந்தார். முகூர்த்த மேடைக்குப் பக்கத்தில் அமர்ந்து ஏதேதோ மந்திரங்களை வாய்விட்டுச் சொல்லிக்கொண்டிருந்தார். எங்கே கலியாணமே நின்று விடுகிறதோ என்ற கவலையால் மந்திரங்களைக்கூட தவறுதலாகச் சொல்லிக் கொண்டிருந்தார். இடையிடையே முகூர்த்த காலத்தில் இருக்க வேண்டிய சாமான்களுக்கு உத்திரவுகள் போட்டு அவற்றை நிறைவேற்றுவதிலும் கண்ணும் கருத்துமாக இருந்தார். அப்போது பெரியப்பா அந்தப் பக்கம் வந்தார்.

"கிருஷ்ணசாமி இங்கே வா அப்பா!" என்று புரோகிதர் கூப்பிட்டார்.

பெரியப்பா கவலை நிரம்பிய முகத்தோடு அவருக்கு எதிரில் நின்றார்.

"என்ன யோசனை?" என்றார் புரோகிதர்.

"நீங்கள் தான் சொல்ல வேண்டும்!"

"முகூர்த்தத்தை குறித்த காலத்தில் நடத்தியாக வேணும்!"

"மாப்பிள்ளை யில்லாமல் எப்படி நடத்துவது?"

"கிருஷ்ணசாமி, நான் சொல்வதைக் கேளு. இந்த முகூர்த்தம் நின்றால் ஏதோ அபசகுனம் ஏற்பட்ட மாதிரி. உன் குடும்பத்திற்கே அனர்த்தம் உண்டாகும். எப்படியாவது நடத்தி விடு!"

"அதைத்தான் எப்படி நடத்துவது?"

"வேறு மாப்பிள்ளை யில்லையா?"

"அடராமா, அந்த மாப்பிள்ளையைப் பற்றிய முடிவு தெரியாமலா? சுத்தப் பைத்தியக்கார யோசனை!"

"அப்படியல்லப்பா நான் சொல்வது, அதாவது இந்த முகூர்த்தத்தில் வேறு ஒரு முகூர்த்தத்தை நடத்திவிடுவது"

"யாருக்கு நடத்துவது?

"யாராவது இரண்டு பேரை வைத்துத்தான்."

"என்னை வைத்துத் தான் நடத்த வேண்டும்" என்றார் எரிச்சலோடு.

"அப்பா, லக்ஷிமி உன் ஒரே பெண், மகா லக்ஷிமி மாதிரி. அவளுக்காகத்தான் இவ்வளவு தடபுடல்களும். அதற்கு விக்கினம் ஏற்பட வேண்டாம், அவ்வளவுதான்."

பெரியப்பாவுக்கு இப்போது கவலை அதிகமாகி விட்டது. இவ்வளவும் செய்த பின் கலியாணமே நின்று விட்டால் தற்கொலை செய்து கொள்ள வேண்டியது தான். அவருடைய மூளையே குழம்பியிருந்தது. நிலையின்றி அலைந்து கொண்டிருந்தார்.

கலியாணத்திற்கு வந்திருந்தவர்கள் ஒரு பக்கத்தில் நிச்சிந்தையாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். சிலர் மறு நாள் நடக்கப் போகும் விருந்து சதிர் கச்சேரிகளைப் பற்றிக் கனவு கண்டு கொண்டிருந்தார்கள். எந்த விதமான விசாரமும் இல்லாத ஒரு கூட்டம் சீட்டாட்டத்தில் முனைந்திருந்தது. இன்னொரு கூட்டம் அதை வேடிக்கை பார்ப்பதில் உற்சாகம் கொண்டிருந்தது. பெண்களெல்லாம் இன்னொரு விசாலமான கூடத்தில் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அழுது கொண்டிருந்த குழந்தைகளை சிலர் அதட்டியும், பாடியும் தூங்க வைத்துக் கொண்டிருந்தார்கள். சில கிழங்கள் காலை நீட்டி வெற்றிலை மென்றபடியே ரசமாகப்பேசிக் கொண்டிருந்தார்கள். மணப் பெண்ணின் அறையில் இளம் பெண்கள் கூட்டமாக நித்திரையின்றி ஒரே கொம்மாளம் போட்டுக் கொண்டிருந்தார்கள். மாப்பிள்ளை வராத செய்தி கேட்டு மணப் பெண்ணுக்கு மயக்கம் வந்து விட்டது. எல்லோருமாகச் சேர்ந்து அவளுடைய மயக்கம் போக்கப் பிரயத்தனப் பட்டுக் கொண்டிருந்தார்கள்.

*   *   *   *

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்து என்னைக்
கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழீ நான்

தன் தெய்வீகக் கணவன் வந்து தன் கையைப் பற்றிய கனவை ஆண்டாள் தன் தோழியிடம் சொல்லி

ஆனந்தப்பட்ட பாசுரத்தின் வரிகள் என் நினைவில் வந்து மோதியது. ஸ்ரீ ஆண்டாள் தெய்வப் பிறவி. நான் சாதாரணப் பெண்தானே. என் மனதில் உரு வான ஒரு அழகிய நாயகனைக் குறித்துத்தான் நான் கனவு கண்டுகொண்டிருந்தேன், ஆசையோடு என் கண வன் என் கைபற்ற என் உள்ளத்தில் பொங்கிய ஆனந் தத்தை............

'கல்யாணி, கல்யாணி!' என்று யாரோ பலமாகக் கூப்பிடுவதைக் கேட்டு என் கனவு கலைந்தது. திடுக் கிட்டு எழுந்தேன்.

என் பெரியப்பா எதிரில் நின்ருர்.

''கல்யாணம் செய்துகொள்ளுகிருயா கல்யாணி?'' என்று அவர் கேட்டார்.

நான் குனிந்த தலை நிமிராமல் நின்றிருந்தேன். மௌனம் சம்மதம் என்று அவர் போய் விட்டார் போ லிருக்கிறது. அடுத்த கணம் பல பெண்களுக்கு மத் தியில் நான் இருந்தேன்.

நான் ஒருத்தி இருப்பதாக அவர்களுக்கு அதுவரை தெரியாமல் இருந்தது. ''அதிர்ஷ்டத்தைப் பாரு அதிர் ஷ்டத்தை! கல்யாணிக்கு வந்த அதிர்ஷ்டத்தை! கல் யாணி, உனக்குத்தான் இப்போது கலியாணம். உன் தங்கை புருஷன் இன்னும் வரவில்லை. அதற்கு முந்தி உனக்குச் செய்யப் போகிருர்கள். தூங்காதே, கொஞ் சம் கண்ணைத் திறந்து பாரம்மா!'' என்று என்னவோ பேசிக்கொண்டிருந்தார்கள். என்னை ஒரு பொம்மை மாதிரி அவர்கள் நினைத்துக்கொண்டார்கள் போலிருக் கிறது. என்னை அப்படியே தூக்கிக் கொண்டு போய் குளிப்பாட்டி ஆடை அணிகள் பூட்டி அலங்காரம் செய்து தலைவாரி ஜடை போட்டார்கள். நெற்றிக்குத்

திலகமிட்டு, கையில் கண்ணாடியைக் கொடுத்து 'பாரம்மா கல்யாணி, உன் அழகைப் பார்! என்று வேடிக்கை செய்தார்கள். அவர்கள் பேச்சும் செய்கையும் என்னை உன்மத்தமாக்கி விட்டது. என்னை மணையில் அமர்த்தி ஏதோ இரண்டொரு சீர்களெல்லாம் செய்தார்கள்.

மணையில் மாப்பிள்ளைக்குப் பக்கத்தில் என்னை உட்கார வைத்தபோது தான் சுய நினைவு கொஞ்சம் வந்தது.

தலையை சற்று உயர்த்திப் பார்த்தேன். என்னைச் சுற்றிலும் ஒரே கும்பல். கொட்டு மேளமும், நாதஸ்வரமும் என் காதைத்துளைத்தது. என் அருகில் ஒருவர் அமர்ந்திருந்தார். கனவு இல்லை உண்மைதான் என்று எனது மனதுக்குப் பட்டது. எனக்குக் கணவராக வந்த அந்த உத்தமரைக் கண்ணெடுத்துப் பார்க்க நான் வெட்கப்படவில்லை. நான் என் கனவில் கண்டது போலவே அவர் என் அழகுக் கணவராகத்தான் இருந்தார். அவருடைய் கம்பீரமான தோற்றமும், புன்னகை தவழும் முகமும் என் உள்ளத்தை அந்த நிமிஷத்திலேயே ஆட்கொண்டு விட்டன. அவரை முன் பின் நான் பார்த்ததில்லை. அவர் யாரோ, நான் யாரோ? என் இனத்தவராகத் தான் இருக்கவேண்டும், சந்தேகமில்லை. இல்லாவிடில் பெரியப்பா இணங்குவாரா? யாராயிருந்தால் என்ன, என் வாழ்க்கைக்கு, கை கொடுத்துதவிய மஹான் அவரே. என் தெய்வம்.

"கல்யாணி, வெட்கமில்லை உனக்கு? புருஷனை இப்பவே அப்படிப் பாக்கறயே கண் கொட்டாமே!" என்று யாரோ சொல்வதைக் கேட்டுத்தான் தலை குனிந்தேன். புரோகிதரின் அர்த்தமாகாத மந்திரங்களுக்கு இடையே என் கழுத்தில் மாங்கல்யம் கட்டியாகி விட்டது. பெண்ணும் மாப்பிள்ளையும் கைகோர்த்துக்

கொண்டு மணவறையைச் சுற்றி வரவேண்டும். மாப்பிள்ளையின் கையை நான் பற்ற வேண்டும் என்று மாப்பிள்ளையின் சார்பில் சில பெண்கள் வாதாடினார்கள். மாப்பிள்ளைதான் என் கையைப் பற்றி என்னை அழைத்துச் செல்லவேண்டும் என்று என் சார்பில் சிலர் வாதாடினார்கள். நான் வெட்கத்தால் ஒன்றும் செய்யாது தவித்தேன். என் கட்சி வலுவாக இருந்ததால் அவரே என் கையைப் பற்றினார். அப்பப்பா! அவர் கைப் பற்றிய அந்த நிமிஷத்தில் என் உடம்பு ஒரு குலுங்கு குலுங்கியதை அவர்தான் அறிந்திருக்கமுடியும். மின் சாரத்தைப் போன்ற ஒரு உணர்ச்சி என் தேகமெல்லாம் பரவி என் உடம்பே வியர்த்துக்கொட்டியது. நான் ஒரே இன்ப லாகிரியில் மூழ்கி விட்டேன். அவர் என்னைத்தொட்டு மாங்கல்யம் கட்டும்போது கூட அந்த உணர்ச்சி ஏற்படவில்லை. அப்போது நான் கட்டையைப் போல உணர்ச்சியற்று இருந்தேன். எனக்கு முன் பக்கத்தில் புரோகிதர் பெரிய ஓமகுண்டத்தை வளர்த்து புகையைக் கிளப்பி என்னைத் திணற அடித்துக்கொண்டிருந்தார்.

என் விதி இப்போது தீர்மானிக்கப்பட்டு விட்டது. அதுவும் பல பேர்களுக்கு மத்தியில். இனி விதி விட்ட வழிதானே செல்ல வேண்டும்! கலியாணத்திற்கு வந்திருந்த அனைவரும் எங்களை ஆசீர்வதித்தார்கள்.

என் கணவர் எல்லோரையும் போலவே கலியாணத்துக்கு வந்திருந்தவர். அவருடைய குடும்பத்தில் என் மாமியும் அவரும் இரண்டே பேர்தான். என் பெரியம்மாவுக்கு சகோதர வழியில் பந்தத்துவம் உடையவர். சுக ஜீவனம் நடத்தக்கூடிய அளவுக்கு அவருக்கு செல்வம் இருக்கிறது என்பதையெல்லாம் பின்னால் தான் அறிந்து கொண்டேன். என் பெரியம்மாவின் விருப்பப்படி தடைபட்ட அந்த முகூர்த்தத்தில் அவர்

என்னை விவாகம் செய்யச் சம்மதித்து அதை நிறைவேற்றினர். இல்லை, அவர்களுடைய மானத்தைக் காப்பாற்றினர். என் கலியாண வைபவம் முடிய மறுநாள் காலை எட்டு மணியாயிற்று. எல்லோரும் தங்கள் காலை ஆகாரத்தை முடித்துக் கொண்டு என் கலியாணத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள்.

சுமார் பத்து மணியிருக்கும் என் தங்கையின் மாப்பிள்ளை அவருடைய பரிவாரங்கள் சூழ வந்து சேர்ந்தார். அவர்கள் இரவுக்கிரவு வரும் போது எதிர்பாராதபடி மழை வந்ததையும் வழியில் இருந்த ஆற்றில் வெள்ளம் வந்து விட்டபடியால் குறித்த காலத்தில் வர முடியவில்லை என்பதையும் கதையாகச் சொன்னார்கள். மறுநாளும் முகூர்த்த நாளாக இருந்த படியால் என் தங்கையின் கலியாணம் வெகு சிறப்பாகவே நடைபெற்றது. எல்லாருக்கும் திருப்தி.

என் பெரியப்பா மட்டும் "மூத்த பெண் இருக்க, இளையவளுக்கு கலியாணம் செய்வது அடுக்குமா? தெய்வத்துக்கே இஷ்டமில்லை. கல்யாணி வருத்தப் படாதே" என்று பச்சாதாபப் பட்டார். இப்போது அவர் மேல் எனக்கு என்ன வருத்தம்? நான் என் கணவரோடு ஊருக்குப் புறப்பட்டபோது எனக்கு ஏராளமாகச் சீர்வரிசைகளும், நகைகளும் கொடுத்து அனுப்பினர்.

சென்றதைக் குறித்து நான் வருந்தவில்லை. அப்பாவையும் அம்மாவையும் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து விடை பெற்றேன்.

'கல்யாணி' என்று யாரோ பரிவோடு கூப்பிடுவதைக் கேட்டுத் திரும்பினேன்.

அவர்தான்.

அப்போதே என் வயது பத்துக் குறைந்து விட்டது.

கொடியும் பூவும்

ஆலமரத்து நிழலில் கால்களை நீட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். செம்பான் அவள் மடியில் தலையை வைத்துக் கொண்டு ஒரு பக்கமாகச் சாய்ந்த வண்ணம் படுத்திருந்தான். அவள் அவன் தலையை லேசாக வருடிப் பேன் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த இன்பத்திலே அவனுக்கு தன்னை மறந்த ஒரு சின்னத் தூக்கம். அப்போது மாசி வெயில் கடுமையாகக் காய்ந்து கொண்டிருந்தது. இயற்கையாகப் பரந்து ஓங்கி வளர்ந்த அந்த ஆலமரத்தின் நிழலில், பக்கத்திலே உள்ள தென்னந் தோப்பிலிருந்து லேசாகக் காற்று வீசிக் கொண்டிருக்க அவள் மடியிலே தலையை வைத்துத் தூங்குவது அவனுக்கு எவ்வளவு ஆனந்தமாக இருந்திருக்க வேண்டுமோ!

இந்த நித்திரையும், இந்த இன்பமும் எவ்வளவு நேரம். இன்னும் கொஞ்ச நேரந்தான். அவனோ உழைப்பாளி. தூங்கிக் கொண்டிருக்க அவனால் முடியுமா? காலை முதல் உச்சிப் பொழுது வரை உடம்பை எரிக்கும் வெயிலில் பாத்திகளுக்கு நீரைப் பாய்ச்சுவான். அவன் இடுப்பிலே ஒரு துணியும் தலையிலே ஒரு முண்டாசும் தவிர வேறு உடுப்புக் கிடையாது. வாய்க்கால் வழியாகத் தண்ணீர் போகுமிடமெல்லாம் அவனும் போய்க் கொண்டிருப்பான். அவனுக்குத் தான் ஏதாவது உலக விசாரம் உண்டா? தன்னைப் பற்றித்தான் ஏதாவது சிந்திக்கிறானா? சற்று நாளிகைக்கொருதரம் அந்த விசாலமான நிலப்பரப்பை தன் கண்களால் அளந்து பார்ப்பான். பொழுது அடிச்சாய்வதற்குள் இவ்வளவு காடும் பாயவேணுமே என்ற கவலை தான் அவனுக்கு.

கிணற்றிலிருந்து எஞ்சின் குழாய் வழியாகத் தண்ணீரை இழுத்துக் கொட்டிக் கொண்டிருக்கும். அது மடமடவென்று வாய்க்கால் வழியாக வழிந்து ஓடி வந்து இவனுடைய கால்களையும் அணைத்துக் கொண்டு ஒவ்வொரு பாத்தியிலும் பிரவேசிக்கும். அந்த எஞ்சினுக்குத்தான் ஏதாவது சிந்தனை உண்டா? அதற்கு சக்தி உள்ளவரை தண்ணீரைக் கொட்டிக்கொண்டே இருக்கிறது. இடையில் யாராவது நிறுத்தினுல் தவிர அது ஓடிக் கொண்டே இருக்கும். செம்பானும் அதைப் போலவே தான் வேலை செய்து கொண்டே இருப்பான்.

இந்தப் பரந்த உலகம், அதில் உள்ள எண்ணற்ற ஜீவராசிகள், இதைப் பற்றி அவன் சிந்தித்ததே கிடையாது. அவனுடைய உலகத்தில் அவனுடைய எசமான் எசமானி, அடுத்தபடி அவள். இம்மூவரும் தான் இடம் பெற்றிருந்தார்கள். அவனை ஒரு அபூர்வப் பிறவி என்று சொன்னுல் தகும். ஆறு அல்லது ஏழு வயது இருக்கலாம் அப்போது தான் மைனர் மயிலுச் சாமிக் கவுண்டர் பண்ணயத்தில் சேர்ந்தான். இப்போது அவனுக்கு வயது முப்பதுக்கு மேல் ஆகிறது. இன்னும் அவன் அதே இடத்தில் தான் இருக்கிறுன். அவன் பஞ்சமன். அவனுக்கு பெற்றோர்களோ உடன் பிறந்தவர்களோ ஒருவரும் கிடையாது. அவர்கள் பல வருஷங்களுக்கு முன்னதாகவே இவனை விட்டுப் பிரிந்து விட்டார்கள். அன்று முதல் இன்று வரை தன் எஜமானனையே காத்துக்கிடக்கிறுன். அவனுடைய வாழ்க்கையே எசமானனுக்காகத் தான். அவருக்காக அவன் உயிரையே கொடுக்கவும் சித்தமாக இருக்கிறுன். சுய நலத்தைக் கருதியா? இல்லை. எசமானருடைய தூய அன்பு அவனிடம் சுயநலத்தை வளர்க்கவில்லை. அப்படி அவனுடைய எசமானர் என்னத்தைச்

செய்து விட்டார் என்று கேட்கிறீர்களா? அது தான் கதை.

மைனர் மயிலுச்சாமிக் கவுண்டரைப் பற்றியும் அவருடைய மயிலைக் காளைகளைப் பற்றியும் அந்த வட்டாரத்தில் நூறு மைலுக்குத் தெரியாதவர்கள் யாருமே இருக்க மாட்டார்கள். அவரைவிட அவருடைய காளைகளுக்குத் தான் கியாதி அதிகம். அந்தக் காளைகள் ஒரு இடத்தில் நிறுத்தப்பட்டிருந்தால் ஜனங்கள் ஒரு தேர்க் கூட்டம் போலக் கூடி நின்று வேடிக்கை பார்ப்பார்கள். முதல் தரமான மோட்டார் வண்டிக்குச் சரியாக எத்தனையோ தடவை அவைகள் ஓடியிருக்கின்றன. அவைகளோடு போட்டியிட்டுக் காலொடிந்த குதிரைகளும், காளைகளும் அநேகம். பந்தயங் கூறி தோல்வி அடைந்து அவமானப் பட்டவர் பலபேர்.

தாமரைக்குளம் கிராமத்திலே அவருடைய வீடு ஒன்றுதான் மிகப் பெரியது. அதோடு அவரும் பெரும் பணக்காரராக இருந்தார். கிராமத்திலே அவரைப் 'பெரியூட்டு அப்பன்' என்று குறிப்பிடுவார்கள். அவர் யாருக்கும் அஞ்சாத நெஞ்சு படைத்தவர். ஆனால் பிறருக்குத் தீங்கு செய்யக் கனவிலும் நினைக்க மாட்டார். அவருடைய சிரித்த முகம் எல்லோரையும் ஆட்டி வைக்கும். ஏழை எளியவர்களிடம் ரொம்பவும் அன்பு உடையவர். அவர்களுக்கு கை கூசாமல் பொருளுதவி செய்வார். கலியாணங்கள் செய்து வைப்பார். அவருடைய ஆதரவில் பல பேர்கள் சுக வாழ்க்கை நடத்தினார்கள். அவர் அடிக்கடி விருந்துகள் நடத்துவார் அவருடைய வீடு அரண்மனையைப் போல எப்போதும் கலகலப்பாகவே இருக்கும். கேட்பவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் கொடுப்பார். அடிக்கடி காளைகள் வாங்குவதும் விற்பதும் அவருக்கு ஒரு பைத்தியம்.

இத்தகைய செலவுகளால் அவருடைய செல்வம் நாளடைவில் குறைந்து விட்டது. அவருடைய மனைவி மாரக்காள் மகா உத்தமி எனப் பேர் பெற்றவள். கணவனோடு போட்டி போட்டுக் கொண்டு ஏழை எளியவர்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்தாள். கவுண்டர் கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்டு அறியாதவர். ஆனால் வாங்கிய பணத்துக்கு பூமியை விற்று கடனை அடைத்தார். ஒருவருக்கும் ஒரு சல்லிக் காசு கூட பாக்கி வைக்கவில்லை. இப்போது மிஞ்சியது, எஞ்சின் தோட்டமும் அதைச் சேர்ந்த தோப்பும் மட்டுந்தான். எத்தனையோ பேர் அவரை விட்டுப் போய் விட்டார்கள். ஆனால் செம்பான் மட்டும் அவரை விட்டு நகரவில்லை. அதோடு அவர் மேஜராகிப் பல வருஷங்கள் ஆகியுங் கூட 'மைனர்' என்ற பட்டமும் அவரை விட்டுப் போகவில்லை. கவுண்டருக்கு செம்பானிடம் அளவற்ற பிரியமும் நம்பிக்கையும் உண்டு. அவனுடைய பார்வையில்தான் எஞ்சின் தோட்டத்தை விட்டிருந்தார். அவனுக்குத் துணையாக இரண்டு சிறுவர்களை மட்டும் வைத்திருந்தார். செம்பானுக்கு கவுண்டர் வீட்டிலிருந்து தான் தினமும் சாப்பாடு போகும். மாரக்காள் அவனைத் தன் குடும்பத்தில் ஒருவனாகவே நினைத்திருந்தாள். அவனுடைய வஞ்சனையற்ற உழைப்பு அவர்களை அவ்வளவு தூரம் கவர்ந்து விட்டது.

மாரக்காள் கவுண்டரிடம் செம்பானுக்கு ஒரு கலியாணம் செய்து வைக்கும்படி அடிக்கடி சொல்லுவாள். கவுண்டருக்கும் ரொம்ப நாளாகவே அந்த ஆசை உண்டு. ஆனால் உள்ளூர்ச் சேரியிலுள்ளவர்களின் பழக்க வழக்கங்கள் அவருக்குப் பிடித்ததாயில்லை. அவர்களோடு சேர்ந்து செம்பானும் கெட்டுப்போவான் என்ற எண்ணத்தினால் நாள் நகர்ந்து கொண்டே வந்

தது. "நம்ப செம்பானுக்கு எங்கெயாச்சும் ஒரு பொண் பொறந்து வளந்துகிட்டு இருப்பா! ஒரு நாளைக்கி வராமையா போகு?" என்று மாரக்காளுக்கு சமாதானம் சொல்லுவார். செம்பானுக்கு நல்ல விதமாகக் கலியாணம் செய்ய வேண்டுமென்பது கவுண்டரின் ஆசை. அவனுக்கு உரிய பெண் எங்கே இருக்கிருள்? அதுதான் அவருடைய கேள்வி.

செமபான ஒவ்வொரு வருடமும் செஞ்சேரி மலைத் (தென் சேரி கிரி என்றும் சொல்லுவார்கள்) தேருக்குப் போவது உண்டு. இந்த வருசமும் தேருக்குப் போயிருந்தான். தேருக்குப் போகும் போதெல்லாம் கவுண்டர் அவனுக்கு வேண்டிய பணம் கொடுத்து அனுப்புவார். மலையைச் சுற்றி வேடிக்கை பார்ப்பதிலும் கொடைத்தூரி ஆடுவதிலும் அவனுக்கு ரொம்பப் பிரியம். இந்த வருசம் கொடைத்தூரி ஆடுவதிலேயே உற்சாகமாக இருந்தான். குழந்தைகளும், கலியாணமான, ஆகாத ஆண்களும் பெண்களும், பெரியவர்களும், அந்தத் தூரியில் உட்கார்ந்து ஆடி, ஆடி ஆனந்தப் பட்டுக் கொண்டிருந்தார்கள். செம்பானுக்குத் தூரியை விட்டு நகரவே பிரியமில்லை. அவன் மட்டுமென்ன? கிராமத்துச் சனங்களே அப்படித்தான். தூரி சுற்றிச் சுற்றி வருவது அவர்களுக்கு வேடிக்கையாக இருந்தது.

அவன் பத்தாவது தடவையாக ஒரு சிம்மவாகனத்தின் மீது ஏறி உட்கார்ந்தபோது அவனுக்குப் பக்கத்தில் ஒரு இளம் பெண், குதிரை வாகனத்தின் மீது வந்து அமர்ந்தாள். தூரி சுற்ற ஆரம்பித்தது. முதல் இரண்டு மூன்று சுற்றுக்கள் மெதுவாகவே வந்தது. வரவர வேகம் அதிகமாயிற்று. செம்பானுக்கு ஒரே ஆனந்தம். அந்த ஆனந்தத்தில் தன்னை மறந்து சீக்கியடித்துக்கொண்டிருந்தான். அப்போது அவன் மீது

ஏதோ திடீரென மோதவே அவன் முதலில் பயந்தே போய்விட்டான்.

கவனித்துப் பார்க்கும்போது வேறு யாருமில்லே. அவன் பக்கத்திலிருந்த பெண்தான். தூரி வேகமாகச் சுற்றி வந்ததால் மயக்கம் வந்து அவன் மேல் சாய்ந்து விட்டாள். அவன் அவளை அப்படியே கைகளால் தாங்கிக் கொண்டான். அப்போது தூரி வேகமாகச் சுற்றி வந்து கொண்டிருந்தது. அந்த நிமிஷம் அவனுக்கு இன்பமோ, துன்பமோ யாரால் சொல்ல முடியும்? தூரி நின்ற போது தான் 'அப்பாடா' என்று ஒரு பெரு மூச்சு விட்டான். அப்போதும் அவளுக்கு மயக்கம் தெளியவில்லே. மெதுவாகத் தூரியிலிருந்து இறங்கி வெளியில் கொண்டு வந்தான். வெளிக் காற்றுப் பட்ட கொஞ்ச நேரத்துக்குப் பின் அவள் லேசாகக் கண்களைத் திறந்து பார்த்தாள். அப்போது அவளுடைய தலே செம்பானுடைய மடிமேல் தானிருந்தது. தான் இன்னொருவர் மடிமேல் அதுவும் தனக்கு அறிமுகம் இல்லாதவன் மடிமேல் இருப்பதை உணர அவளுக்கே வெட்கம் வந்து கண்களை இறுக மூடிக் கொண்டாள். அவளைச் சுற்றிலும் நின்றவர்கள் ஒன்று அவனுடைய மனைவியாகவோ அல்லது தங்கையாகவோ இருக்கவேண்டும் என்று நினைத்தார்கள். ஒரு பெரியவர் தன் கையிலிருந்த விசிறியை செம்பானிடம் கொடுத்து அவளுக்கு கொஞ்சம் காற்றுப் படும்படி விசிறச் சொன்னார். செம்பான் லேசாக விசிறினான். கூட்டமும் சற்று விலகியது. அந்தப் பெண் சிவுக்கென்று எழுந்து உட்கார்ந்தாள். செம்பானை ஒரு பார்வை பார்த்து விட்டு தலேயைக் குத்திக் கொண்டாள். செம்பான் போவதற்காக தன் உடையிலிருந்த மண்ணைத் தட்டிக் கொண்டு எழுந்திருந்தான். அவனுடைய கால்கள் நகரவில்லே. எதையோ தேடுப

வன் போல அவன் கண்கள் மிரள மிரள விழித்தன. அவளும் புறப்படத் தயாராக எழுந்து நின்ருள். அவனுக்கு அவளை ஏதோ கேட்க வேணும் போலத் தோன்றியது. ஆனல் அவன் வாயிலிருந்து வார்த்தை வரவில்லே. அவள் இரண்டடி நகர்ந்தபோது தான் 'எங்கே போறே' என்று தைரியமாகக் கேட்டு விட்டான். அவள் 'எங்கப்பங் கிட்டே' என்ருள்.

'உங்கப்பன் எங்கிட்டு இருக்கிருன்?'

'அவரு, அந்த மரத்துக்கடியே தூங்கியிட்டு இருப்பா.'

'தூங்கிட்டா!'

'ஆமா, நா தூரியாட வந்தப்போ அதோ அந்த மரத்து நெழல்லே படுத்து தூங்கிக்கிட்டு இருந்தா'

'அங்கிட்டு இப்பொக் காணமே'

'ஐயோ!'

இருவரும் அந்த இடத்துக்குப் பாய்ந்து சென்ருர்கள். அங்கு அவன் இல்லே. இருவரும் மலேயைச் சுற்றிலும் தேடி வந்தார்கள். கூட்டமாக இருந்த இடங்களிலெல்லாம் நுழைந்து நுழைந்து பார்த்தார்கள். அவன் இவர்கள் கண்ணில் படவேயில்லே. பொழுது சாய்ந்து விட்டது. நிலாக்கிளம்பி வெகுநேரம் வரைக்கும் தேடித் தேடி அலுத்துப் போய் விட்டார்கள். செம்பான் அவளேப் பற்றிய செய்தியெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டான். அவள் பெயர் செல்லி. அவளும் அவனுடைய சாதியைச் சேர்ந்தவள் தான். அவளுக்கு வயது சென்ற தகப்பனைத் தவிர வேறு யாரும் இல்லே. ஒரே பெண்ணுகையால் கிழவன் பிரியமாக வைத்திருந்தான். அவனும் அவளும் கூலி செய்து ஜீவனம் செய்து வந்தார்கள். அன்று தந்தையும் மகளும் தேர் பார்க்க வந்திருந்தார்கள். கிழவன் நடந்து வந்த அலுப்பில் மரத்தடியில் படுத்துத் தூங்கி

விட்டான். அவள் இளம் பெண் தானே. வேடிக்கை பார்க்கக் கிளம்பிவிட்டாள். அவன் தூக்கங் கலைந்து மகளைத் தேடிப் பார்த்தான். அவன் கண்ணுக்கு அவள் தென்படவில்லை. ஊருக்கே போயிருப்பாளோ என்று சந்தேகித்து ஊர்ப் பக்கமாக கிளம்பி விட்டான்.

இப்போது அவளுடைய தகப்பனைக் காணவில்லை. அவன் அங்கு இருந்தால்தானே? பொழுதோ ஏறிக் கொண்டே போகிறது. செம்பானுக்குப் பெரிய கவலை வந்துவிட்டது. அவளை என்ன செய்வது? விட்டுச் செல்வதா? தன்னோடு கூட்டிப் போவதா? அவள் வருவாளா? இந்தக் கேள்விகள் அவன் மனதில் எழுந்தன.

"நீ எங்கூட வாரியா?" என்று அவன் ஆரம்பித்தான்.

"உஹூம்" என்று அவள் அழுதாள்.

"செல்வீ, இங்கிட்டுப்பாரு. உங்கப்பனை எங்கிட்டும் காணம். நீ ஊருக்குப் போறதுண்ணுப் போயிரு."

செல்வீ என்று அவன் பேர் சொல்லிக் கூப்பிடவும் அவளுக்கு வெட்கம் வந்து விட்டது. கொஞ்ச நேரம் பேசாமல் இருந்தாள்.

"என்ன பேசமாட்டே"

"ஒண்டியா, எப்படிப் போறது?"

"அப்போ பேசாமே எம்பின்னேடே வந்திடு"

"உம்பின்னேடேயா? எதுக்கு"

"எதுக்கா?"

"ஆமா அது தாங் கேக்கறது"

"செல்வி, விளையாடாதே. பொளுது கிளம்பரதுக்குள்ளே போகவேணும் தெரிஞ்சுதா"

"போறது"

செம்பான் நடந்தான். அவன் கொஞ்சதூரம் போகும் வரை செல்வி பார்த்துக் கொண்டே நின்றிருந்தாள். அவளுக்குத் துக்கம் பொத்துக்கொண்டு

வந்தது. அப்பனையுங் காணும். இராத்திரி நேரம். என்ன செய்வதென்றே அவளுக்குத் தெரியவில்லை. இடையில் வந்த இவனை விட்டுப் பிரியவும் அவளுக்கு மனம் வரவில்லை. காந்தம் ஊசியை இழுப்பது போல அவளுடைய நெஞ்சையே அவன் பிளந்து கொண்டு போகிருன். எழுந்து பைத்தியக்காரியைப்போல் அவன் பின்னே ஓடினுள். அவன் கையைப் பிடித்து இழுத்து நிறுத்தினுள்.

"நீ என்ன ஆம்புளே. என்னே ஒண்டியா உட்டிட்டுப் போறயே?"

"சரி, வா"

"எங்கே கூட்டியிட்டுப் போறே?"

"எங்க ஊருக்கு"

"அங்கே யாரு இருக்கருங்க"

"எல்லா இருக்குருங்க"

"யாரு எல்லாம்?"

"எங்கப்பன் அம்மா எல்லாம்."

"என்னெக் கூட்டிப் போறயே அவுங்க ஒண்ணும் சொல்ல மாட்டாங்களா"

"என்ன சொல்வாங்கோ, உன்னைக் கண்ணுலம் கட்டிக்கச் சொல்லுவாங்கோ!"

இருவரும் விழுந்து விழுந்து சிரித்துக்கொண்டே அந்தக் காட்டு வழியிலே நடந்தார்கள். முதல் கோழி கூப்பிடும் நேரம் இருவரும் வழி நெடுகப் பேசிக் கொண்டே தோட்டத்தை அடைந்தார்கள். இவர்களுடைய சத்தத்தைக் கேட்டு நாய் ஒன்று குலைத்துக் கொண்டு வந்தது.

அது பக்கத்தில் வந்ததும்,

"அடே கருப்பா, என்ன சும்மா சத்தம் போடறயே" என்ருன் செம்பான். தன் தோழனை அறிந்து

கொண்ட கருப்பன் வாலை ஆட்டிக் கொண்டே அவளை உற்றுப் பார்த்தது.

"அவ, எம் பொஞ்சாதி. சும்மா பாக்காதே" என்ருன் செம்பான்.

"உங்கோ அப்பன், அம்மா எல்லாம் எங்கே?" என்ருள் அவள்.

"வெடிஞ்சப்பறம் வருவா. படுத்துத் தூங்கு" என்ருன் அவன்.

ஆளுக்கொரு தென்னந் தடுக்கைப் போட்டுக் கொண்டு சாலையின் முற்றத்தில் படுத்துக் கொண்டார்கள். நடந்து வந்த அலுப்பிஞல் அவள் சீக்கிரம் கண் அயர்ந்து விட்டாள்.

செம்பானுக்குத் தூக்கம் வரக் கொஞ்ச நேரம் பிடித்தது. சாலையில் எசமானன் வந்து அவளைப் பற்றிக் கேட்டால் என்ன சொல்வது என்று சிந்தித்த படியே தூங்கி விட்டான்.

கிராமத்தில் பொதுவாக எல்லாக் குடியானவர்களுமே எவ்வளவு செல்வம் உடையவர்களாக இருந்தாலும் சரி அதிகாலையில் படுக்கையை விட்டு எழுந்தவுடன் தங்களுடைய வயலோ, தோட்டமோ எதுவாஞலும் போய் சுற்றிப்பார்த்து வந்து பின்னிட்டுத் தான் மற்ற வேலை. ஆஞல் மயில்சாமிக் கவுண்டருக்கு அந்தப் பழக்கமே கிடையாது. அத்தி பூப்பது போல அன்று மட்டும் அதிகாலையில் எழுந்து தோட்டத்துக் குக்கிளம்பி விட்டார். அன்று எழுந்திருக்கும் போதே அவருடைய மனதுக்கு உற்சாகமாக இருந்தது. காரணம் இன்னதென்றே அவருக்குப் புரியவில்லை.

ஆஞல் இன்று காலையில் தோட்டத்துக்குப் போவதற்கு மட்டும் காரணம் இருந்தது. இராத்திரி ரொம்ப நேரம் வரை செம்பான் வரவில்லை என்பதை அறியவே அவர் அதிகாலையில் சென்ருர்.

கவுண்டர் களத்தை அடைந்ததும் அவர் கண்ணில் பட்ட முதல் உருவம் செல்விதான். அப்படியே மெய் மறந்து நின்று விட்டார் கவுண்டர். இளஞ்சூரியனின் பொன் கிரணங்கள் செல்வியின் முகத்தில் விளையாடிக் கொண்டிருந்தது. அவளுடைய முகப் பொலிவையும் அழகையும் பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை. அவள் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். செம்பான் கொஞ்ச தூரத்தில் வைக்கோல் சுருணைகளை தலைக்கு வைத்துக் கொண்டு நித்திரை என்ற சுகத்தை அனுப வித்துக் கொண்டிருந்தான். அவனுடைய முகத்தில் கவலை நிரம்பிய குறிகள் தென்பட்டன. கவுண்டருக் குச் சுய ஞாபகம் வரக்கொஞ்ச நேரம் பிடித்தது. அவ ருடைய உள்ளத்தில் அப்போதுதோன்றிய கட்டுக்கடங் காத சந்தோஷத்தில் அவனை அப்படியே கட்டித் தழு வலாம் போலத் தோன்றியது. 'எஞ் சோசியம் சரியாப் போச்சு' என்று சொல்லிக்கொண்டே வீட்டுக்குள் நுழைந்தார் கவுண்டர்.

"என்னங்கோ காலங்காத்தாலே, செம்பான் வந் திட்டானு?"

"ஆமா, நம்ப செம்பானோடே ஒரு அளவான பொண் வந்திருக்கரு. ராணிண்ணு அவளைத்தான் சொல்ல வேணும்."

'அப்படியா! பாவம் ராத்திரி சாப்பாடு எங்கிட்டு சாப்பிட்டாங்களாம்'

'அட, அவுங்க இன்னம் தூங்கருங்க. என்னப் பாத்தா வெக்கப் படுவாங்களா இல்லியா? நீ போயி சுருக்கா எல்லாத்தையும் விசாரிச்சிட்டுவா. சீக்கிரம் கண்ணாலம் செஞ்சு போடலாம்'

மாரக்காள் ஒரு பானை நிறைய பழய சோறு கரைத் துக் கொண்டு உடனே கிளம்பினுள் தோட்டத்துக்கு. அப்போதுதான் எழுந்த செல்வி அந்தப் புதிய இடத் தை வெருண்ட பார்வையோடு சுற்றிச் சுற்றிப்

பார்த்துக் கொண்டிருந்தாள். மாரக்காள் தாய்மை கலந்த பரிவோடு, 'வா அம்மணி, வா. பயப்படாதே' என்று அவளைக் கூப்பிட்டாள். எசமானியின் குரலைக் கேட்ட செம்பான் சுருட்டியடித்துக் கொண்டு எழுந் திருந்தான். 'எண்டா, செம்பா நீ வருசா வருசம் கோயிலுக்குப் போனது வீணாப் போகுலையுடா எங்க பாரம் இண்ணைக்கித் தாண்டா இறங்குச்சு. போங்க வாய்க்கால்லே பல்லெத் தேச்சுகிட்டு வாங்கோ, பழய சோறு குடிக்கலாம்' என்ற எசமானியின் வார்த்தை கள் அவனுக்கு ரொம்பவும் ஆறுதலாக இருந்தது.

மாரக்காள் கவுண்டரிடம் அவர்கள் சந்திப்பைப் பற்றிச் சொன்ன போது அவர் சிரி சிரி என்று சிரித் தார். அடுத்த மாதத்திலேயே செல்லியின் அப்பனையும் வரவழைத்து கலியாணத்தை களத்துச் சாளையிலேயே சிறப்பாக நடத்தி வைத்தார். உள்ளூர் சேரியிலுள்ள வர்களுக் கெல்லாம் முதல் தரமான விருந்து. கவுண் டரின் மேதையை அறிந்தவர்கள் அவரைப் போற்றி ஞர்கள். செம்பான் கலியாணத்தை ஒட்டி அவர் ஊருக்கெல்லாம் ஒரு விருந்து வைத்தார். அவரை கண்டித்தவர்களும் கூட விருந்துக்கு வரத் தவற வில்லை. கவுண்டரும் மாரக்காளும் தங்களுடைய குழந்தை களுக்கு நடந்த கலியாணமாகவே பாவித்துக் சந் தோஷப் பட்டார்கள்.

சென்ற மாதம் தீபாவளிப் பண்டிகை வந்த தல்லவா? பாவம் இந்த இளந் தம்பதிகள் தீபாவளிக்கு எங்கு போவார்கள்? செல்லியின் தகப்பனும் கலி யாணத்துக்குப் பின் இங்கேயே தங்கி விட்டான். கவுண்டர் மட்டும் தம்பதிகளை மறந்து விடவில்லை. அவர்களுக்கு புதுவேஷ்டி சேலை எல்லாம் வாங்கிக் கொடுத்தார். மாரக்காள் பலகார பட்சணங்களெல் லாம் தன் பங்குக்கு அதிகமாகச் செய்து கொடுத்தாள்.

தீபாவளியன்று அதிகாலையில் இந்த இளம் தம்பதிகள் குளித்து விட்டுப் புதிய ஆடைகளை உடுத்துக் கொண்டார்கள். செல்வியின் அழகு அன்று அழகுக்கு அழகு செய்தது போல் இருந்தது. அவள் அந்தக் காட்டு மல்லிகை மரத்தடியில் அதைத் தழுவி நின்று கொண்டிருந்தாள். மருதை அவளுடைய கூந்தலில் காட்டு மல்லிகையை கொத்துக் கொத்தாக ஒடித்துச் சொருகி அழகு பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு அவள் தாழ மடல் பக்கத்தில் போய் பூப்பறிக்க உட்கார்ந்தாள். சற்று தூரத்திலிருந்து அதை வேடிக்கை பார்த்தான். அவனுடைய ஆசைக்கு எல்லையில்லாமல் போய்க் கொண்டிருந்தது.

இரண்டு உருவங்கள் இந்தக் காட்சியைக் கண்டு ஆனந்தப் பட்டன.

பக்கத்தில் எசமானருடைய காலடியைக் கேட்டதும் செம்பான் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

அப்படியே பொங்கி எழுந்த அன்பினால் கட்டுண்ட அவன் அவர் கால்களில் விழுந்தான். 'அடடே புது வேட்டியெல்லா மண்ணாகுது தேடா' என்று அவனைத் தூக்கி மார்போடு தழுவிக் கொண்டார். அதைக் கண்டு மனம் பொறுத மாரக்காள் செல்வியைத் தன் அருகில் இழுத்துக் கட்டி அணைத்துக் கொண்டாள். செல்வியின் கண்களிலிருந்து முத்துப் போன்ற கண்ணீர்த்துளிகள் அரும்பி உதிர்ந்தன. ஆனந்தத்தாலா, தாய்மை நிறைந்த மாரக்காளின் அன்பு அணைப்பினாலா?

எதுவானுலென்ன?

தேவர்கள் பூமாரி பொழியவில்லை. ஆனால் அந்தக் காட்டு மல்லிகை மரம் குலுங்க மலர்கள் பொலபொலவென உதிர்ந்தன!

இதய தாகம்

ஊரடங்கி எங்கும் நிசப்தம் நிலவி இருந்தது. குடியானவர்கள் பகலெல்லாம் வயல்களிலும் தோட்டங்களிலும் வேலை செய்த அலுப்பினால் இராச் சாப்பாட்டுக்குப் பின் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தார்கள். பட்டிக்குப் பின்காவலுக்குப் போகும் ஒன்றிரண்டு பேர் கம்பளியைப் போர்த்திக்கொண்டு கையில் கழியைத் தாங்கிச் சென்று கொண்டிருந்தார்கள். நிலவு பகல்போலக் காய்ந்து கொண்டிருந்தது. பெரிய பண்ணாடி கோபாலசாமிக் கவுண்டர் வீட்டில் மட்டும் இன்னும் கலகலப்பாகவே இருந்தது. இன்று வெளியூரிலிருந்து அவருடைய மாப்பிள்ளை வீட்டார்கள் வந்திருந்தார்கள். சாதாரண நாட்களிலேயே பண்ணாடி வீட்டில் எல்லோரும் சாப்பிட்டு கடைசி ஆள் படுக்கப் போகும்போது மணி 'ஒண்ணு ரண்டு' ஆகிவிடும். கோபாலசாமிக் கவுண்டர் சாப்பிட்டான பிறகு வீதித் திண்ணையில் வந்து உட்கார்ந்தார். அவருக்கு முன் பக்கத்தில் வெற்றிலைத் தட்டம் வைத்திருந்தது. கவுண்டருக்கு வயது அறுபதுக்கு மேலிருக்கும். பார்வைக்கு நாற்பதுக்குக் குறைந்த வயதுள்ளவராகவே மதிக்கலாம். ஊரிலும் சுற்றுப்பக்கத்திலும் மிகுந்த செல்வாக்கு பெற்றவர். ஊரிலிருந்து வந்த அவருடைய மாப்பிள்ளை தங்கவேலுக் கவுண்டர் திண்ணையின் ஒரு பக்கத்தில் உட்கார்ந்து வெற்றிலை மடித்துப் போட்டுக் கொண்டிருந்தார். அப்போது நடு வளவு நாச்சியப்ப கவுண்டர் அங்கு வந்து சேர்ந்தார். அவரோடு பக்கத்து வீட்டுப் பழனிக்கவுண்டரும், செல்லப்ப கவுண்டரும் வந்து திண்ணையில் உட்கார்ந்தார்கள். "என்னுங்க அண்ணை, சோறு உண்டு ஆச்சுதுங்களா? சாவகாசமா உக்காந்திட்டீங்க?"

"வா, அப்புனு வா. எல்லாம் ஆச்சு. இண்ணக்கி கொஞ்ச நேரந்தா ஆயிட்டது. ஊரிலே இருந்து அவுங் கெல்லாம் வந்தாங்க........"

"யாரு? (அந்தப் பக்கம் பார்த்து) அடடே! மாப் புள்ளையா வாங்க, வாங்க... நாம் பாக்கிலையா..... போங்கப்புனு இந்த கண்ணு ரண்டும கொஞ்சம் மங் கலாத் தெரியுதுங்க. வயசு ஆயுருச்சு பாருங்க........ மாப்புளே எப்ப வந்தாப்புலே"

"வாரனுங்க மாமா. பொளுது சாய வந்தழுங்க"

"என்னுங்க மாப்புளே..... நீங்க படிச்ச வங்க. அடிக்கடி ஊருசேரி போறவங்க—வாறவங்க. காயித் திலே படிப்பீங்களே. சண்டைச் சங்கதி யெல்லாம் எப்படியாச்சுதுங்க?"

"சண்டை ஒரு பக்கத்திலே நடந்துகிட்டுத்தான் இருக்குதுங்கோ. அது எவடத்தெ தீந்தாப்புலே இருக் குதுங்க?" என்ருர் எதையோ நினைத்துக் கொண்டவர் போல.

மாப்பிள்ளை, "அது எங்கெ தீந்தாப்புலே இருக்கு துங்க?" என்று வெளிப்படையாகச் சொன்னுலும் அதே கேள்வி அவர் உள்ளத்திலும் எதிரொலித்தது. தங்கவேலு, டவுன் பள்ளிக்கூடத்திலே ஒன்பதாவது வகுப்பு வரை படித்தவர். அவருக்கு அதற்கு மேலே படிப்பில் ருசியில்லாததால் அதோடு படிப்பை நிறுத் திக்கொண்டார். சமீபத்தில் தான் கோபாலசாமிக் கவுண்டரின் ஒரே பெண்ணை பவளாத்தாளை மணம் செய்து கொண்டார். அவர் ஏராளமான நாவல்களும் நவீனங்களும், கதைகளும் படித்ததன் பயனுகத் தன் இளம் மனைவியோடு உல்லாசமாக இருக்க ஆசைப்படு பவர். புதுமலர் ஒன்று வாசத் தென்றலில் மகிழ்ந்தாட விரும்புவது போல் அவரும் தன் புது மனைவியோடு

மகிழ்ந்திட ஆசை கொண்டவர். ஆனால் தன் சொந்த ஊரில் வீட்டில் கூட்டம் அதிகம். அவருடன் பிறந்தவர்கள் ஏழெட்டுப் பேருக்குக் குறைவில்லாமல் இருந்தார்கள். அதோடு அவருடைய தாய் தகப்பன், பாட்டன் பாட்டி எல்லோருமாகச் சேர்ந்து ஒரு பெரிய குடும்பம். மனைவியோடு கொஞ்சி விளையாட அங்கு இடமில்லை.

வீட்டில் தங்கினால் தகப்பனார் சண்டை போடுவார். 'என்னடா, நாங்கெல்லாம் உன்னைப்போல கல்யாணம் பண்ணிக்கிலையா! எந்நேரமும் வீட்டைச் சுத்திக்கிட்டே திரியரே. போடா போ, வேலையைப் போய்ப் பாரு'' என்று கண்டிபபார். பவளாத்தாளும் அதிகமாகத் தன் தந்தை வீட்டிலேயே இருப்பாள், தங்கவேலுக் கவுண்டர் இங்கு அடிக்கடி வரவும் சம்மதியார். ஆகையால் வந்ததும் நாலைந்து நாளில் திரும்பி விடுவார். இன்றும் இரண்டொரு நாளில் திரும்ப வேண்டும் என்ற கண்டிப்பான உத்திரவோடு வந்திருந்தார். ஊரிலிருந்து வண்டியில் வரும்போது அவர் என்னென்னவோ கற்பனையெல்லாம் செய்துகொண்டு வந்தார். அன்று இரவு தன் மனைவியோடு அவர் எவ்வளவோ விஷயங்கள் பேச வேண்டி இருந்தது! அவருடைய உள்ளத்தை அறிந்தன போலவே வண்டிக் காளைகளும் வெகு துரிதமாக அவரைக் கொண்டு வந்து சேர்த்தன.

பவளாயும் அவருக்கிசைந்த நல்ல பெண். தன் கணவன் குறிப்பறிந்து நடப்பதில் கெட்டிக்காரி. தன் புருஷனைக் கண்டவுடனே அவன் உள்ளத்துடிப்பை யெல்லாம் உணர்ந்து விட்டாள். அவளும் கொஞ்சம் படித்திருக்கிறாள். அவ்வப்போது புருஷன் வாங்கிக் கொடுத்த நாவல்களைப் படித்திருக்கிறாள். அவளுடைய கணவனே அவளுக்கு உயிர். அன்று ராத்திரி தன் கணவனுக்குப் பிரியமான உணவு வகைகளை எல்லாம்

தானே தன் கைப்பட வெகு சீக்கிரத்தில் தயாரித்து விட்டாள். அவளாகவே பக்கத்திலிருந்து வேண்டிய உபசரணைகளைச் செய்தாள். அவனுக்கு மற்றவர்கள் எதிரில் இல்லாவிட்டாலும் அக்கம் பக்கத்தில் இருந்தாலே மனைவியோடு பேச சங்கோசம். சொந்த வீட்டில் ஏற்பட்ட பழக்கம் அது. மாமனார் வீட்டில் அந்தத் தொந்தரவுகள் இல்லாவிட்டாலும் வீட்டு ஞாபகமே ஊறிப் போயிருந்த அவனுக்கு அடிக்கடி அந்த எண்ணம் வந்து விடும்.

கோபல்சாமிக் கவுண்டருக்கு ஊரடுத்து ஒரு தோட்டம் உண்டு. அங்கு கிணற்றோரம் நந்தவனமும் அதைச் சேர்ந்து அழகான பங்களாவும் கட்டியிருந்தார். பங்களா இக்காலத்துக்கு ஏற்ற வசதிகளோடு அமைந்திருந்தது. கிணற்றிற்கு எலெக்டிரிக் மோட்டார் வைத்திருந்ததால், அதிலிருந்தே பங்களாவுக்கும் மின்சார விளக்குகள் அமைத்திருந்தார். பகல் நேரத்தில் கவுண்டர் அதிகமாக அந்தப் பங்களாவில் தான் இருப்பார். இரவில் வீட்டிலேயே தங்கி விடுவார். பந்துக்கள் யாராவது வந்தால் அங்கு வசதியாக இருப்பார்கள். தங்கவேலு வந்தபோதெல்லாம் அந்த பங்களாவில் தான் அதிகமாகத் தங்கியிருப்பார்.

'அகத்தின் அழகு முகத்தில்' என்பார்கள். ராத்திரிச் சாப்பாடு ஆனவுடன் பவளக்காள் காய்ச்சியெடுத்த மதுரமான பால் கூஜாவோடு அந்த பங்களாவுக்குச் சென்று விட்டாள்.

மாப்பிள்ளை ஏதோ உபசாரத்திற்கு ஒன்றிரண்டு வார்த்தைகள் மாமனாரோடு பேசி விட்டுப் போகலாம் என்று திண்ணைக்கு வந்தார். ஆனால் எதிர் பாராத விதமாக நாச்சியப்ப கவுண்டர் வந்து சேர்ந்தார். அவர் ஏதாவது 'நச் நச்' சென்று ஓயாமல் கேட்டு வாயைப் பிடுங்குவார். ஆளையும் விடமாட்டார். மாப்பிள்ளை

மனதுக்குள்ளாகவே அவரைச் சபித்துக் கொண்டார். ஆனாயும் விடமாட்டார். நாலு பேருக்கு மத்தியில் திடீரென்று எழுந்து போவதும் மரியாதையல்ல. தர்ம சங்கடமாக இருந்தது அவருக்கு. நாச்சியப்ப கவுண்டரும் விட்டவரல்ல. அவர் உடனே கேள்வி மேல் கேள்வி போட ஆரம்பித்து விட்டார்.

"என்னங்க. நம்ப ராசா சயிப்பானுங்களா?"

"நம்ப ராசாவுக்கு இப்பொ கொஞ்சம் நல்ல காலம் பொறந்திருக்குதுங்க"

"அதென்ன சேதி?"

"இந்தச் சர்மனிக்காரன் இவ்வளவு நாளும் கொஞ்சம் ஆட்டம் காட்டினானுங்க. எத்தனை நாளைக்கி அது நடக்குமுங்கோ. இப்போ ரசியாக்காரன் அவனை ஒதைக்கிறான். அதை வாங்கிக் கிட்டு குந்தியிருக்கானுங்க."

"அட யெளவே!"

"அதோடே அந்தச் சர்மனிக்கு ஒத்தாசை பண்ணிக்கிட்டு இருந்தான் இட்டாலிக்காரன். அவன் நம்ம ராசாவுக்குக் கூளக் கும்பிடு போட்டானுங்க. இனிச் சர்மனிக்காரன் பாடு கொஞ்சம் திண்டாட்டந்தான்."

"அதென்னுங்க மாப்புளே. இட்டலி இட்லிண்ணு சொல்றீங்களே. அது என்ன பேருங்க?"

"இட்டலி கடையிலே விக்குதே அது அல்லங்க. இடாலி, இதாலிங்கறது ஒரு தேசம். செர்மனிக்கு சிநேகமா இருந்ததுங்க."

"அப்படியா சமாச்சாரம். ஒரலுக்கு ஒருபுறம் இடியிண்ணு தவுலுக்கு ரண்டு பக்கமும் இடியிண்ணு சொல்லுவாங்களே. அப்படியல்லங்க இருக்குது கதை."

''நல்லாச் சொன்னீங்க போங்க. அப்படித்தா ஆச்சு. அவன் ரசியாக்காரேனோடும் சண்டை போட்டுக்கவேணும். நம்ப ராசாவையும் கவனிச்சுக்க வேணும். ஆனா அவன் போட்ட ஆட்டத்துலே அவனுக்கு இடுப்பெல்லாம் ஒடுஞ்சு போச்சுங்க.

''அடே எளவே அப்பறம்?''

"அப்பற மென்னுங்க. நம்ம ராசாவுக்கு பக்க பலமா அமெரிக்கா வேறே.''

''அடேயப்பா, அமரிக்காவா, என்னுங்க மாப்பிளே நம்ப ராசா பாடு கொண்டாட்டந்தான்.''

''அப்படித்தான் இருக்குதுங்க.''

''ஆமா, இந்தச் சப்பான்காரன் என்ன பண்ணரானுங்கோ?''

''அவன் என்னத்தைப் பண்ணுவானுங்க. அவனும் சர்மனிக்காரனே நம்பிக்கிட்டு இருந்தானுங்கோ. இப்போ இத்தாலிக்காரன் கதியைப் பாத்திட்டு அவனும் முழியா முழிக்கிறானுங்கோ!''

''இனிமே அவம்பாடும் திண்டாட்டமுண்ணு வையுங்கோ, ஆமாங்கோ இந்த விலைவாசி யெல்லாம் இப்படி ஏறிட்டே போவுதுங்களே, இதுக்கு ஒரு முடிவு இல்லையிங்களா!''

''சண்டை நடக்கிற வரைக்கும் விலைவாசிங்களெல்லாம் இப்படித்தானுங்க இருக்கும். ரம்ப அதிகமாப் போகாமே சர்க்காருலேயும் கட்டுப்பாடு பண்ணிகிட்டு இருக்காங்க.''

''என்னங்க போங்க! சனங்களெல்லாம் சாப்பாடு இல்லாமே மடியுது. நாமெல்லா எப்படிப்பொளைக்கிற துங்கோ.''

இந்தச் சந்தர்ப்பத்தில் கோபாலசாமிக்கவுண்டர் மனைவி அங்கு வந்து கதவுப் பக்கம் நின்று எட்டிப்பார்த்தாள். கொஞ்சம் தொண்டையைக் கனைத்துக் கொண்டாள். கொஞ்சம் இருமினாள். பெண்ணைப் பெற்றவளுக்கல்லவா தெரியும், பெண்ணின் வருத்தம். பவளாத்தாள் பாவம் அங்கு அவர் வருகைக்காகக் காத்துக் கொண்டிருக்கிறாள். 'ஏதோ ஒரு நாளைக்கு வந்த ஆசாமியை இப்படிப் புடிச்சு உக்கார வைச்சுக் கிட்டாங்களே, நல்ல வேலெ' என்று நினைத்துக் கொண்டே எச்சரிக்கை செய்ய ஆரம்பித்தாள்.

ஆகையினாலே கோபாலசாமிக்கவுண்டர் மாப்பிள்ளையினுடைய உதவிக்கு இப்போது கைகொடுக்க வந்தார். மனைவியினுடைய எச்சரிக்கையை உணர்ந்து குறிப்பாக ஆரம்பித்தார். அவருக்கு உலக விவகாரங்கள் அவ்வளவாகத் தெரியாவிட்டாலும் பொதுவில் நல்ல சூட்டிப்புள்ளவர். சாமர்த்தியமாகப் பேசக் கூடியவர்.

"தம்பி நானு ஒண்ணு கேக்கறேஞ் சொல்லு?" என்று நாச்சியப்பனைப் பார்த்துக் கேட்டார்.

"கேளுங்க."

"சண்டை மூணு வருசமா நடக்குதா இல்லியா?"

"நடக்குதுங்க."

இதுதான் சமயமென்று மாப்பிள்ளை மெதுவாக எழுந்து நழுவப் பார்த்தார். நாச்சியப்ப கவுண்டர் அவர் கையைப் பிடித்துக்கொண்டு, "சித்தே இருங்கோ மாப்பிளே, போவலாம், உங்க கிட்டே இன்னம் சில சங்கதி கேக்க வேணும். எப்பவோ ஒரு நாளைக்கி வாறிங்க. இப்படி அவசரப் படறீங்களே" என்று உட்கார வைத்து விட்டார். சாக்குப் போக்குச் சொல்லி, தப்பித்துக்கொள்ள மாப்பிள்ளைக்குத் தைரிய

மும் வரவில்லை. அப்பாவி அப்படியே உட்கார்ந்து விட்டார்.

பவளாயா பங்களாவின் மாடியிலே மாப்பிள்ளைக்காகக் காத்துக்கொண்டிருந்தாள். கண்ணனின் வருகைக்காகக் காத்திருந்த ராதையைப் போலவும், அர்ஜுனன் வருகைக்காக ஏங்கி நின்ற சுபத்திரையைப் போலவும் அவளுடைய உள்ளம் தவித்துக் கொண்டிருந்தது. ஒவ்வொரு விநாடியும் அவளுக்கு யுகமாகப் பட்டது. ஒரு இடத்திலும் அமைதியாக இருக்க அவளால் முடியவில்லை. அங்கும் இங்கும் பரபரப்பாக நடந்து பார்த்தாள். அங்கு கிடந்த ஒரு நாவலை எடுத்துப் படித்துப் பார்த்தாள். ஒன்றிலும் அவள் மனம் நிலை கொள்ளவில்லை. பால் போன்ற வெண்ணிலாவைக் காணவும் அவளுக்குச் சகிக்க வில்லை. “உன்னுடைய இந்த ஒளி எதற்கு உபயோகம். என்னைப் போன்ற பெண்களை வருத்துவதற்காகவா? பெண்களின் உள்ளத்தைச் சோதிக்கவா உனக்கு இந்தப் பிரகாசம் கொடுக்கப் பட்டிருக்கிறது” என்றெல்லாம் கடிந்து கொள்ள ஆரம்பித்தாள். நந்தவனத்திலிருந்து அழகிய மலர்களின் வாசனையோடு கூடிய இனிமையான காற்றும் அவளுக்குச் சற்றும் பிடிக்க வில்லை. ஒரு பைத்தியக்காரியைப் போல ஆகிவிட்டாள். கூஜாவிலிருந்த பாலை எடுத்து ஒரு வாய் குடித்தாள். அதுவும் கசந்து விட்டதோ என்னவோ! உமிழ்ந்து விட்டாள். ஓடிப் போய்த் தன் புருஷனுடைய கையைப் பற்றி இழுத்து வரலாமா என்று ஒரு கணம் நினைத்தாள். அம்மாவோடு சொல்லி விட்டு வந்தோமே! அவளுக்குப் புத்தியில்லை. என்னைப்போல அவள் இருந்திருந்தால் அல்லவா அவளுக்குத் தெரியும். அடடா! இந்த நிலவுங்கூட நான் நிஜமாகவே திட்டுவதாக நினைத்துக் கொண்டு ஓடுகிறதே. என்ன அவசரமோ. அவசரமாக வரவேண்டி

யவரே இன்னும் வரவில்லையே! விடிந்தால் வண்டியைப் பூட்டிக் கொண்டு கிளம்பி விடுவாரே? இந்த ஒரு நாளே இப்படியாச்சே? இன்னும் எத்தனை நாள் காத்துக் கிடக்க என்று அவள் அங்கு புலம்பிக் கொண்டிருந் தாள்.

பேச்சு இங்கே நடக்கிறது:

"இது வரைக்கும் என்ன கொறைச்சல் சொல்லு பாக்கலாம்."

"நானு வந்து எனக்கா இப்போ சொல்லரே. ஏழை எழியவங்க எப்படி பொளைக்கறது அதைப் பத்தி......"

"ஆடு நனையுதுண்ணு ஓநாயி விக்கி விக்கி அழுத மாதிரியல்லவா இருக்குது சமாச்சாரம்."

"எப்படியுங்க என்னமோ கதையா மூடுமந்தரமா பேசறீங்க, தப்பு நம்ம கிட்ட இருக்குது."

"அது என்னுங்க தப்பு."

"இப்போ நாம எல்லாம் குடியானவங்க. ஏதோ பூமி, காணி நெறைய இருக்குது. நெலத்திலே விளை யுது. சாப்பிடறோம். நாலு பேரு ஏழைங்களும் நம்மை யண்டி பொளைக்குது. முன்னைப்போல நம்ப எல்லா ரும் தவச தானியம் வெள்ளாமை பண்ணறது இல்லை. வேர்க்கடலை, வாழை, கரும்பு, பருத்தி இந்த மாதிரி எல்லாருமே வெச்சு பண வெள்ளாமை ஆக்கிப் போட் டோம். தானிய வெள்ளாமை கொறைஞ்சு போச்சு."

"அதனாலே என்னுங்க. அந்தப் பணத்துக்குத் தானியம் வாங்கிக்கலாமே."

"இதுதா இருக்கிறதை விட்டு பறக்கிறதைப் புடி க்கிற சமாச்சாரம், எல்லாருமே இந்த மாதிரி செஞ் சாக்க தானியம் கிடைக்க வேணுமே."

"பின்னே என்னதான் பண்ணரது சொல்லுங்க."

"கால்காணி, அரைக்காணி இருக்கிரவனும் சரி, நெறைய நிலத்தை வெச்சிருக்கிறவனும் சரி, எல்லா

ருமே முடிஞ்ச மட்டும் தவசதானியம் வெள்ளாமை செஞ்சா இப்போ இந்தக்கதி வருமா?''

''தானியம் மட்டும் இருந்தாப் போதுமா?''

''வேறே என்ன வேணும். பருப்பு, மிளகாய், காய்கறி எல்லாம் இங்கியே உண்டு பண்ணலாமே.''

''சக்கரை, எண்ணே!''

''நம்ப பாட்டனெல்லாம் சக்கரையும் சீமை எண்ணேயும் கண்டுதா பொளேச்சாங்களா?''

''இந்த மனசு கேக்குதுங்களா? கேக்குது காப்பியும் சக்கரையும். எல்லாம் பழக்க வழக்கந்தானுங்கோ. கிராமமெல்லாம் இப்போ நல்ல நெலமையிலே இருந்தா இப்போ இந்த அரிசிப் பஞ்சம் காணுமா? கிராமத்துலே விளஞ்சுதுலே கொஞ்சம் டவுனுக்கும் அனுப்பலாமே. நமக்கு வேணுமுங்கற ரெண்டொரு முக்கியமான சாமானே டவுனுலே இருந்தும் வாங்கிக்கலாம். முன்னே எல்லாம் பண்டமாத்து நடந்ததே. அதெல்லாம் கேட்டு இருக்கறமே. தெரியாதா.''

''நீங்க சொல்லறது செரிதானுங்கோ''

''சிறுசிலே இருந்துதா் பெரிசு. கிராமம், தாலூகா, சில்லா இப்படி பெரிசாப் போகுதே. முதல்லே எது இருக்குது பாரு.''

''ஆமாங்க என்னென்னமோ புதுசு புதுசா சட்டமெல்லாம் போடருங்களாமே?''

''சட்டம், விட்டம் எல்லாம் போட்டுத்தான் ஆக வேணும். காரியம் நடக்க வேண்டாமா? சொல்லறது பெரிசு இல்லே அப்புனு. எல்லாம் காரியத்துலே பண்ணிப் பாக்கவேணும். உலகத்துக்கு ஆனது உனக்கும் ஆகுதுண்ணு குந்தியிட்டு இருந்தா நடக்குமா காரியம்! உலகத்தை ஆளரதும் சும்மா உக்காந்திட்டு அழுகரதும் ஒண்ணு தம்பி. என்னங்க மாப்புளே, அண்ணஞ்

சொன்னதை நீங்களும் கேட்டிங்களே உங்க மனசுக்கு எப்படிப் படுது" என்று மாப்பிள்ளையைத் திரும்பிப் பார்த்தார். மாப்பிள்ளை தூங்கி விழுந்து கொண்டிருந்தார்.

"அடப் பாவமே. மாப்புளே தூங்கருரு."

"ஆமா, தம்பி அவரு ஊருலே இருந்து சலிச்சு வந்திருப்பாரு. பாவம் அவரை எதுக்கு தொந்தரவு பண்ண வேணும். போய்த் தூங்கு போங்க" என்று கோபாலசாமிக் கவுண்டர் எழுந்தார்.

நாச்சியப்ப கவுண்டரும் அரை மனசோடு, "மாப்புளே, போயிட்டு வாரனுங்க" என்று கிளம்பினார்.

மாப்பிள்ளை தங்கவேலுக் கவுண்டருக்கு உண்மையான தூக்கம் இருந்தால் தானே? அவருடைய மனமெல்லாம் பவளக்காளைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தது. இதுவரை அவர்கள் என்ன பேசினார்கள் என்பதே அவருக்குத் தெரியாது. "போயிட்டு வாரனுங்கோ" என்ற வார்த்தைகள் மட்டும் காதில் விழுந்தன. அப்போதுதான் மாப்பிள்ளைக்கு உணர்ச்சி வந்தது. அடுத்த கணம் அவர் பவளத்தின் எதிரில் வந்து நின்றார். அவளுக்கு வந்த துக்கமும், கோபமும் சொல்லி முடியாது. "பொழுது விடியப்போகுது, போயி வண்டியெப் பூட்டுங்க ஊருக்குப்போக" என்றாள் ஆத்திரத்தோடு.

"அப்புறம் என்ன?"............

"அநியாயமா, நெலாக் காஞ்ச ஒரு நல்ல ராத்திரி போச்சே?"

"வீணாப் போகுலே பொழுது சாயுட்டும்!"

வாஸ்தவம். அன்றைய இரவு நம்மால் வர்ணிக்க முடியாத வனப்புடன் நிகழ்ந்தது. பெண்ணுக்காக இயற்கைப் பெண்ணே இரங்கினாள் போலும்!

சுந்தரி

குமாரபுரம் மிராசுதார் செல்வ ராஜ முதலியாருக்கு சுந்தரம் ஏக புத்திரன். பி. ஏ. படித்து பாஸ் செய்திருந்தான். பையன் மேலும் பி. எல். படித்து வக்கீலாக வரவேண்டும் என்று தகப்பனுருக்கு ஆசை. ஆனல் சுந்தரம் மேற் கொண்டு படிப்பதில்லை யென்று ஒரேயடியாக மறுத்து விட்டான்.

"சுந்தரம், நீ படித்து வக்கீலாக வரவேண்டும் என்று எனக்கு எத்தனை ஆசை தெரியுமா? என் ஆசையை ஏண்டா கெடுக்கிருய்?" என்று முதலியார் மன்ருடினூர்.

"அப்பா, இப்போது உள்ள செல்வம் போதாதா? வக்கீல் தொழில் செய்து இன்னும் ஏராளமாக நான் வேறு சம்பாதிக்க வேண்டுமோ?"

"சுந்தரம், நீ சம்பாதித்தாலும் சரி. சம்பாதிக்கா விட்டாலும் சரி. அல்லது இப்போது உள்ள செல்வத்தையே அழித்து விட்டாலும் சரி, என்னுடைய பிள்ளை பெரிய வக்கீல் என்று சொல்லும்படியாக இருந்தால் போதும். அதுதான் நான் உன்னைக் கேட்பது."

"அப்பா, அது முடியாத காரியம். உள்ள செல்வம் போதும். நான் படிக்கவும் வேண்டாம். வக்கீலாகவும் வேண்டாம். என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்" என்று சொல்லி விட்டான்.

"சரி, உன் இஷ்டம்போல் செய். என் ஆசையைப் பாழாக்கிறுய். அவ்வளவு தானே" என்று சொல்லி முதலியார் வருத்தப் பட்டார்.

படிப்பு முடிந்து சுந்தரம் ஊருக்கு வந்ததிலிருந்து அதிகமாக வீட்டில் தங்குவதே இல்லை. ஒருவரிடமும்

அதிகமாகப் பேசுவதும் இல்லை. ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு வயலை நோக்கிக் கிளம்பி விடுவான். அமராவதி ஆற்றங் கரையிலே அழகானதொரு தோப்பு. ஆற்றின் இரு கரைகளிலும் எங்கு பார்த்தாலும் பரந்த வயல் வெளிகள். மத்தியில் அமராவதி சாந்தமாக ஓடிக் கொண்டிருந்தது. சுந்தரம் ஆற்றோரமுள்ள ஒரு மாமரத்தின் அடியில் திட்டின் மேல் வழக்கமாக உட்கார்ந்து கொள்வான். கொஞ்ச நேரம் படிப்பான். கொஞ்ச நேரம் சுற்றிலும் உள்ள இயற்கை காட்சிகளைக் கண் கொட்டாமல் பார்ப்பான். பறவைகள், ஆணும் பெண்ணுமாக மரங்களில் கொஞ்சி விளையாடுவதைக் கவனிப்பான். தூரத்தில் குடியானவன் நிலத்தைப் பரம்படிப்பதைப் பார்ப்பான். ஒரு பக்கத்தில் பெண்கள் நாற்று நடவு செய்து கொண்டிருப்பதைக் கவனிப்பான். அவர்கள் கவலையற்ற வாழ்க்கையும் கேளிக்கைகளும் சுந்தரத்தின் மனதைக் கவர்வதாயில்லை. ஏன்? அவனுடைய மனதில் ஏதோ கவலை நிறைந்திருந்தது. பெயருக்கேற்ற அழகும் கல்வியும் செல்வமும் நிரம்பிய இந்த இளைஞனுக்கு கவலை என்ன வந்தது? கொஞ்சம் விவரிக்கலாம்.

அப்போது சுந்தரம் சென்னையில் பி. ஏ. இரண்டாவது வருஷம் படித்துக் கொண்டிருந்தான். அவனோடு அவன் நண்பன் சந்திரனும் இருந்தான். இருவரும் ஒரு வீட்டின் மாடியில் ஜாகை வைத்துக் கொண்டிருந்தார்கள். சந்திரனும், சுந்தரமும் மனமொத்த நண்பர்கள். சாப்பிடுவது, கலாசாலைக்குப் போவது, உலாவுவது, உறங்குவது எல்லாம் ஒன்றாகத் தான். இரட்டையர்கள் போல இரண்டு பேரும் சேர்ந்தே இருப்பார்கள். ஒரு வருஷமல்ல கடந்த நாலு வருஷங்களாக அப்படித்தான் இருந்தார்கள். திடீரென்று

பெண்கள் கலாசாலையில் படிக்கும் ஒரு யுவதி எதிர் வீட்டு மாடிக்குக் குடி வந்து சேர்ந்தாள். அவளோடு அவளுக்குத் துணையாக யாரோ இரண்டு பெரியவர்களும் இருந்தார்கள். இவர்களும் மாடியில் இருந்தபடியால் அடிக்கடி இவர்களுடைய கண்களும், அந்த யுவதியின் கண்களும் அந்த மாடிக்கும் இந்த மாடிக்கும் ஆக நொடிக்கு நூறு மைல் வேகத்தில் சஞ்சாரம் செய்து கொண்டிருந்தன. ஏதோ விளையாட்டுக்காகவும் வேடிக்கைக்காகவும் அந்தப் பக்கம் பார்ப்பதும் கேலி செய்வதுமாக இருந்தார்கள்.

ஆனால் அந்தப் பெண்ணின் கரிய விழிகள், குறுகுறுப்பான பார்வை, சுருண்ட கூந்தல், நடை உடை பாவனைகள் யாவும் சுந்தரத்தின் இதயத்தில் இடம் பெற்று விட்டன. அந்தப் பெண் விரும்பினால் அவளையே கலியாணம் செய்து கொள்ள வேண்டும் அல்லது பிரமசாரியாகவே இருந்து விட வேண்டும் என்ற உறுதியான எண்ணம் அவன் மனதில் வளர்ந்து வந்தது. சந்திரன் இந்த விஷயத்தில் எல்லாம் இவ்வளவு சிரத்தை கொள்வது கிடையாது. காதல்—கீதல் என்னடா அது என்று கிண்டல் செய்வான். இருந்தாலும் எதிர் வீட்டுப் பெண் மாடியில் நிற்கும் போது அவனை அறியாமலே எதிர்ப் பக்கம் பார்ப்பான். சுந்தரம் கவனிக்கும் போது 'காட்சி கண் காட்சியே' என்றும் பாடுவான், அலட்சியமாகவும் வேடிக்கையாகவும்.

பரீட்சைக் காலம். ஒரு ஞாயிற்றுக்கிழமை. சுந்தரத்துக்கு உடம்பு சௌகரியமில்லை. அறைக்குள்ளேயே போர்வையை எடுத்து உடம்பை மூடிக்கொண்டு நாற்காலியில் சாய்ந்த வண்ணம் படித்துக் கொண்டிருந்தான். சுந்திரம் மாடி வராந்தாவில் நாற்காலியைப் போட்டு உட்கார்ந்து படித்துக் கொண்

டிருந்தான். அவனுடைய கண் நாலு வரிக்கு ஒரு தடவை எதிர் வீட்டு மாடிக்குப் போய் எதையோ தேடிவிட்டு வரும்.

ஒரு ஐந்து நிமிஷத்தில் ஒரு சிறு பெண், வேகமாக இவர்கள் அறைக்குள் நுழைந்தாள். அவள் மேலும் போக விரும்பினுள். ஆனுல் நாற்காலியில் சுந்தரத்தைக் கண்ட உடனே அவனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து விட்டுப் பறந்து விட்டாள். சுந்தரம் கடிதத்தைப் பிரித்தான். மேலும் கீழும் பார்த்தான். "சுந்தரி" என முத்து முத்தான எழுத்தில் கையெழுத்தும இருந்தது.

கடிதத்தை இரண்டு தடவை படித்தான். வராந்தாவை எட்டிப் பார்த்தான். வராந்தாவிலிருந்து சந்திரன் எதிர் வீட்டை நோக்கியபடி இருந்தான். இந்தக் கடிதத்தை என் கையில் கொடுப்பானேன்.? சரிதான். நான் குறுக்கே இருக்கிறேனு, சரி சரி, விஷயம் விளங்கி விட்டது. சந்திரன் முதலில் காதல் கதைகள் சொல்லிக் கொண்டிருந்தான். அதைப் பாட்டாகவும் பாடிக் கொண்டிருந்தான். இப்போது கதை நடத்தவும் ஆரம்பித்து விட்டானு? எப்போதும் இந்தப் பெண் சமூகம் இப்படித் தானே? போகட்டும். நண்பனுவது அனுபவிக்கட்டும். மனித வாழ்க்கையில் எது பிரதானமோ அது கைகூடவில்லே. இனி கலியாணமே வேண்டாம் என்று தீர்மானித்து விட்டான். சந்திரனிடம் கடித விஷயத்தைத் தெரிவிக்க வில்லே. பரீட்சை எழுதி முடியும் வரை வெளி வராந்தாவுக்கே செல்ல வில்லே. ஆனுல் அவளுடைய உருவம் மட்டும் மனதை விட்டு அகலவில்லே. ஊருக்குப் புறப்படும் போது கூட சந்திரனிடம் இது விஷயமாக ஒன்றும் பேசவில்லே. தன்னே அறியாமலே பொருமையும் வளர்ந்திருந்தது.

ஊருக்கு வந்த பின்னும் அந்தப்பெண்ணைப் பற்றிய ஞாபகம் அடிக்கடி வந்துகொண்டுதானிருந்தது. அவள் தனக்குக் கிடைக்கவில்லையே என்ற ஏக்கம். அதோடு பெண்களிடம் ஒரு வெறுப்பும் வளர்ந்து வந்தது. எதிலும் சிரத்தையில்லாத ஒரு உன்மத்தன் போல ஆகிவிட்டான். அதனால்தான் மேற்கொண்டு படிக்கவும் மறுத்துவிட்டான். யாரிடமும் முன்போல 'கலகல'ப்பாகப் பேசுவதுமில்லை, பழகுவதுமில்லை. உட்கார்ந்தால் உட்கார்ந்த இடத்தில் தான். சாப்பாட்டுக்கும் கூட யாராவது வந்து ஞாபகமூட்டவேண்டும்.

சின்ன எசமானனுக்கு என்ன 'புத்தி' ஒரு மாதிரி ஆகிவிட்டதே' என்று வீட்டைச் சேர்ந்த சிப்பந்திகள் சேதி பரவ விட்டார்கள். ஊரெல்லாம் அதே பேச்சுத்தான். தாய் தந்தையர் காதுகளுக்கும் ஊரார் பேச்சுக்கள் எட்டாமலில்லை. ஜாதகம் பார்த்தார்கள். கோவில் பூஜைகள் நடத்தினார்கள். கல்யாணம் செய்துவிட்டால் எல்லாம் திருந்திவிடும் என்ற முடிவுக்கு வந்தார்கள். "படிக்காவிட்டால்தான் போகிறது; நல்ல இடங்களில் அழகான பெண்கள் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று தாயும் தந்தையும் தங்களால் இயன்றவரை சொல்லிவிட்டார்கள். "எனக்குக் கலியாணமே வேண்டாம்" என்ற ஒரே பதில்தான் கிடைத்தது.

சுந்தரம் நாளுக்கு நாள் மெலிந்து உன்மத்தனாக தன்னந்தனியே வயல் வெளிகளில் சஞ்சாரம் செய்து கொண்டிருந்தான். பெற்றோருக்கோ அளவிட முடியாத வருத்தம்.

இந்த விவகாரம் தாயாரை விசனத்திலிருந்து வியாதிக்குக் கொண்டு போய் படுக்கையில் கிடத்திவிட்டது. அவளுடைய நிலை அடிக்கடி மோசமடைந்து வந்தது. சுந்தரத்துக்கு தாயாரிடம் அளவு கடந்த அன்பும் மரி

யாதையும் உண்டு. அவனே நல்ல டாக்டராக அழைத்துவந்து கவனிக்கச்செய்தான். தாயாருக்குப் பக்கத்திலிருந்து வேண்டிய ஓத்தாசைகளும் செய்தான். மனவியாதிக்கு மருந்து ஏது? தாய் சொன்னுள்: 'சுந்தரம் இந்த மருந்தெல்லாம் என் வியாதியைத் தீர்க்காது. உன்னுல்தான் குணமாக வேண்டும்' என்று.

''அம்மா, நான்தான் உன் பக்கத்திலேயே இருக்கிறேனே. உனக்கு வேண்டியதெல்லாம் செய்கிறேன்''

''சுந்தரம் அது அல்ல நான் விரும்புவது. நான் சாகிறதற்குள் என் ஆசை பூர்த்தியாக வேண்டும். வீண் பிடிவாதம் செய்யாதே. கலியாணம் செய்து கொள்வதாகச் சொல்லு. அதுவே என் வியாதியைப் போக்கும்'' என்று கண்ணீர் உகுத்து கல்லும் கனியும்படி கெஞ்சினுள்.

சுந்தரம் யோசித்தான். அவனுக்கே ஒன்றும் புரியவில்லை. அந்தச் சுந்தரியின் உருவம் அவனை ஏளனம் செய்வது போல இருந்தது. ஒரு நாள் இரண்டு நாள், ஒரு வாரம் தன் மனத்தோடு போராடினுன். கடைசியில் அம்மாவுக்காக கலியாணம் செய்து விடுவது என்று தீர்மானித்தான். எப்படியாவது அம்மாள் பிழைத்தெழுந்தால் போதும்.

''அம்மா, உனக்காகத்தான் இப்போது கலியாணம் செய்து கொள்கிறேன், உன் மருமகள் யாராயிருந்தாலும் சரி, அதுவும் கூன், குருடு செவிடாக இருந்து விட்டாலும் சரி. ஆனுல் என் ஜோலிக்கே அவள் வரக்கூடாது. இது சத்தியம்'' இந்த நிபந்தனையின் பேரில் கலியாணம் செய்துகொள்ள இசைந்தான். தாயாருக்கு ஒருவாறு மன ஆறுதல் ஏற்பட்டது. எப்படியாவது மருமகள் வந்த பின் பையன் தானுகத் திருந்தி விடுவான்.

என்ற நம்பிக்கை பிறந்தது. அவளுக்கு உடம்பும் குணம் அடைந்தது.

கலியாணத்திற்கு எல்லா ஏற்பாடுகளும் தடபுடலாக நடந்தன. தகப்பனாரும் பையன் இவ்வளவாவது திருந்தினானே என்ற உற்சாகத்தில் பணத்தை வாரி இறைத்தார். பெண்ணையும் ஊருக்கே கொண்டுவந்து கல்யாணம் நடத்துவது என்ற முடிவு செய்யப்பட்டது. எங்கே அங்கும் இங்கும் போக வேண்டிய சமயங்களில் மத்தியில் 'கிறுக்கு' செய்துவிடுவானோ என்ற பயத்தினால்தான். இந்தக் கலியாணம் 'வேண்டாக் கலியாணம்' ஆகையால் தன் நண்பர்களுக்குக் கூட சுந்தரம் கடிதம் எழுதவில்லை.

கலியாணம் சிறப்பாகத்தான் நடந்தது. விருந்தும், வேடிக்கையும் பலமாகத்தான் இருந்தது. அதைவிட மாப்பிள்ளை கண்ணை மூடிக்கொண்டு, பெண்ணின் முகத்தைப் பார்க்கக் கூடாது என்ற வைராக்கியத்தில், வேதியர் ஓதிக் கொடுத்த தாலியை மற்றவர்களுடைய உதவியால் நெரண்டிக் கொண்டே கட்டி முடித்தான். கலியாணத்துக்கு வந்திருந்த எல்லோருக்கும் இதுதான் வேடிக்கையாக இருந்தது. பரிகாசம் கூடச் செய்தார்கள்.

அவ்வளவுதான், தன் பொறுப்பு முடிந்து விட்டது. அம்மாவையும் அப்பாவையும் திருப்தி செய்தாகி விட்டது என்று எண்ணிக் கொண்டான். பழையபடி மாமூல் விவகாரத்தில் இறங்கி விட்டான்.

கலியாணத்துக்குப் பின் பெண்ணும் அங்கேயே தங்கிவிட்டாள். "கொஞ்ச நாளைக்கு அவனிடம் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். அவனாக உன்னைக் கவனிக்கும் போது பேச வேண்டும். அதற்கு முன் அவன் எதிரிலும் செல்லாதே" என்று மாமியார் மருமகளுக்கு உபதேசம் செய்திருந்தாள். ஆகையால்

அவளும் தன் அறையே கதி என்றிருந்தாள். சுந்தரத்தின் எதிரிலேயே அவள் வருவதில்லை. ஒரு மாதத்திற்குப் பிறகு சதிபதிகளுக்குள் சமரசம் ஏற்படுத்த தாயார் முயற்சி செய்தாள்.

"என்னப்பா, சுந்தரம், ஒரு பெண்ணைக் கொண்டு வந்து வீட்டில் வைத்துக் கொண்டு, அவளிடம் பேச்சு வார்த்தை யாவது வேண்டாமா?" என கேட்டாள்.

"நல்ல வேலை. முதலில் கலியாணம் செய்து கொள்ளும்படி சொன்னீர்கள். உங்களுக்காகச் செய்து கொண்டேன். அதுவும் நிபந்தனையின் பேரில்! நீங்கள் வேண்டுமானால் இஷ்டம் போல் மருமகளிடம் பேசிக் கொண்டிருங்கள். என் காதில் இந்த விஷயங்களெல்லாம் விழக்கூடாது" என்று தீர்மானமாக சொல்லி விட்டான்.

மருமகள் இந்தச் சங்கதியைக்கேட்டு பயந்தே போனாள். என்னடா கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதையாக இருக்கிறதே. இந்த மாப்பிள்ளையைத் தான் கட்டிக்கொள்வேன் என்று அப்பாவிடம் ஒரே பிடிவாதம் செய்தேனே? இவரையே கல்யாணம் செய்துகொள்வது இல்லா விட்டால் உயிரை விடுவது என்று முடிவு செய்திருந்தேன்! அப்பாவும் வேண்டா வெறுப்பாய் என் விருப்பப்படி 'பைத்தியத்திடம்' உன்னை ஒப்படைக்கிறேன் என்று கண்ணீர் விட்டாரே.

மாப்பிள்ளை ஒரே முறுக்காய் முறுக்குகிருரே. அத்தை குறுக்கில்லா விட்டால் நானே கேட்டுவிடுவேன். அதற்கும் ஒரு நாள் வரும் என்று தன்னைத் தான் தேற்றிக் கொண்டாள்.

அன்று முதலியாரும் அவர் மனைவியும் ஒரு விசேஷத்துக்காக அயலூர் போக வேண்டியிருந்தது. சுந்தரத்தை உத்தேசித்து முதலில் யாராவது ஒருவர் போவது என்று தீர்மானித்தார்கள். மறுபடியும் முக்

கியத்தைக் கருதி இரண்டு பேரும் போய் விட்டு நாலு நாள் காரியத்தை இரண்டே நாளில் முடித்துக் கொண்டு வருவது என்று தீர்மானித்துக் கொண்டு கிளம்பினார்கள். அத்தை போகும்போதே மருமகளிடம் "ரொம்ப ஜாக்கிரதை. அந்தக் "கிறுக்கு" உன்னை விரட்டினாலும் விரட்டி விடும்" என்று சொல்லிப் போனாள். மருமகளும் சரி யென்று ஒப்புக்கொண டாள். ஆனாலும் அத்தைக்கு திருப்திப்படவில்லை. வீட்டிலுள்ள அத்தனை வேலைக்காரர்களிடமும் தனியாக காரியஸ்தரிடமும் சின்ன எஜமானனை கவனித்துக் கொள்ளும் விஷயமாக நீண்ட பிரசங்கம் செய்து விட்டுப்போனாள்.

அத்தையும், மாமனாரும் வீட்டை விட்டுப் புறப் பட்ட அரைமணி நேரத்துக்கெல்லாம் மருமகள் தன்னை நன்ருக அலங்காரம் செய்துகொண்டாள். கண்ணாடி யின் முன்னின்று ஒரு மணி நேரம் தன்னைச் சரி செய்து கொண்டாள்.

வீட்டிலுள்ளவர்கள் எல்லோரும் இதை கவனித் தார்கள். என்ன நடக்கப் போகிறதோ என்று எல் லோருக்கும் பயம். சின்ன எஜமானி அவர்களுக் கெல் லாம் தைரியம் சொல்லி விட்டு, "இன்று என் வாழ்க் கையின் முடிவை அதாவது 'இருப்பதா இறப்பதா' என்பதை நிர்ணயித்து விடுகிறேன்" என்று எண்ணிக் கொண்டே 'விர்' என்று சுந்தரத்தின் அறையை நோக் கிச் சென்ருள். கதவுக்குப் பக்கத்தில் போனதும் சற்று தயங்கினாள். கதவு லேசாக மூடப் பட்டிருந்தது. கொஞ்சம் மனதை திடப்படுத்திக் கொண்டு, தைரிய மாக கதவைத் தள்ளிக் கொண்டு உள்ப் பக்கம் ஓரடி எடுத்து வைத்தாள்.

சுந்தரம் நாற்காலியில் சாய்ந்த வண்ணம் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான். திடீரென கதவு திற

க்கப்பட்டதும் அந்த திசையில் திரும்பிப் பார்த்தான். எதிர்பாராத இந்த திடீர்த் தாக்குதல் அவனையே அதிரச் செய்தது. அவனுடைய கண்கள் ஆச்சரியத்தால் இமை கொட்டாமல் பார்த்தன! அவனுடைய வாய் 'யார்' என்று கேட்டது.

"யாரா? நன்றாயிருக்கிறது; நேற்று கை தொட்டு தாலிகட்டிய பெண்டாட்டியை யாரென்று கேட்கும் லட்சணம்"

"நானா? உன்னையா? யார் சொன்னது. சந்திரனல்லவா உன்னைக் கட்டிக் கொண்டிருக்க வேண்டும். அவன் வந்திருக்கிறானா?"

"பேஷ்! ஏதோ கால் பைத்தியம் என்று எண்ணியிருந்தேன். இப்போது முழுப் பைத்தியம் என்று தெரிகிறது, இந்திரனும் சந்திரனும்"

"என்னோடிருந்தானே அந்த நண்பனைத்தான் சொல்கிறேன், அவனைத்தானே காதலித்தாய்"

"அதென்ன கதை?"

"கதையா?" என்று சொல்லிக் கொண்டே தன் பெட்டியிலிருந்து ஒரு கடுதாசித் துண்டை எடுத்து வந்து மரியாதையாக நீட்டி, "இது தாங்கள் எழுதியது தானே?" என்று கேட்டான்.

"ஆமாம்" என்றாள் புதுப் பெண்.

"பின்னே?"

"இன்னொரு தரம் படித்துப் பாருங்கள்"

சுந்தரம் உரக்கவே படித்தான்:

அன்புள்ள சகோதரரே,

"நான் தங்கள் நண்பரைக் காதலிக்கிறேன். உங்களுக்கிடையே வித்தியாசம் ஏற்படக்கூடாது என்பதற்காக முன் கூட்டியே அறிவித்து விடுகிறேன்.

தங்கள் பிரிய சகோதரி
சுந்தரி

அன்று உங்கள் நண்பர் மட்டும் வராந்தாவில் உட்கார்ந்துகொண்டு அடிக்கடி எங்கள் வீட்டுப் பக்கம் பார்த்துக்கொண்டிருந்தார். நீங்கள் இல்லைப்போல் இருந்தது. நான் உங்களைக் காதலிக்கும் விஷயத்தை அவருக்குத் தெரிவித்து விட்டால் அவர் அடிக்கடி பார்ப்பதை நிறுத்துவார் என்பதற்காக அவருக்கு அனுப்பினேன். நீங்கள் மத்தியில் இருந்து வாங்கிக் கொள்வீர்கள் என்பதை நான் கனவிலும் கருதவில்லை. அந்தப் பெண்ணையும் விசாரித்துத் தெரிந்து கொள்ளவுமில்லை.

"பிறகு"

"கட்டிய பெண்டாட்டியை உங்களுக்கு அடையாளம் தெரியவில்லை"

"ஐயோ சுந்தரி!"

"சரி, போதும். என்னையும் பைத்தியமாக அடித்து விடாதீர்கள். உங்கள் நண்பரைக்கூட கலியாணத்திற்கு அழைப்பதாகச் சொல்லியிருந்தேன்."

"இப்போதே தந்தி அனுப்புகிறேன்."

காரியஸ்தரைக் கூப்பிட்டு உடனே தந்தி எழுதி அனுப்பினான்.

காரியஸ்தன் அதோடு இன்னொரு நீண்ட தந்தியும் பெரிய எஜமானருக்கு அனுப்பினான்: "நீங்கள் இரண்டு தினங்களில் திரும்ப வேண்டிய அவசியமில்லை. இரண்டு மாதங்கள் வேண்டுமானாலும் இருந்து விட்டு வாருங்கள்!"

புதுமலர் நிலைய வெளியீடுகள்

நாகம்மாள்

(இரண்டாம் பதிப்பு)

ஆர். ஷண்முகசுந்தரம்

அருணோதயம்

(கவிதைகள்)

கவி. கம்பதாசன்

விபரங்களுக்கு

அமுதப் பதிப்பகம்

அவிநாசி ரோடு, கோயமுத்தூர்

...துமலர் நிலைய வெளியீடுகள்

சரத்சந்திரர் எழுதியது

ஜமீந்தாரணி	0–12–0
கர்வ பங்கம்	0–12–0

டி. கே. சி.

அற்புத ரசம்	0–6–0

ஆர். ஷண்முகசுந்தரம்

பூவும் பிஞ்சும் (நாவல்)	2–8–0
நந்தா விளக்கு (சிறு கதைகள்)	2–0–0

விற்பனை உரிமையாளர்

கிராம ஊழியன் பிரஸ் லிமிடெட்

துறையூர், திருச்சி ஜில்லா